Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - 30 ரூபா    செய்தி: 021 493 0000    விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35    கதிர் : 110    பங்குனி 05ஆம் நாள் புதன்கிழமை    18 மார்ச் 2020    வள்ளுவர் ஆண்டு 2051

## நாட்டை முடக்கமாட்டேன்

### ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 18

பொருளாதாரம், சமூக ரீதியில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு எவரும் பின்னர் பொறுப்புக் கூற 25

## கடன்களை அறவிடாதீர்

### ஜனாதிபதி உத்தரவு

### பருப்பு, ரின் மீன் விலைக்குறைப்பு

கொழும்பு, மார்ச் 18

வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள், மக்களுக்கு வழங்கியுள்ள கடன்களை மீள அறவிடும் 25

## 86 ரயில் சேவைகள் 3 நாள்களுக்கு ரத்து

கொழும்பு, மார்ச் 18

'கொரோனா'வின் தீவிரத்தையடுத்து அரசு விசேட பொது விடுமுறை வழங்கியதைத் தொடர்ந்து, சில ரயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. 25




## வாகன வரி நிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

மோட்டார் வாகனங்களுக்கான வரி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சி.சுஜீவா இந்த அறிவித்தலை நேற்று விடுத் 06

# 43 கொரோனா உக்கிரம்

## நேற்று மட்டும் 15 பேர் பாதிப்பு; 2,250 பேர் கண்காணிப்பில்

கொழும்பு, மார்ச் 18

உலகத்தை அச்சுறுத்திவரும் உயிர்க்கொல்லி நோயான 'கொரோனா' வைரஸால் இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 43 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது. நோய்த் தாக்கத்துக்குட்பட்டவர்கள் என்று நேற்று மட்டும் 15 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் நேற்றிரவு விடுத்த அறிக்கையில் திணைக்களம் தெரிவித்தது. 25

## கைதிகளை பார்க்கத் தடை

கொழும்பு, மார்ச் 18

சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளைப் பார்வையிடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இன்று தொடக்கம் இரண்டு வாரங்களுக்கு இந்தத் தடை நடைமுறையில் இருக்கும் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது. 06

## யாழில் இதுவரை 'கொரோனா இல்லை'

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாணத்தில் 'கொரோனா' தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் இருவர் சேர்க்கப்பட் 25

## வடக்கில் 2 வாரங்கள் கொரோனா அவதானிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

வடக்கு மாகாணத்தில் அடுத்துவரும் இரண்டு வாரங்களையும் 'கொரோனா' வைரஸ் அவதானத்துக்குரிய வாரங்களாக வடக்கு மாகாண ஆளுநர் பிரகடனப்படுத்தியுள்ளார். வடக்கில் 06

## மக்களை முடக்கி தேர்தல் நடத்துவது சரியானதல்ல

### சம்பந்தன் மீண்டும் இடித்துரைப்பு

கொழும்பு, மார்ச் 18

'கொரோனா' என்ற கொடிய வைரஸ் நோயால் இன்று முழு உலகமும் பேராபத்தைச் சந்தித்துள்ளது. மக்கள் தங்கள் உயிர்களைக் கையில் பிடித்தவாறு 06



கடைசி நேரத்தில் அதிரடித் திருப்பம்

## அம்பிகா 'அவுட்' ஆனல்ட் உள்ளே!

### உறுதிப்படுத்தினார் மாவை

கொழும்பு, மார்ச் 18

இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் தெரிவில் வடக்கின் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பெரும் இழுபறி நிலவி வந்த நிலையில், அது தற்போது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. 25



## யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில்

### ஆளும் கட்சி 3ஆக உடைந்து போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 18

கோத்தாபய அரசுக்கு ஆதரவளிக்கும் பங்காளிக் கட்சிகள் மூன் 06

### ரணில், சஜித் அணிகளும் இரண்டாகப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 18

ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாகப் பிளவுபட்டுள்ள நிலையில் இரு அணிகளும் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட் 25

### ஏழு கட்சிகள் இன்று வேட்புமனு

யாழ்ப்பாணம், மார்ச் 18

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் முக்கிய அரசியல் கட்சிகள் ஏழும் இரண்டு 25

# நோயாளர்களை பார்க்க ஒருவர் மட்டும் செல்லவும்

## வட மாகாண சுகாதாரப் பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 18

**வ**டக்கு மாகாண மருத்துவமனைகளில் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு ஒருவர் மாத்திரம் செல்ல வேண்டும். ஏனையவர்கள் செல்வதைத் தவிர்க்கவும் என்று மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் ஆர். கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. இதற்கு அரசாங்கம் பல்வேறு முன் ஏற்பாடுகளை செய்து வருகிறது. இந்த நிலையில் சுகாதாரப்பிரிவினர் பல்வேறு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

மருத்துவமனைகளுக்கு நோயாளர்களைப் பார்வையிடச் செல்வதற்கு ஒருவர் மட்டும் செல்ல வேண்டும். இயன்ற வரை பலர் செல்வதைத் தவிர்க்க வேண்டும். பொது இடங்கள் மற்றும் அரச அலுவலகங்களில் கை கழுவுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன. அலுவலர்கள் அல்லது சேவையைப் பெற்றுக்கொள்ளச் செல்பவர்கள் அங்கு கைகளைக் கழுவ வேண்டும். இரண்டு மணித்தியாலங்களுக்கு ஒரு முறை கைகளைக் கழுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தனியார் மற்றும் அரச பஸ்களை சேவை முடிந்த பின்னர் இரவு வேளை தொற்று நீக்கியைப் பயன்படுத்திக் கழுவுவதற்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பயணிகள் தனியார் விருந்தினர் விடுதியில் தங்கினாலும், அவர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும். இதற்கு விடுதி உரிமையாளர்கள் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும். இது தொடர்பான விளைவுகளுக்கு விடுதி உரிமையாளர் பதில் கூற வேண்டும். வெளிநாட்டில் இருந்து வந்து உறவுகளுடன் வசிப்பதற்கு வருகை தருபவர்கள் கண்காணிப்புக்கு நடவடிக்கைக்கு ஒத்துழைக்க வேண்டும். 14 நாள்கள் கண்காணிப்பின் பின்னர் அதற்கான சான்றிதழ் வழங்கப்படும்.

அதேவேளை அடுத்து வரும் இரண்டு வாரங்களுக்கு நாம் எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு மக்கள் ஒத்துழைத்தால் இந்தத் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும் - என்றார்.

(க7,111)

# குறிசொன்ன இந்தியர்கள் முல்லைத்தீவில் சிக்கினர்

முல்லைத்தீவு, மார்ச்.18

சாஸ்திரம், மற்றும், வியாபார நடவடிக்கைகளில், ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில், இந்தியர்கள் ஐந்து பேர் முல்லைத் தீவில் நேற்று கைது செய்யப்பட்டனர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சுற்றுலா விசாவில் வந்து, முல்லைத்தீவு மற்றும் குமுழமுனை பிரதேசங்களில் சாத்திரம் மற்றும் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில், 5 இந்தியர்கள் நேற்று கைது செய்யப்பட்டனர். அவர்கள் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதியின் வாசல் தலத்தில் முல்லைத்தீவு பொலிசாரால் முற்ப டுத்தப்பட்டனர். இந்தியர்கள் அனைவரையும், எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அவர்கள் அனைவரும் வவுனியா சிறைச்சாலைக்கு கொண்டு சென்று தடுத்து வைக்கப்பட்டனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் சுற்றுலா விசாமூலம் இலங்கைக்கு வருகை தந்த இந்தியர்கள், வியாபாரம் மற்றும் சாஸ்த்திரம் சொல்லும் நடவடிக்கையில் ஈடுபட்டன என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

(ப-19)

# கூட்டமைப்பு வேட்பாளர்கள் வேட்புமனுவில் கையெழுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில், போட்டியிடும் வேட்பாளர்கள் நேற்று மதியம் வேட்புமனுப் பத்திரத்தில் கையெழுத்திட்டனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமை அலுவலகம் மார்ட்டின் வீதியில் அமைந்துள்ளது. கட்சித் தலைவர் மாவை. சோ. சேனாதிராசா முன்னிலையில் வேட்புமனுவில் வேட்பாளர்கள் கையெழுத்திட்டனர்.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், சி. சிறிதரன், த. சித்தார்த்தன், பா. கஜதீபன், கு. சுரேன், திருமதி சசிகலா ரவிராஜ், இம்மானுவேல் ஆனல்ட் மற்றும் வே. தபேந்திரன் ஆகியோர் வேட்பாளர்களாக போட்டியிடுகின்றனர்.

அவர்களில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா, ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், பா. கஜதீபன், வே. தபேந்திரன், திருமதி சசிகலா ரவிராஜ், இம்மானுவேல் ஆனல்ட் ஆகியோர் கையொப்பமிட்டனர். ஏனைய வேட்பாளர்களான சி.சிறிதரன், த.சித்தார்த்தன், கு.சுரேன் ஆகியோர் கையெழுத்திடவில்லை. இவர்கள் இன்று கையெழுத்திடுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ,5)

# இலங்கை செல்லவிருந்த மூவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 18

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாகச் செல்லவிருந்த குற்றச்சாட்டில் இலங்கையைச் சேர்ந்த மூவர் ராமேஸ்வரம் பேருந்து நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தை சேர்ந்த ஒருவரும், யாழ்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரும், வவுனியா மாவட்டதைச் சேர்ந்த ஒருவருமே கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்திய விசாரணையின்போது, இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின்போது அகதிகளாக வந்தோம். தற்போது இலங்கையில் பிரச்சினை இல்லாமல் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளதாக உறவினர்கள் கூறினர். அதனால் இலங்கைக்குச் செல்லவிருந்தோம் என்று கூறியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்களிடம் இந்திய பணம், பாஸ்போர்ட், இலங்கை குடியுரிமை ஆவணங்கள் மற்றும் தமிழக வங்கி கணக்கு அட்டைகள்பறிமுதல்செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.(கு-105)

### நயினாதீவு, நெடுந்தீவுக்கு

# சுற்றுலாப் பயணிகள் யாத்திரிகர்களுக்குத் தடை

யாழ்ப்பாணம், மார்ச் 18

நாட்டில் தீவிரமாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக நயினாதீவு மற்றும் நெடுந்தீவுக்கு யாத்திரிகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கு தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணங்கள் மற்றும் யாத்திரைகளை இரண்டு வாரங்களுக்கு தற்காலிகமாக நிறுத்துமாறு அரசு அறிவித்திருந்தது.

இந்த நிலையில் நயினாதீவுக்கு யாத்திரிகர்களும், நெடுந்தீவுக்கு சுற்றுலாப் பயணிகளும் தொடர்ச்சியாக வருவதாக பிரதேச செயலர்களால் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு சுட்டிக்காட்டப்பட்டது. வெளிநாட்டவர்கள், தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் எனப் பலரும் தொடர்ந்தும் வருவதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தற்காலிகமாக தடை விதிக்க அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

(ஒ,5,105)

# குடும்பத் தலைவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

இளம் குடும்பத் தலைவர் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்டு மருத்துவமனையில் சேர்த்தபோதும் அவர் உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வயல்கரை வீதி ஒட்டுமடம் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், இதே இடத்தைச் சேர்ந்த சிறிசிவகுமார் சிவிதரன் (வயது - 25) என்பவரே உயிரிழந்தார். அவர் தூக்கில் தொங்கிய நிலையில் உறவினர்களால் மீட்கப்பட்டு யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் உயிரிழந்துவிட்டமை மருத்துவ பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் விசாரணை மேற்கொள்கின்றனர்.

(கு-27)

# வேட்புமனுக் கையளிப்பின்போது இருவருக்கு மாத்திரம் அனுமதி

கொழும்பு, மார்ச் 18

பொதுத் தேர்தலுக்கான வேட்புமனு கையளிக்கும்போது, வேட்புமனுவை கையளிக்கும் நபருடன் மேலதிகமாக ஒருவர் மாத்திரமே மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படுவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் இராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது பொதுமக்கள் ஒன்றுகூடலைத் தவிர்க்கும் வகையில் வேட்புமனு கையளிக்கும்போது பிரதிநிதிகள் மூவருக்கு மாத்திரம் அனுமதிவழங்க முடிவு செய்யப்பட்டிருந்தது.

ஆயினும் தற்போது இருவருக்கு மாத்திரம் அனுமதி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, மார்ச் மாதம் 17, 18 ஆகிய இரு தினங்களிலும் அலுவலக நேரங்களிலும் மார்ச் 19ஆம் திகதி காலை 8.30 தொடக்கம் நண்பகல் 12 மணி வரையில் கட்டுப்பணம் மற்றும் வேட்பு மனுக்களை கையளிக்க முடியும் எனவும் இதன்போது குறித்த நடைமுறையை பின்பற்றுமாறும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம)

# குளிர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம்,மார்ச் 18

யாழ்ப்பாணம் இளவாலை மணலடைப்பு ஸ்ரீ அன்னமகேஸ்வரர் ஆலய வருடாந்த குளிர்த்தி உற்சவம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும். சிவனுக்குரிய பூசைகள் நடைபெற்று மதியம் 12.30.மணியளவில் அன்னதானம் வழங்கப்படும் என்று ஆலய பரிபாலன சபையால் தெரிவிக்கப்பட்டது.

(ஜ-63)

*கொரோனா அச்சத்தால்*

# கைகளை கழுவுமாறு கூறிய மனைவியின் மீது தாக்குதல்

கொழும்பு, மார்ச் 18

வெளியே சென்று வந்த கணவன் வீட்டுக்குள் வரும் போது கையை கழுவிவிட்டு உள்ளே வரும்படி கூறிய மனைவி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவமொன்று நேற்றிரவு நடந்துள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள நபரொருவர் வெளியில் சென்று மீண்டும் தன்னுடைய வீட்டுக்குள் வந்துள்ளார். அவருடைய மனைவி கொரோனா தொற்று அதிகரிக்கிறது கைகளை கழுவும்படி அறிவுறுத்துதல்கள் வழங்கப்பட்டுள்ளன. நீங்களும் கைகளை கழுவிவிட்டுஉள்ளேவாருங்கள்என்று கூறியுள்ளார். அதைக் கேட்டு ஆத்திரம் அடைந்த கணவன் மனைவியைத் தாக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதலில் காயமடைந்த பெண் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளார். (எ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### இலங்கைப் பெண்கள் ஐவருக்கு சென்னையில் சர்வதேச சாதனைப் பெண்கள் விருது




சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இந்தியாவின் நந்தவனம் பவுண்டேசன் பல்துறைகளிலும் சாதித்துக் கொண்டிருக்கும் பெண்களை இனங்கண்டு கடந்த 08.03.2020 அன்று சென்னை சாலிக்கிராமத்திலுள்ள பிரசாத் மண்டபத்தில் இடம்பெற்ற 'சாதனைப் பெண்கள் 2020' எனும் விருதினை வழங்கி கௌரவித்துள்ளது.

இந்நிகழ்வில் ஒன்பது நாடுகளைச் சேர்ந்த இருபத்தி நான்கு பெண்கள் விருதினைப் பெற்றுக்கொண்டதுடன் இலங்கையைச் சேர்ந்த ஐந்து பெண்கள் விருதினைப் பெற்றுக்கொண்டனர். ஜீவராணி றஜிகுமார் (வடமாகாணம்), பாத்திமா ஸிமாரா அலி (கொழும்பு), பாத்திமா றிஸ்வானா (பண்டாரவளை), காயத்திரி யோசப் நகுலன் (மட்டக்களப்பு), புஸ்பராணி சந்தியா (கொழும்பு) ஆகிய ஐவருக்கு இவ்விருதுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்நிகழ்வில் நந்தவனம் பவுண்டேசன் தலைவர் திரு.சந்திரசேகரன், செயலாளர் திரு. சாதிக்பாட்சா, பொருளாளர் திருமதி பா.தென்றல் ஆகியோருடன் பிரதம அதிதிகளாக திரைப்பட இயக்குநர் அகத்தியன், இலங்கை தொழிலதிபர் ஹாசிம் உமர், யுனிவர்ஸ் நிறுவுனர் திரு. நரேந்திர விவேகானந்தா (கனடா), சர்வதேச வாழ்வியல் ஆலோசகர் ஃபஜிலா ஆசாத் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

**வாழ்த்துவோர்:**
**T.ஜீவராஜி (சகோதரி) - பிரான்ஸ்**

(CS 00683) (10)

# மறு அறிவித்தல் வரை வழிபாடுகளுக்கு தடை

யாழ்ப்பாணம், மார்ச் 18

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மக்களை பாதுகாக்கும் வகையில்யாழ்ப்பாண மறைமாவட்டத்தின்அனைத்துகத்தோலிக்க தேவாலயங்களிலும் மறு அறிவித்தல் வரை திருப்பலிகள், வழிபாடுகள்எதுவும்நடைபெறமாட்டா. இவ்வாறுயாழ்ப்பாணமறைமாவட்ட ஆயர்யஸ்ரின்பேணாட்ஞானப்பிரகாசம்ஆண்டகைதெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது

" மக்களை ஒன்று கூட்டும் எந்த ஒரு நிகழ்வையும் ஒழுங்கு செய்ய வேண்டாமெனபங்குத்தந்தையர்கள்கேட்கப்பட்டுள்ளார்கள். இதன்படி மறு அறிவித்தல் வரை தவக்காலத்தின் சிறப்பு நிகழ்வுகளான திருச்சிலுவைப்பாதைதிருயாத்திரை, திருப்பாடுகளின்காட்சிபோன்றவை எதுவும் நடைபெறமாட்டா. மக்களையும், குருக்கள் துறவிகளையும் இல்லங்களில் இருந்தவாறு இக்கடின காலத்தில் இருந்து விடுதலைபெறஇறைவேண்டல்செய்யுங்கள்" என்றுதெரிவித்துள்ளார். (ஐ)

# சாட்டிக்கு செல்வதற்கும் ஒன்றுகூடுவதற்கும் தடா

யாழ்ப்பாணம், மார்ச்.18

யாழ்ப்பாணத்தின் சுற்றுலா மையமாக விளங்கும், வேலணை சாட்டிக்கடற்கரைக்குச்செல்வதற்கும், அங்குஒன்றுகூடுவதற்கும்தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவேகாரைநகர்கசூரினாகடற்கரைக்குச் செல்ல தடை விதிக்கப்பட்ட நிலையில் சாட்டிக்குச் செல்லவும் தற்போது தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கொரோனாவைரஸ்அச்சம்காரணமாகமக்களின்நன்மைகருதியே இவ்வாறு தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வேலணைபிரதேசசபையின்தவிசாளர்அந்த அறிவித்தலை வழங்கியுள்ளார்.

நாட்டில் கொரோனா நோய் தொற்றை தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருகிறது. பொது மக்களை ஒன்றுகூட வேண்டாம் எனவும் ,தேவை ஏற்படின் ஒரு சிலர் வெளியே வந்து அத்தியாவசியதேவைகளைநிறைவேற்றிக்கொள்ளுமாறும் பணிக்கப்பட்டுள்ளது. மக்களின்நன்மைகருதிஅரசின்இந்ததடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும், பொதுமக்களின் நன்மைகருதியும்தற்காலிகமாகசாட்டிகடற்கரைக்குவருவதையும் ,ஒன்றுகூடுவதையும்தவிர்க்குமாறேகேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ப-7)



# வீட்டுக்குள் முடக்கி விட்டு தேர்தலை நடத்தத் திட்டம்

## மனோ கணேசன் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 18

அரசு கொரோனா கொடுமையைப் பயன்படுத்தி, எதிர்கட்சிகளை வீட்டுக்குள் முடக்கி வைத்து விட்டு, தேர்தலை நடத்தி அரசியல் இலாபம் பெற முயல்கிறது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அரசின் இரகசிய திட்டம் இதுவாகும். நாளுக்கு நாள் அரசின் செல்வாக்கு நாட்டுக்குள் படு வீழ்ச்சியை நோக்கிச் செல்வதால், அரசும், அதன் இரகசிய நண்பர்களும் கொரோனா கொடுமைக்குள்ளேயும் தேர்தலை நடத்த முனைகிறார்கள்.



இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன்.

அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ள தாவது:

தற்போதைய நிலைமையில் தேர்தல் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டால், இலட்சக்கணக்கான மக்கள் மிகப்பெரும் சுகாதார ஆபத்துகளை எதிர்நோக்க வேண்டி வரும்.

தேர்தலைப் பிற் போட்டு விட்டு, அரசியல் கட்சி பேதங்களுக்கு அப்பால் சிந்தித்து, நாட்டைக் காக்க வேண்டும் என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வை, தமிழ் முற்போக்குக் கூட்டணி கோருகிறது.

அரசியல் இலாபம் பெறும் நோக்கில் செயற்பட வேண்டாம் என "தேசிய வீரர்கள்" என்று கூறி பதவிக்கு வந்த இந்த பிற்போக்கு அரசுக்கு நாம் கூறிவைக்க விரும்புகிறோம்.

சில தனியார் மற்றும் அரசாங்க தொலைகாட்சிகளைப் பயன்படுத்தி, தமது அணியினரை தேர்தல் பரப்புரையில் ஈடுபட வைப்பது, அதேவேளை எதிரணியினரை கொரோனா ஆபத்தை காட்டி வீட்டுக்குள் முடக்கி வைப்பது. இதுதான் இந்த ராஜபக்ஷ அரசின் திட்டம்.

இந்த இரகசிய அரசியல் நிலைப்பாட்டை நிறுத்தி வைத்து விட்டு, உடனடியாக தேர்தலைப் பிற்போட்டு, கொரோனா கொடுமையில் இருந்து, நாட்டைக் காக்க, அரசியல் கட்சி பேதங்களுக்கு அப்பால் சென்று சிந்திக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை நாம் கோருகிறோம்.

ஆட்சிக்கு வந்த நூறு நாள்களுக்குள்ளேயே, பசுத்தோல் போர்த்திய நரியான இந்த அரசின் சாயம் வெளுத்து உண்மை சொரூபம் தெரிய ஆரம்பித்து விட்டது. வாக்களித்த சிங்கள மக்களே தற்போது அதிர்ச்சியில் உறைந்து போய் நிற்கிறார்கள். ஆட்சிக்கு வந்தவர்கள், செய்தவைகள் என்று எதுவும் சொல்லிக்கொள்ள கிடையாது.

எமது ஆட்சியின் மக்கள் நலத் திட்டங்களை நிறுத்தியதுதான், இந்த அரசு செய்த ஒரே வேலை.- என்றுள்ளது. (எ)

## கொரோனா தடுப்பு ஏற்பாடு வலி. கிழக்கில் நடத்தப்படும்

கோப்பாய், மார்ச் 18

வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் கொரோனாவுக்கு எதிரான எச்சரிக்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா தொற்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், பிரதேசசபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள், மற்றும் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் வலிகாமம் கிழக்குக்கு உட்பட்ட அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கோப்பாய் பொலிஸ் நிலையத்தினர் ஆகியோருக்கு இடையில் அலுவலகத்தில், நேரிலும் தொலைத் தொடர்பு வசதிகள் ஊடாகவும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு விழிப்புணர்வு அறிவிப்புக்களைச் செய்வதற்கான வாகன வசதியை பிரதேச சபை செய்துள்ள நிலையில், நிலைமைகள் மோசமடைந்தால், பிரதேச சபையின் வகிபாகத்துக்கு ஏற்ப உதவிகளை தாம் கோருவதாக வலிகாமம் கிழக்குப் பிரதேச பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி இந்துஜன் தெரிவித்துள்ளார். அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடனான கலந்துரையாடலில், சட்டம் ஒழுங்குகள் அறிவிப்புக்களின் பிரகாரம் பொது நிகழ்வுகளை மட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மக்கள் தவிர்க்க முடியாது அத்தியாவசியமாக வந்து செல்ல வேண்டிய இடங்களில் கைகள் கழுவுவதற்கான பொது இடங்களைத் தயார்ப்படுத்துவது தொடர்பில் ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

வீடுகளில் பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு அவற்றுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சந்தேகத்துக்கிடமான நோய் அறிகுறிகள் தென்படுவோர் தயக்கமின்றி அரச மருத்துவ உதவியைப் பொறுவது சட்ட ரீதியான சமூகப்பொறுப்பு.

பிரச்சினைகள் இனங்காணப்படுமிடத்து தவிசாளர் உள்ளிட்ட வட்டாரத்தில் செயற்படும் உறுப்பினர் அவதானிப்பை செலுத்துவதற்கும், தரப்பினரின் தொடர்புகளை ஏற்படுத்தி உதவுவதற்கும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

மக்கள் அனர்த்த காலத்தில் பிரத்தியேக தொலைபேசி இலக்கமான 0776 569959 அல்லது 0214339959 இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். என்றார். (க)

## தண்டப் பணம் அறவிடப்படாது

யாழ்ப்பாணம், மார்ச் 18

எதிர்வரும் 31 ஆம் திகதி வரை வடக்கு மாகாணத்தில் வாகன வருமான வரி அனுமதிப் பத்திரம் வழங்கும் சேவை, அனைத்து பிரதேசசெயலகங்களிலும் நிறுத்த ப்பட்டுள்ளது என்று மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, மக்கள் பிரதேச செயலகங்களில் ஒன்றுகூடுவதைத் தடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப் பகுதிக்குள் காலவதியான அனுமதிப் பத்திரத்தோடு பயணிக்கும் பிரயாணிகளுக்கு பொலிஸாரால் தண்டப்பணம் அறவிடப்படாது.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## தனிமையாக்கப்பட்டோரின் வீடுகளுக்கு 'ஸ்டிக்கர்'!

கொழும்பு, மார்ச் 18

கொரோனா தொற்று அபாயத்தால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் வாழும் வீடுகளை அடையாளம் காண்பதற்கான அறிவித்தல்களை நேற்றுமுன்தினம் முதல் ஒட்டி வருவதாக சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளுக்கு எவருக்கும் செல்ல முடியாது. தனிமைப்படுத்தியோர் வெளியில் செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. இவற்றை மீறினால் பிடிவிறாந்தின்றி கைது செய்ய முடியும். குற்றமிழைத்தமை உறுதி செய்யப்பட்டால் இரண்டு வருட சிறைத் தண்டனையும் ஆயிரம் ரூபா முதல் 10 ஆயிரம் ரூபா வரை தண்டப் பணமும் விதிக்கப்படும். இந்தத் தவறுகளுக்கு ஒத்தாசை வழங்குவோரும் குற்றவாளிகளாகவே கணிக்கப்படுவர். இவர்களுக்கு எதிராகவும் இந்தத் தண்டனை விதிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொரோன தொற்றிய நாடுகளில் இருந்து மார்ச் முதலாம் திகதிக்கும் 10 ஆம் திகதிக்கும் இடையில் நாடு திரும்பியவர்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான 880 பேர் குறித்து தகவல் கிடைத்துள்ளது. அவர்களை வீடுகளில் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு தேவையான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

அவ்வாறானவர்கள் தங்கியுள்ள வீடுகளை அடையாளம் காண விசேட அறிவித்தல்கள் அந்த வீடுகளில் ஒட்டப்படும். அதில் நோய் பரவாமல் தடுக்கும் வழிவகைகளும் மீறினால் எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். கொரோனா நோய் தொற்றியவர்களுடன் பழகியிருந்தாலும் சுயமாக தம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ளுமாறும் பொதுமக்கள் கோரப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஓ.5)

### கொரோனா விழிப்புணர்வு

## பொது இடங்களில் கை கழுவும் வசதி

வடமராட்சி, மார்ச் 18

கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் முகமாக பருத்தித்துறை நகரில் பொதுமக்கள் கைகளை கழுவி சுத்தம் செய்ய மூன்று இடங்களில் போதிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பருத்தித்துறை நவீன சந்தையின் கிழக்குப் புறத்தில் பஸ் நிலையத்துக்கு அருகிலும், மேற்குப் பகுதியில் தண்ணீர் தாங்கிக்கு அருகிலும் மற்றும் முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள மீன் சந்தை வளாகத்திலும் இவ் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் இவ் வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் ஜோசப் இருதயராஜா தெரிவித்தார்.

குறித்த இடங்களில் பிளாஸ்ரிக் தண்ணீர் தாங்கிகள் வைக்கப்பட்டு குழாய் மூலம் கைகள் கழுவுவதற்குரிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் சவர்க்காரங்களும் வைக்கப்பட்டுள்ளன. இந்த வசதிகளை நகருக்கு வரும் பயணிகள் பொது மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். (ஐ-173)



# ஐடிஎச் க்கு இணையாக பொலன்னறுவையிலும் சிகிச்சைப் பிரிவு

## இராணுவத்தளபதி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 18

ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் ஐடிஏச் எனப்படும் கொழும்பு தேசிய தொற்றுநோயியல் மருத்துவமனைக்கு இணையான பிரிவொன்றை பொலனறுவையில் ஸ்தாபித்துள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுக்குள்ளானோரைக் கண்காணிப்பதற்காக பொலன்னறுவை, வெலிக்கந்தை ஆதார மருத்துவமனையில் குறித்த பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

குறித்த பிரிவுக்கு நேற்றுமாலை முதல் நோயாளர்களை அனுப்பும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தளபதி கூறியுள்ளார்.

இதுவரை கொழும்பு தேசிய தொற்றுநோயியல் மருத்துவமனையில் மாத்திரமே கொரோ னா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நோயாளிகள் சிகிச்சையளிக்கப்படுகின்றனர்.

ஆனால், மட்டக்களப்பு, பொலன்னறுவையிலுள்ள கண்காணிப்பு மத்திய நிலையங்களிலேயே அதிக நோயாளர்கள் இனங்காணப்படுவதால், தேசிய தொற்றுநேயியல் மருத்துவமனைக்கு இணையான பிரிவை பொலனறுவையிலும் ஸ்தாபிக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியதாகவும் இராணுவத் தளபதி கூறியுள் ளார்.

மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்கவின் ஆலோசனையின் அடிப்படையில் நேற்று மாலை முதல் கொரோனா தொற்றுள்ள நோயாளர்களை அங்கு அனுமதிக்க முடியும் எனவும் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (ந)

# முகக் கவசங்களுக்கு யாழில் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 18

முகக் கவசங்களுக்கு அரசு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளபோதும், யாழ்ப்பாணத்தில் எந்தவொரு இடத்திலும் முகக் கவசங்கள் இல்லை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

முகக் கவசங்கள் 10 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. கொரோனா தொற்று ஏற்பட்ட பின்னர், மக்கள் முகக் கவசங்களை முண்டியடித்துக் கொள்வனவு செய்யத்தொடங்கியதையடுத்து அதன் விலை கிடுகிடுவென அதிகரித்தது. இதனையடுத்து அரசு முகக் கவசங்களுக்கு விலையை நிர்ணயம் செய்தது.

இருப்பினும் முகக் கவசங்களுக்கு யாழ்ப்பாணத்தில் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

மருந்தகங்களில் முகக் கவசங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் கட்டடப் பணியின் போது பயன்படுத்தும் இரும்பகங்களில் விற்பனை செய்யப்படும் முகக் கவசங்களைக் கொள்வனவு செய்து பயன்படுத்தி வருகின்றனர். (ஒ.5,105)

# நயினாதீவுக்கு மட்டுப்படுத்திய படகுச்சேவை

யாழ்ப்பாணம்,மார்ச் 18

கொரோனா வைரஸின் தாக்கம் காரணமாக பொது மக்களின் நன்மை கருதி, மட்டுப்படுத்தப்பட்ட படகு சேவையை குறிகாட்டுவான் மற்றும் நயினாதீவுக்கு இடையே மேற்கொள்ளவுள்ளதாக, நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

மாவட்டச் செயலர் மற்றும் வேலணைப் பிரதேச செயலரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, இந்த நடைமுறை பின்பற்றப்படவுள்ளது.

ஒரு மணித்தியாலத்துக்கு ஒருதடவை இந்தச் சேவைகள் குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவு மற்றும் நயினாதீவில் இருந்து குறிகாட்டுவான் இருவழிச் சேவையாக நடைபெறும்.

காலை 6.30 மணி க்கு நயினாதீவு குறிகாட்டுவானுக்கு இடையில் முதலாவது படகுச்சேவை ஆரம்பிக்கும், ஒரு மணித்தியால இடைவெளியில் இரண்டு வழிச் சேவைகள் இடம்பெற்று பின்னர் மாலை 6.30 மணிக்கு படகு சேவைகள் நிறைவடையும் என்று சங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

கொரோனா அச்சம்

# பிணை கோரி கைதிகள் உணவுத்தவிர்ப்பு

வவுனியா விளக்கமறியல் சாலையில் உள்ள கைதிகள் கொரோனா அச்சம் காரணமாக தம்மைப் பிணையில் விடுவிக்க வேண்டும் எனக் கோரி உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக தம்மை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்திப் பிணையில் விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் முன்வைத்திருந்தனர். எனினும் தமது கோரிக்கை செவிமெடுக்கப்படவில்லை என்று தெரிவித்தே அவர்கள் உணவுத்தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். (ம-110)

# வன்னித்தேர்தல் தொகுதியில் 25 சுயேச்சைகள் கட்டுப்பணம்

## இலங்கையில் அதிக எண்ணிக்கை இங்குதான்

யாழ்ப்பாணம், மார்ச் 18

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் நேற்றுவரை 25 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

இலங்கையிலேயே அதிக கட்டுப் பணம் செலுத்தியுள்ள மாவட்டமாக வன்னித் தேர்தல் தொகுதி காணப்படுகின்றது.

நேற்றுவரை 25 கட்சிகள் கட்டுப்பணம் செலுத்தியிருப்பினும், 4 கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்துள்ளன. (த-105)

மாவட்டச் செயலகத்துக்கு

# மக்கள் வர மட்டுப்பாடு மாற்று வழிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

பலவித அரச கடமைகளின் பொருட்டு அரச நிறுவனங்களுக்கு வருகை தரும் பொதுமக்களைக் குறைத்துக் கொள்வதற்கு ஏதுவாக மாவட்டச் செயலகத்தில் தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய பொதுமக்கள் மின்னஞ்சல், தொலைபேசி மற்றும் தொலைநகல் மூலமாக நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று மாவட்டச் செயலர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

021 222 5000 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவும், 021 222 2775 என்ற தொலை நகல் இலக்கத்தின் ஊடாகவும் districtsecretaryjaffna@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகவும் தொடர்பு கொள்ள முடியும். (ஒ.5)

அச்சுவேலியிலிருந்த

# வெளிநாட்டவர்களுக்கு குருதிப் பரிசோதனை

யாழ்ப்பாணம், மார்ச் 18

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய 6 பேர் அச்சுவேலிப் பகுதியில் தங்கியிருந்த நிலையில் பொலிஸாரால் அழைக்கப்பட்டு குருதிப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இம் மாத ஆரம்பத்தில் நாட்டுக்குள் பிரவேசித்தவர்கள் என்று இனம் காணப்பட்டவர்களை சுகாதார உத்தியோகத்தர்களின் உதவியுடன் அச்சுவேலிப் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்தனர்.

அவர்களின் விவரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஆறு பேரின் குருதி மாதிரிகளும் பெறப்பட்டு பரிசோதனைக்காக கொரோனா தடுப்பு பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த முடிவு வரும் வரையில் அவர்களை தனிமைப்படுத்தி இருக்குமாறு அறிவுறுத்தலும் வழங்கப்பட்டது. (ஒ.5,105)

# தியத்தலாவை ராணுவ விடுதிகளில் தங்குமிட வசதிகள் ஏற்பாடு

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 18

மேலும் ஒரு அவசர முன்னுரிமைக்காக, இலங்கை இராணுவம் சுகாதார அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, தியதலாவையில் அமைந்துள்ள அனைத்து விடுமுறை இல்லங்களையும் மேம்படுத்தி, வெளிநாடுகளிலிருந்து திரும்பி வருபவர்களின் வருகைக்கான புதிய தனிமைப்படுத்தப்பட்ட மையங்களாக மேம்படுத்தப்பட்டு பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கீழ் இயங்கும் ஐந்து கட்டடங்களை இராணுவம் நிர்வகித்து வருகின்றது.

வவுனியா, ஈச்சங்குளம், வன்னியின், தனிமைப்படுத்தப்பட்ட மையமாக செயல்படும் என்று பாதுகாப்பு தலைமை பிரதானியும், இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார். (ஒ.5)

# மட்டக்களப்பு வேட்பாளர்கள் 8 பேர் கையெழுத்திட்டனர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்கள் நேற்று வேட்புமனுக்களில் கையெழுத்திட்டனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் கி.துரைராசசிங்கம், வேட்பு மனுவை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இன்று காலை கையளிப்பார். வேட்பு மனுவில் கி.துரைராசசிங்கம், சீ.யோகேஸ்வரன், ஞா.ஸ்ரீநேசன், கோ.கருணாகரம், மா.உதயகுமார், ஞானப்பிரகாசம், ந.கமலதாஷன், இ.சாணக்கியா ராகுல் ஆகிய எட்டுப் பேரும் ஒப்பமிட்டுள்ளனர். (த-105)

கொரோனா விழிப்புணர்வில் ஈடுபட்ட

# மருத்துவக் குழுவினரை தாக்கியோர் மறியலில்

யாழ்ப்பாணம், மார்ச் 18

கொரோனா வைரஸ் தொடர்பான விழிப்புணர்வில் ஈடுபட்ட ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் பரா.நந்தகுமார் மற்றும் அவருடன் சென்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் மீது தாக்குதல் நடத்திய சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இரு ஊழியர்களையும் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நல்லூரிலுள்ள பிரபல ஐஸ்கிறீம் விற்பனை நிலையத்துக்கு முன்பாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. அந்த நிலையத்தின் பணியாளர்களும் மேலும் சிலரும் இணைந்து தாக்குதல் நடத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

சம்பவம் தொடர்பாக மருத்துவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

குற்றஞ்சாட்டப்பட்ட இரு சந்தேக நபர்களை கைது செய்த பொலிஸார், யாழ்ப்பாண நீதிவானிடம் நேற்று முற்படுத்தினர்.

அதன்போதே இருவரையும் எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (கு-37)

## யாழ்.நீதிமன்ற வழக்குகளின் திகதிகள் பின்னர் அறிவிப்பு

*பதிவாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாண நீதிவான் மன்றில் இந்த வாரம் தவணையிடப்பட்ட வழக்குகள் அனைத்துக்குமான மறு தவணை நீதிமன்ற அறிவிப்புப் பலகையில் பின்னர் அறிவிக்கப்படும் என்று நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

நாட்டின் அசாதாரண நிலை காரணமாக மார்ச் 16ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நீதிமன்ற நடவடிக்கைகளை மட்டுப்படுத்துமாறு நீதிச் சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது.

அதனால் நீதிமன்ற வழக்குகள் இடம்பெறவில்லை என்று பதிவாளர் மேலும் தெரிவித்தார். (கு)

## லைசென்ஸ் கால எல்லை நீடிப்பு

கொழும்பு, மார்ச் 18

காலவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மார்ச் மாதம் 16 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதிக்கு உட்பட்ட காலத்தில் காலவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் கால எல்லையே நீடிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுக் காரணமாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கல், அனுமதிப்பத்திரத்துக்கான மருத்துவச் சான்றிதழ் வழங்கல், பரீட்சை, வாகனம் செலுத்தும் செயல்முறைத் தேர்வு மற்றும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் கால எல்லை நீடித்தல் உள்ளிட்ட சேவைகள் அனைத்தும் இடைநிறுத்தப்படுகின்றன என்று இலங்கைப் போக்குவரத்து மோட்டார் திணைக்களம் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தது.

அந்தவகையில் குறித்த சாரதி அனுமதிப்பத்திரங்களின் கால எல்லை எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் நேற்றுத் தெரிவித்தார். (ந)

### வாகன...

துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில், பிரதேச செயலகங்களில் மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்கும் நோக்கிலும் அவர்களின் நலன்கருதியும் அனுமதிப் பத்திரம் வழங்கல் இடைநிறுத்தப்படுகின்றது.

இந்தக் காலப் பகுதியில் (17.03.2020 31.03.2020) காலாவதியான வாகன வருமான வரி அனுமதிப் பத்திரத்துடன் வாகனங்கள் செலுத்துபவர்களிடம் தண்டம் அறவிடப்படமாட்டாது. இந்த அறிவித்தல் போக்குவரத்துப் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (கு-7)

### கைதிகளை...

சிறைச்சாலை கைதிகளுக்கு 'கொரோனா' தொற்று பரவுவதைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று திணைக்களம் தெரிவித்தது.

கடந்த சனிக்கிழமை தொடக்கம் ஒவ்வொரு கைதியையும் பார்க்க ஒருவருக்கே அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதன்படி, யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளையும் இரண்டு வாரங்களுக்கு எவரும் பார்வையிட முடியாது என்றுயாழ்ப்பாணச் சிறைச்சாலை நிர்வாகம் தெரிவித்தது. எனவே, பார்வையாளர்கள் எவருமே சிறைச்சாலைக்கு வராதீர்கள் என்று திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (கு,ம,20,22)

## மரண அறிவித்தல்



பிறப்பு 06 . 09 . 1952

இறப்பு 17 . 03 . 2020

**இராசையா ஜெயபரிபாலன்**

(ஓய்வு பெற்ற எழுது வினைஞர் RDD, பெற்றா எசன்ஸ்)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா ஜெயபரிபாலன் நேற்று (17.03.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா மற்றும் தவமணி தம்பதிகளின் புதல்வனும் நடராஜா - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சர்வபரிபாலன். செல்வகுமார் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஞானாம்பிகை (கலா) அவர்களின் அன்புக் கணவரும் பார்த்தீபன் (யா/ இந்துக் கல்லூரி 2017 A/L). சாம்பவி (வேம்படி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2020) புதன் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் உரும்பிராய் இளங்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

### வடக்கில்...

'கொரோனா' வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக ஆளுநரின் பணிப்பின் பேரில் விஷேட கலந்துரையாடல் மாகாண சுகாதாரஅமைச்சில் நேற்று நடைபெற்றது. அதில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இதில், சுகா தாரத் துறை மற்றும் நிர்வாகத்துறை சார் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர். அடுத்துவரும் இரண்டு வாரங்களும் 'கொரோனா' வைரஸ் அவதானத்துக்குரிய வாரங்களாக அறிவிக்கப்பட்டு தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்லல், பொதுமக்கள் ஒன்றுகூடும் வைபவங்கள், நிகழ்வுகள், விழாக்களை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைத்தல் வேண்டும்.

ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட குடும்ப நிகழ்வுகளை மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளில் மிக அவசியமான உறுப்பினர்களுடைய பங்குபற்றுதலோடும் பாதுகாப்பாக நடத்துவதை உறுதிப்படுத்தல் வேண்டும். அரசு அறிவித்த 14 நாடுகளிலிருந்து வருகை தந்தவர்கள் தங்களை தனிமைப்படுத்துவதோடு, ஏற்பாடு செய்திருக்கும் சகல விசாரணை மற்றும் பரிசோதனைகளுக்கு தங்களை அவசியம் உட்படுத்த வேண்டும். முதியோர் மற்றும் சிறுவர் இல்லங்களுக்கு வெளிநாட்டிலிருந்து வருகை தந்த பயணிகள் மறுஅறிவித்தல் வரும்வரை செல்வதைத் தடுத்தல், ஆளுநர் செயலகம், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி சபைகள், போன்றவற்றுக்குப் பொதுமக்கள் மிக அத்தியாவசிய தேவைகளைத் தவிர இதர காரணங்களுக்காகச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

அரச மற்றும் தனியார் கல்வி நிலையங்களின் பிரத்தியேக மற்றும் கல்வி சார்ந்த நிகழ்ச்சிகள், பிரதேச மட்ட கழக விளையாட்டு நிகழ்வுகள், சனசமூக நிலையங்கள் போன்ற பொது அமைப்புக்களின் மக்கள் ஒன்று கூடும் சகல நிகழ்ச்சிகளும் இருவாரங்களுக்குத் தடை செய்யப்படுகின்றன. பொதுப் போக்குவரத்து வாகனங்கள் முழுமையாகக் கிருமித்தொற்று நீக்கலுக்கு உள்ளாக்கப்படல் வேண்டும்.

-ஆகிய தீர்மானங்களை நடைமுறைபடுத்துவதன் அவசியத்தை உணர்ந்து அனைவருடைய பாதுகாப்பையும் கருதி பொறுப்புணர்வோடுசெயற்படுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. என்றுள்ளது. (கு-7)

### ஆளும்...

றாக உடைந்து யாழ்ப்பாணம் மற்றும் வன்னித் தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடுகின்றன.

ஆளும் கட்சியான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஈ.பி.டி.பி. என்பன ஆதரவை வழங்கி வருகின்றன.

இந்த நிலையில் நடைபெறப் போகும் நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திலும். ஈ.பி.டி.பி. யாழ்ப்பாணம் மற்றும் வன்னித் தேர்தல் மாவட்டங்களிலும் தனித்தனியாக போட்டியிடுகின்றன. ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுமக்கள் முன்னணி யாழ்ப்பாணம் மற்றும் வன்னித் தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடுகின்றது. (ஒ,5)

### மக்களை...

வீடுக ளுக் குள் முடங்கிக் கிடக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது ஜனநாயகம் அல்ல. எனவே, எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதி நடத்தத் திட்டமிட்டுள்ள பொதுத்தேர்தலை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ உடன் பிற்போட வேண்டும்' இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கொரோனாவின் அச்சுறுத்தலால் நாட்டின் இன்றைய நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருக்கின்றது. இந்த நேரத்தில் மக்களின் உயிர்ப் பாதுகாப்பே முக்கியம். எனவே, சகல வழிகளிலும் நாட்டு மக்களைப் பாதுகாக்கும் வகையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அந்த நடவடிக்கைகள் அரசின் சுயநல அரசியலைக் கருத்தில் கொண்டதாக அமையக்கூடாது. மக்களின் பாதுகாப்புக் கருதியும் நாட்டின் நலன் கருதியும் ஜனாதிபதி செயற்பட வேண்டும்.

இந்த நிலையில், நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது ஜனநாயகம் அல்ல. மக்களைவீட்டுக்குள்முடக்கிவைத்துவிட்டு தேர்தலை நடத்தினால் அது நீதியான தேர்தலாக இருக்கவேமாட்டாது. எனவே, ஏப்ரல் 25ஆம் திகதி நடத்தத் திட்டமிட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தலை ஜனாதிபதி உடன் பிற்போட வேண்டும். இது எமது கோரிக்கை மட்டுமல்ல நாட்டிலுள்ள பெரும்பாலான கட்சிகளினதும் ஜனநாயக ரீதியிலான நீதியான தேர்தலை விரும்பும் நாட்டும் மக்களினதும் ஒருமித்த கோரிக்கையாக இருக்கின்றது' என்றார். (ம-22)

# வீதிகள் அளவீடு ஆரம்பம்

கொடிகாமம், மார்ச் 18
தென்மராட்சிப் பிரதேசத்தில் "ஐரோட்" திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ள வீதிகள்திணைக்களப்பணியாளர்களால்அள வீடுசெய்யப்பட்டு வருகின்றன.
ஜே/320இராமாவில்கிராமஅலுவலர்பிரிவில் கோயிலாமனை சிவன்வீதி, மீசாலை புத்தூர் சந்தியிலிருந்து தாவளை இயற்றாலையுடன் இணையும் தட்டான்குளப் பிள்ளையார் கோயில் வீதி, கொயிலாமனை கட்டைபறித் தான் சோனகன்புலவு மயான வீதி என்பவற்றின் அபிவிருத்திப் பணிகள் இன்னும் இரு மாதங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும், அதற்கான வீதி அகலிப்பு அளவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-159)


## வேலையாள் தேவை

யாழ்.நகரில் உள்ள கடை ஒன்றுக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. வயது 18 தொடக்கம் 30 வரை விரும்பத்தக்கது.

077 937 0000

## கடைகள் வாடகைக்குண்டு

யாழ்.பல்கலைக்கழக சூழலில் கடைகள் உடன் வாடகைக்குண்டு. (உணவகம் தவிர்ந்தது) கிழமை நாட்களில் மாலை 5 மணிக்கு பின் பார்வையிடலாம்.

தொடர்புகட்கு: 076 685 2529


## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **பண்டாரி வேலாயுதம்**
(மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, வேரர் கேணியடி)

அன்னை மடியில்
31.03.1923

அம்மன் மடியில்
12.04.2004

திதி: 18.03.2020

ஆண்டுகள் பதினான்கு ஆனதுவோ.....
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை எம் இதயம்
அன்பும், பாசமும், கருணையும், நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவில்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(cs.31991) (13.17)

## மடப்பள்ளி வேலையாள் தேவை

**உரும்பிராய் ஓடையம் பதி கற்பக விநாயகர் ஆலயத்திற்கு** மடப்பள்ளி வேலை செய்யக்கூடிய ஒருவர் உடனடியாகத் தேவை. இது தொடர்பில் ஆர்வமுள்ளவர்கள் கீழ் காணும் தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்புகொள்ளவும்.

**021 221 1228, 077 630 3015**

## முதலாம் ஆண்டு சிரார்த்த தின அழைப்பு

மலர்வு
11 - 03 - 1938



உதிர்வு
31 - 03 - 2019

அமரர்
## உயர்திரு செல்லப்பா சின்னையா
(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்)

கடந்த வருடம் 31.03.2019 அன்று இயற்கையெய்திய எமது குடும்பத் தலைவர் அவர்களின் முதலாம் ஆண்டு சிரார்த்த தின நிகழ்வு நாளை (19.03.2020) வியாழக்கிழமை அமரரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன உபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்)

குடும்பத்தினர்
தம்பலடி
பொலிகண்டி

## புத்தளத்தில் 60 குடும்பங்கள் வீட்டுக்காவலில்

நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, மார்ச் 18
இத்தாலி உள்ளிட்ட நாடுகளிலிருந்து வந்து, புத்தளம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வசித்து வருபவர்கள் உள்ளிட்ட 60 குடும்பங்கள், சுகாதாரச் சேவை அதிகாரிகளால், வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், அவர்களுடைய வீடுகளிலிருந்து வெளியேற முடியாத வகையில், நீதிமன்ற ஆணை பெறப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலர் சந்திரசிறி பண்டார தெரிவித்தார். குறித்த நபர்கள், சுகாதாரச் சேவை அதிகாரிகளின் ஆலோசனைகளை புறக்கணித்து சுதந்திரமாகச் சுற்றித் திரிந்துள்ளனர். இத்தாலி உள்ளிட்ட சில நாடுகளிலிருந்து வந்த 800க்கும் அதிகமானவர்கள், வென்னப்புவ மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் தங்கியுள்ளனர். இவர்கள், தனிமைப்படுத்தப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை என்றும், மாவட்டச் செயலர் கூறியுள்ளார். இவர்களில் பலர், புத்தளம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில், பல விருந்துபசாரங்களையும் நடத்தியுள்ளனர் என்றும் தெரியவருவதாக, சுகாதாரச் சேவை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஓ.5)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28 . 12 . 1928



மறைவு
30 . 03 . 2019

## அமரர் பொன்னம்பலம் அன்னம்மா

ஓராண்டு என்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் உயிருள்ளவரை உங்களது நினைவுகள்
எங்களை விட்டகலாது தாயே!
பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
தியாகத்தின் திருவுருவாய் இருந்து எங்களை வழிநடத்திய
உங்களை இனி எங்கே காண்போம்
உங்களுடைய ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்.


அன்னாரின் ஓராண்டு நினைவுநாள் இன்று (18.03.2020) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கேரதீவு வீதி,
நாவற்குழி.

(CS/31956)(11,17)

குடும்பத்தினர்.
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



## செல்வி கந்தையா நகுலேஸ்வரி

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் தபாற்கந்தோர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கந்தையா நகுலேஸ்வரி நேற்று (17.03.2020) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும் இராசலிங்கம் (பேப்பர் கடை கந்தையா பிரபல வர்த்தகர்), தனலட்சுமி, இராஜேஸ்வரி (ஆசிரியர் யா/ நடேஸ்வராக்கல்லூரி) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2020) புதன்கிழமை ந.ப 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம்
தகவல்: குடும்பத்தினர்

# ஹக்கீம், ரிஷாத்துடன் இரவிரவாக சஜித் பேச்சு

கொழும்பு, மார்ச் 18
ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஆகியோரை நேற்று முன்தினம் இரவு சந்தித்து முக்கிய கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

அம்பாறை, குருநாகல், புத்தளம், மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் சஜித் அணியில் முஸ்லிம் வேட்பாளர்களை நியமிப்பது குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அம்பாறையில் தமக்கு 5 இடங்கள் தரப்பட வேண்டுமென ஹக்கீம் வலியுறுத்த தமக்கு 2 இடங்கள் தரப்பட வேண்டுமென ரிஷாத் வலியுறுத்தியுள்ளார்.

குருநாகலில் மு.காவுக்கு ஓர் இடம் வழங்கப்பட்ட நிலையில், தமது கட்சி சார்பிலும் ஒருவர் நிறுத்தப்பட வேண்டும் என்று ரிஷாத் கேட்டுள்ளார். அதே வேளை திருகோணமலையில் ஹக்கீம் 4 இடங்களைக் கோரியுள்ளார்.

அதற்கு ரிஷாத் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். புத்தளத்தில் மு.கா. அ.இ.ம.கா. ஆகியன தனித்துக் கேட்பதை சஜித் தரப்பு விரும்பவில்லை என இதன்போது சுட்டிக்கா ட்டபட்டுள்ளது.

பெரிதாக இணக்கப்பாடுகள் எதுவும் எட்டப்படாத நிலையில், நள்ளிரவையும் தாண்டி நடைபெற்றுள்ள இந்தக் கலந்துரையாடலில் 2 முஸ்லிம் கட்சிகளின் இழுபறி நிலையினால், வேட்புமனுப் பத்திரங்களை நிறைவு செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என சஜித் தரப்பினர் தமக்குள் பேசிக் கொண்டனர் எனவும் மேலும் அறியமுடிந்தது.

(ம-22)

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



முருகேசு கந்தையா

மண்ணில் 09.11.1943
விண்ணில் 25.03.2014

மாறாத மனமோடு மாறான வழிகள்
கூறாது நிறைவான கூறான மொழியால்
தேறாத மனமிங்கு தெளிவாக வழிமேல்
பேறான முறை கூறும் பேரான தந்தையே
ஆறாண்டுகள் சென்றாலும் என்றென்றும்
உங்கள் நினைவுகளில்.

உசன், மிருசுவில் — குடும்பத்தினர்

# காணி பிடிக்கும் 'நேவி' மக்கள் எதிர்ப்பால் பிசுபிசுப்பு

யாழ்ப்பாணம், மார்ச்,17
சுழிபுரம் சவுக்கங்காட்டுப் பகுதியில் மீனவர்கள் பயன்படுத்தும் பாதை மற்றும் வாடி உள்ளடங்கலான ஒரு ஏக்கர் நிலப்பரப்பை கையகப்படுத்துவதற்குக் கடற்படை எடுத்த முயற்சி மக்கள் எதிர்ப்பை அடுத்து கைவிடப்பட்டது. இந்தச் சம்பவம் இன்று காலை நடந் துள்ளது.

கொரோனா அச்சம் தொடர்பாக மக்கள் ஒன்றுகூடக் கூடாது என்று அரசு அறிவித்துள்ள நிலையில் மீனவர்கள் தொழிலின் பின்னர் வீடுகளில் முடங்கியுள்ளனர். அதைப் பயன்படுத்திக்கொண்ட கடற்படையினர் நீண்டகலமாக சுழிபுரம் மீனவர்கள் கடலுக்குச் செல்வதற்காகப் பயன்படுத்தி வந்த பாதை மற்றும் அவர்களுடைய வாடி உள்ளடங்கிய ஒரு ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த முயற்சிகள் எடுத்திருந்தனர். எல்லைக் கற்களையும் நட்டுள்ளனர்.

இந்த விடயத்தை அறிந்த மீனவர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இது தொடர்பாக சங்கானைப் பிரதேச செயலருக்கும் அறிவிக்கப்பட்டது. அரசியல்வாதிகளும் தகவல் அறிந்து அந்த இடத்துக்குச் சென்றனர்.

கடற்படையினருடன் அவர்கள் கலந்துரையாடினர். அந்தக் காணி அரச காணி என்றும், காணியைக் கையகப்படுத்துவதற்கான அறிவித்தல் தமக்குக் கிடைத்துள்ளது என்றும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். எனினும் மக்கள் காணி சுவீகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். மீனவர்கள் தொடர்ச்சியாக எதிர்ப்புத் தெரிவித்ததால் காணி சுவீகரிக்கும் முயற்சி கைவிடப்பட்டது. நிலப்பரப்பை தொடர்ந்தும் சுவீகரிக்காமல் இருப்பதற்கு பிரதேச செயலர் உறுதி வ்ழங்க வேண்டும் என்று மீனவர்கள் கோரினர். மீனவர்களின் எதிர்ப்பையும், மீனவர்கள் கடலுக்குச் செல்ல இந்தப் பாதை அவசியம் என்பது தொடர்பாக மேலதிகாரிகளுடன் பேசுகிறேன் என்று பிரதேச செயலர் மீனவர்களுக்கு உறுதியளித்தார் என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

(ப-26)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா செல்வநாயகம்

(ஓய்வுபெற்ற களஞ்சிய பொறுப்பாளர் - நெல்சந்தைப்படுத்தல் சபை)



நாவற்குழியை பிறப்பிடமாகவும் 586/1, காங்கேசன்துறை வீதி, வண்ணார் பண்ணை, நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா செல்வநாயகம் நேற்று (17.03.2020) செவ்வாய்க் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (18.03.2020) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

பிறப்பு 16 - 12 - 1976



இறப்பு 16 - 03 - 2020

### சரவணபவன் அகிலன்

நாமகள் ஒழுங்கை கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சரவணபவன் அகிலன் கடந்த (16.03.2020) திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் சரவணபவன் - சரோஜினிதேவி தம்பதியினரின் பாசமிகு மகனும் ஜெயராணியின் அன்புக் கணவரும் சயானி. றுக்சாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுந்தரலிங்கம் - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் சாமினாவின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2020) புதன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
நாமகள் ஒழுங்கை. கொக்குவில் கிழக்கு. கொக்குவில்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 - 01 - 1945



உதிர்வு 13 - 04 - 2015

அமரர் திருமதி
சீவரட்ணம் மனோரஞ்சிதமலர் (மணி அக்கா)

திதி: அமிர்தசித்த தசமி

புன்முறுவல் காட்டியே முகமன் செய்யும் வடிவம்
குறுநகை ததும்ப உரையாடிடும் குணக்குன்றம்
சுறுசுறுப்புடன் சுயமாய் உதவிடும் சுந்தர உருவம்
நறுமலரும் நாண நம்மிடையே நடமாடியவரே
ஈடு இணையற்ற நிம்மதி நாடி
நீடு துயில் கொண்டதேனோ - இனி
பதற்றம் பரவிய பரிதவிப்பிற்கு பரிகாரம் எது?
எதற்கும் இறையருளே துணைநிற்கும்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

182, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி — குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவுநாள்

அமரர் கணேசஐயர் வீரமணிஐயர்

தோற்றம் 15.07.1958 — மறைவு 30.03.2019



திதி:- அபரபக்க தசமி
(18.03.2020)

என்றும் உங்கள் ஆத்மா
சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்

## ஆலயங்களில் பக்தர்கள் குறைவு

யாழ்ப்பாணம், மார்ச் 18
கொரோனா தொற்று வைரஸ் நோயின் தாக்கத்தை அடுத்து ஆலய வழிபாடுகளில் ஈடுபடுவோரின் எண்ணிக்கையும் குறைவாகவே காணப்படுகிறது. பங்குனி திங்கள் தினமான நேற்று முன்தினம் அநேகமான இந்து ஆலயங்களில் காலையில் சிறப்பு பூசை மற்றும் பொங்கல் வழிபாடுகள் என்பன இடம்பெற்றன. இவ் வழிபாட்டு நிகழ்வுகளில் மிகவும் குறைந்தளவு மக்கள் கலந்துகொண்டமையைக் காணக்கூடியதாகவிருந்தது. (ஐ-17)



## யானையில் போட்டி

கொழும்பு, மார்ச் 18
எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி யானை சின்னத்தில் போட்டியிடும் இறுதி தீர்மானத்தை எடுத்துள்ளது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.
"ஐக்கிய தேசியக் கட்சி யானை சின்னத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவில் இன்று கைச்சாத்திடவுள்ளது. வேட்பு மனு கையளிப்பிற்கு முன்னரேனும் ஐக்கிய மக்கள் சக்தியின் தரப்பினர் பொது இணக்கப்பாட்டுக்கு வருவார்களாயின் அது தொடர்பில் ஆராயத் தயாராகவுள்ளோம்".- என்றார். (எ)

## சமூக வலைதளங்களுக்கு இலவச டேட்டா


கொழும்பு, மார்ச் 18
கொரோனா வைரஸ் தொற்று காரணமாக விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதால், ஸ்ரீலங்கா ரெலிகொம் நேற்று முன்தினம் முதல் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை இலவச டேட்டாக்களை வழங்கவுள்ளது. வட்ஸ் அப், வைபர், மெசெஞ்சர் ஆகிய மூன்று சமூக வலைத்தளங்களையும் எதிர் வருகின்ற 23 வரை இலவசமாக பார்க்கலாம் என்று ரெலிகொம் அறிவித்துள்ளது. (ஒ,5)

Sri Lanka Telecom

# தனிமைப்படுத்தலில் இருந்து 170பேர் தப்பித்துள்ளனர்

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு


கொழும்பு, மார்ச் 18
இத்தாலி தென்கொரியாவிலிருந்து இலங்கை வந்த 170 பேர் தனிமைப்படுத்தலில் இருந்து தப்பித்துள்ளனர் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.
ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஈரான் தென்கொரியா ஆகிய நாடுகளில் இருந்து மார்ச் முதலாம் திகதி முதல் 16ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்குள் இலங்கைக்கு வந்த அனைவரும் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.
கொரோனா வைரஸிலிருந்து நாட்டு மக்களை பாதுகாக்கும் நோக்கத்துடனேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரட்ண தெரிவித்துள்ளார்.
"முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாங்கள் அவர்களை பரிசோதனைகளுக்கு உட்படுத்தவேண்டும் என குறிப்பிட்டுள்ள அவர் வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்த இது அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.
14 நாள் தனிமைப்படுத்தலிற்கு உட்படாதவர்கள் பொலிஸாருக்கு தங்கள் நிலையை தெளிவுபடுத்தவேண்டும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. அவர்களை தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அழைத்துச் செல்லப்போவதில்லை அவர்கள் வீடுகளில் வைத்தே தனிமைப்படுத்தப்படுவார்கள்" என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (எ)



## தமிழர் ஒற்றுமையை சீர்குலைக்கும் சூத்திரம்

*விழிப்புடன் இருக்க வேண்டும் என்கிறார் சிவமோகன்*

மன்னார், மார்ச் 18
அதிகப்படியான சுயேச்சைக் குழுக்கள் வடக்கில் தேர்தலில் களம் இறக்குவதன் மூலம், தமிழர் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் சூத்திரம் நிறைவேற்றப்படுகிறதா? என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது. உலகில் மனித குலத்தை அழிக்க வந்த கொரோனா போல், தமிழினத்தை அழிக்க வரும் சுயேச்சைக் கொரோனாக்களை நன்றாகப் பரீட்சித்துப் பார்க்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார். (க- 213)



## தீயில் எரிந்து பெண் சாவு

வவுனியா, மார்ச்.18
தீயில் எரிந்த நிலையில் பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.
வவுனியாதாண்டிக்குளம் முருகன் கோயிலுக்கு அண்மையில் நேற்று அதிகாலை இந்தச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த வேலுச்சாமி லட்சுமி (வயது-59) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.
மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப-110)

## ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வு நடவடிக்கை

முல்லைத்தீவு, மார்ச்18
கொரோனா தொற்றில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் வகையில் ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வு நடவடிக்கைகளை கரைதுறைப்பற்றுபிரதேச சபையினர் மேற்கொண்டுள்ளனர். கிராமம்கிராமமாகச் சென்று மக்களுக்கான அறிவிப்பை மேற்கொண்டு வருகின்றனர். இதன் போது வெளிநாடுகளில் இருந்துவந்தவர்கள் மற்றும் வருபவர்கள் தொடர்பான விவரங்களை அருகில் உள்ள பிரதேச சபைகள் மற்றும் பொது சுகாதாரபரிசோதகர்களுக்கு அறியத்தருமாறும் அறிவிக்கப்பட்டு வருகின்றது. (ஐ-19)

## பம்பைமடு தடுப்புக்கு மேலும் 134 பேர் அனுமதி

வவுனியா, மார்ச் 18
வவுனியா - பம்பைமடு பெரியகட்டு இராணுவ முகாமில் அமைந்துள்ள கொரோனா பரிசோதனை தடுப்பு முகாமுக்கு மேலும் பல விமானப் பயணிகள் நேற்று முன்தினம் கொண்டுவரப்பட்டனர்.
இலங்கைக்கு வரும் இத்தாலி, தென்கொரியா, ஈரான் போன்ற நாடுகளில் இருந்து வரும் பயணிகள் 14 நாள்கள் தடுத்து வைக்கப்பட்டு கொரோனா தொற்று உள்ளதா என்ற பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.
இந்நிலையில் குறித்த தடுப்பு முகாமுக்கு 2 பேருந்துகளில் இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்புடன் வெளிநாட்டில் இருந்து வருகைதந்த 134 விமான பயணிகள் அழைத்து வரப்பட்டனர்.
கடந்த 13 ஆம் திகதியும் வவுனியா, பம்பைமடு பெண்கள் இராணுவ முகாமில் அமைந்துள்ள தடுப்பு முகாமுக்கு 5 பேருந்துகளில் 265 வெளிநாட்டு விமானப் பயணிகள் கொண்டுவரப்பட்டனர். இதேவேளை நேற்றும் இரண்டு பேருந்துகளில் விமானப் பயணிகள் அழைத்து வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது . (ஐ-110)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## சின்னப்பிள்ளைத்தனமாக இருக்கே!

மக்களை வீட்டுக்குள் முடக்கி விட்டு தேர்தலை நடத்துவது சரியல்ல என்று இடித்துரைத்திருக்கிறார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர்.

அவர் மட்டுமல்ல முன்னாள் எதிர்கட்சித் தலைவர் சஜித், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் உள்ளிட்ட பல சிங்கள அரசியல்வாதிகளும் தேர்தலைப் பிற்போடுமாறு கோரிக்கை மேல் கோரிக்கை விடுத்த போதும், அரசு அதனைக் கண்டு கொள்வதாக இல்லை. தெற்காசியத் தலைவர்களுடன் நடைபெற்ற காணொலி உரையாடலின் போது கூட 'தேர்தல் திட்டமிட்ட படி நடந்தேறும்' என்று ஜனாதிபதி கோத்தாபய சொல்லியிருக்கிறார். உண்மையில் தேர்தலைப் பிற்போடும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லையெனினும், அத்தகைய கோரிக்கையை அவர் தேர்தல் ஆணைக்குழுவிடம் முன்வைத்தால், அது குறித்து சாதகமாகப் பரிசீலித்து ,தேர்தலைப் பிற்போடும் சாத்தியங்கள் அதிகம். ஆனால் அப்படிக் கோரிக்கை வைக்கக் கூட கோத்தாவுக்கு மனமில்லை.

கொரோனாவின் அச்சத்தில் நாடே மூழ்கியிருக்கும் நிலையில், இப்போது தேர்தல் குறித்த சிந்தனை எவருக்குமே இல்லை. எங்கும் கொரோனாத் தீ பரவி, நேற்று மட்டும் 13 பேர் புதிதாக இனங்காணப்பட்டு, கொரொனாவால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 43 ஐ இப்போது தொட்டிருக்கிறது. ஆரம்பத்தில் கொரோனா பரவுகை நத்தை வேகத்தில் இருந்து பின்னர் ஆமை வேகத்துக்கு வந்து இப்போது முயல் வேகத்தில் பாயத் தொடங்கியுள்ளது. அடுத்துவரும் நாட்களில் இந்தவேகம் இன்னும் அதிகரிக்கும் என்றும் அஞ்சப்படுகிறது.

அப்படி நடந்தால் இலங்கை ஒட்டுமொத்தமாக முடங்கி,மக்கள் வீடுகளுக்குள் மாத்திரம் இருக்க வேண்டிய நிலை ஏற்படும். அதன் பின்னர் நோய்த்தாக்கத்தில் இருந்து மீளும் வரை, மக்களின் இயல்பு வாழ்வு பாதிப்படைந்ததாகவே இருக்கும். போர்க்காலத்தில் விமானம் ஒன்று குண்டுபோட வரும் போது,எப்படி பங்கருக்குள் பதுங்கினோமோ அதேபோன்றுதான் கொரோனா அச்சம் இலங்கையை விட்டு அகலும் வரை வீடுகளுக்குள் பதுங்க வேண்டியிருக்கும். குண்டுபோட வந்த விமானம் தான் கொண்டு வந்த குண்டுகளைப் போட்டுத்தள்ளி விட்டுப் பறந்துவிடும், ஆனால் கொரோனா எப்போது போகும் என்று யாருக்குமே தெரியாது. அதனால் பதுங்கு வாழ்வே இனிவரும் சில வாரங்களுக்கு இலங்கையர்களுக்கு சொந்தமாகப் போகின்றது.

இப்படிப்பட்ட சூழலில்,மக்கள் நலனை முன்னிறுத்தி பொது விடுமுறைகளைக் கூட வழங்கும் அரசு, தேர்தலை ஒத்திப் போடமட்டும் மறுத்து வருகின்றது. சிலவேளைகளில் வேட்புமனுத்தாக்கல் நிறைவு பெற்ற பின்னர் தேர்தலை ஒத்திப் போடுவது பற்றி அரசாங்கம், தேர்தல் ஆணைக்குழுவுக்கு கோரிக்கை விடுக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. தேர்தலை ஒத்திப்போடாமல்,திட்டமிட்டபடியே நடத்தினால் அரசுக்கு ஆதாயம் நிறையவேயுண்டு. ஏனெனில் கொரோனாவை வைத்தே , எல்லா ஊடகங்களிலும் அரசு தன்னுடைய பிரசாரத்தை தங்குதடையின்றிச் செய்யலாம். ஆனால் ஏனைய கட்சிகளால் அது முடியாது. வெறுமனே விளம்பரத்தை மட்டுமே மற்றக் கட்சிகள் போடமுடியும்.

"கொரோனா அச்சத்தால் வீட்டுக்குள் எல்லோரும் முடங்கியிருக்கும் போது, அந்த விளம்பரங்கள் மக்களிடம் எடுபடப்போவதில்லை.

மாறாக பருப்பு, மீன் ரின் விலை குறைப்பு என்று அடிக்கடி கோத்தா அரசு அடித்து விடும் விலைக்குறைப்புகள் தான் மக்களிடம் செல்லப்போகின்றன. கூடவே கொரோனா விழிப்புணர்வு என்ற பேரில் அரசின் அமைச்சர்களும், படைத்தளபதிகளும் சகல ஊடகங்களையும் ஆக்கிரமிப்பர். எங்கு பார்த்தாலும், கொரோனாவும், அரசின் விம்பமுமே மக்களுக்குத் தென்பட, வேறுகட்சிகள் இருப்பதையும், வேறுபிரச்சினைகள் இருப்பதையும் அவர்கள் மறந்தே போய்விடுவர். எனவே கொரோனா அச்சத்தில் மக்கள் மூழ்கியிருக்கும் போதே, தேர்தலை வைத்துவிட்டால் மக்கள் அரசுத் தரப்புக்கே மொட்டுக் கட்சிக்கே வாக்களித்து, மூன்றில் ஒரண்டு பெரும்பான்மையைக் கூடப் பெற்றுவிடலாம்" என வடிவேலுத்தனமாக அரசு யோசிக்கிறது போலும். கொரோனா பற்றிய ஏதோ முக்கிய விடயத்தை ஜனாதிபதி சொல்வார் என்று எதிர்பார்க்க வைத்துவிட்டு, பருப்புவிலையையும், ரின்மீன் விலையையும் குறைக்கும் விசேட உரை நிகழ்த்தி,மைத்திரியை விடவும் தான் மிகப்பெரிய கோமாளித்தலைவர் என்று நிரூபித்த கோத்தாபய, இப்படி கொரோனாவை வைத்து தேர்தல் ஆதாயம் தேட முனைவதொன்றும் ஆச்சரியமல்லத்தான்.

# பொதுத்தேர்தலை பிற்போடுங்கள்!

## 'கபே' அமைப்பு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 18

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைப் பிற்போடுமாறு கபே அமைப்பு (சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம்)தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கபேஅமைப்புதேர்தல்ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அச்ச சூழ்நிலையில் பொதுமக்கள் வெளியே செல்வதற்கே அஞ்சுகின்றனர்.

இந்தநிலையில் தேர்தலை நடத்துவதென்பது அசாதாரண நிலைமையாகும். முக்கியமாக வேட்பு மனு தாக்கல் செய்யும் போது ஏற்படக்கூடிய விடயங்கள் மற்றும் அதன் பின்னர் தேர்தல் பரப்புரைகளை முன்னெடுப்பதற்கு சிக்கல்கள் காணப்படுகின்றமையால் தேர்தல் நடவடிக்கைகளை பிற்போடுவது அவசியமாகும் நிர்வாக சேவைகள் சிலவற்றை மாத்திரம் திறந்து தேர்தலை நடத்துவது சாத்தியமற்றதாகும். சில நாடுகளில் நடைபெறக்கூடிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கூட பிற்போடுகின்ற நிலையில் இலங்கையில் தேர்தலை பிற்போடுவது தொடர்பாக அரசு எந்ததொரு அறிவிப்பையும் இதுவரை விடுக்கவில்லை.

தேர்தலுக்குமுன்னர்கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவது தான் தற்போதைய சூழ்நிலையில் முக்கியமானதொன்றாக காணப்படுகின்றமையால் அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். -என்றுள்ளது. (எ)

## வெந்நீரூற்றுக்கு தற்காலிக பூட்டு

கொழும்பு, மார்ச் 18

கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்பாடுகளுக்கு அமைவாக, திருகோணமலை வெந்நீரூற்றுக் கிணறுப் பகுதியை தற்காலிகமாக மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை பெரிதும் கவரும் இந்த வெந்நீரூற்றுக் கிணறுப் பகுதியை தற்காலிகமாக மூடுவதற்கு தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட தொல்பொருள் அதிகாரி மொஹான் ஆரியதிலக தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றுமுதல் (நேற்று) மறுஅறிவித்தல் வரை வெந்நீரூற்றுக் கிணறு சுற்றாடல் பகுதி மூடப்படுகின்றது. அதேவேளை, திருகோணமலை நிலாவெளி பறவைகள் தீவையும் இன்று (நேற்று) முதல் 2 வார காலத்திற்கு மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (ம)

## மின்தடை



யாழ்ப்பாணம்,மார்ச் 18

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் குறிப்பிட்ட சில இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று சுன்னாகம் இலங்கை மின்சார சபையின் மின்வழங்கல் கட்டுப்பாட்டு நிலையத்தின் மின்பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** நுணாவில், மட்டுவில், கல்வயல், கல்வயல் சந்திரபுரம், வேம்பிராய் Cemetery, மட்டுவில் இராணுவ முகாம், மட்டுவில் முத்துமாரி அம்மன் கோவிலடி ஆகிய இடங்களிலும், **கிளிநொச்சி பிரதேசத்தில்** பொன்னாவெளி, பாலாவி ஆகிய இடங்களிலும், **வவுனியா பிரதேசத்தில்** பகல அளுத்வத்த கிராமம், கோவில்புதுக்குளம் கிராமம், கூமாங்குளம் கிராமம், பத்தினியார் மகிழங்குளம் கிராமம், தவசிக்குளம, கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று அவர் அறிவித்துள்ளார். (க)

## பிள்ளையான் மீதான வழக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, மார்ச் 18

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மீதான வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலல் வைக்கப்பட்டுள்ள சந்திரகாந்தன் மீதான வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதியாக அப்துல்லா பதவியேற்றதைத் தொடர்ந்து குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் இருந்துவந்தது. குறித்த வழக்கின் சாட்சியாளராக மேல் நீதிமன்ற நீதிபதி அப்துல்லா இருந்த காரணத்தினால் குறித்த வழக்கு தொடர்ச்சியாக நீடிக்கப்பட்டுவந்தது.

இந்த நிலையில் இந்த வழக்கினை விசாரணை செய்வுதற்காக மட்டக்களப்பு சிவில் நீதிமன்றத்தின் நீதிபதி டி.சூசைதாசன் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டார். கொரோனா அச்சம் காரணமாக நேற்று நீதிமன்றங்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையிலும் குறித்த வழங்கு நீதிபதி டி.சூசைதாசனினால் விசாரரணைக்கு விசேடமாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 2ஆம் திகதிவரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம)

## சொற்பொழிவு

நீர்வேலி,மார்ச் 18
யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்று வருகின்றது. அந்த வகையில் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு "ஆறுபடையும் ஆறுபகையும்" என்னும் தலைப்பில் இளம்சைவப்புலவர் சநவநீதன் சிறப்புரை ஆற்றவுள்ளார். (ஐ)

## ரணிலுடன் இணைகிறார் விக்கிரமபாகு

கொழும்பு, மார்ச் 18
பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு நவசமசமாஜக் கட்சி தீர்மானித்துள்ளது. அந்தக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன களுத்துறை மாவட்டத்திலும், மத்திய குழு செயற்குழு உறுப்பினர்களான திரு நாவுக்கரசு யாழ். மாவட்டத்திலும், மகேந்திரன் வன்னியிலும் போட்டியிடுகின்றனர். வேட்பு மனுவிலும் இவர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.
தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்கக் கூடிய ஒரேயொரு தலைவர் ரணில் ஆவார். அவரை பலப்படுத்தினால் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வை கண்டுவிடலாம். கடந்த ஆட்சியிலும் அவர் முயற்சிகளை முன்னெடுத்தார். கூழ இருந்தவர்கள் காலை வாரினார்கள். இம்முறை அதற்கு இடமில்லை. அவர் வெற்றிபெற்றால் தமிழர்களுக்கு விடிவு பிறக்கும் என்று கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.(எ-44)

# பொது அறிவிப்புக்களை முறையாக பின்பற்றுங்கள்!

## சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 18

**மக்களின் பாதுகாப்புக் கருதியே அரசாங்கத்தால் பொது அறிவிப்புக்கள் விடுக்கப்படுகின்றன. அவற்றை மக்கள் பின்பற்ற வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

மக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்க்கவென விடப்பட்ட அரச பொது விடுமுறையை, பொது மக்கள் பின்பற்றத் தவறியுள்ளனர். பொது இடங்களிலும், குறிப்பாக ஆலயங்களில் பொதுமக்களைக் கூட்டமாக அவதானிக்க முடிந்துள்ளது.
கொரோனா வைரஸின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த ஏற்கனவே பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில், மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்ப்பதற்காக பொதுவிடுமுறை அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.
பெருமளவிலான இந்துக் கோயில்களில் திருவிழாக்கள் ஆரம்பமாகியுள்ள நிலையில், உற்சவங்களில் புலம்பெயர் நாடுகளிலிருந்து வந்தவர்கள் உட்பட மாணவர்கள், அரச அலுவலர்கள் என நூற்றுக்கணக்கானோர் பங்கு பற்றியமையைக் காணமுடிந்தது.
இவர்களில் பெரும்பாலானோர் ஐஸ்கிறீம் வாகனங்கள் முன்னாலும், அன்னதானம் வழங்கப்படும் இடங்களிலும் முண்டியடித்து நின்றமையை அவதானிக்க முடிந்துள்ளது.
சில இடங்களில் பொலிஸார் மற்றும் சுகாதார பகுதியினர் கோவில் நிர்வாகத்தினர் ஆகியோரின் வேண்டுகோளுக்கு இணங்க, கோவிலுக்கு வந்தவர்கள் ஒன்றுகூடாமல் தனித்தனியாக நின்றமையையும் காணமுடிந்தது.
இத்தாலி நாட்டில் மக்கள் விழிப்புணர்வின்றி உல்லாசமாக களியாட்டங்களில் பலர் ஒன்று கூடியதன் எதிரொலியாக, இரு வாரங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்டோரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன.
எனவே விழிப்புணர்வற்ற செயற்பாடுகளால் எமது நாட்டிலும் அநியாய உயிரிழப்புக்களை ஏற்படுத்த சந்தர்ப்பம் வழங்க வேண்டாம் என்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (சு-9)

# இனியாவது நாகரிக அரசியலை செய்வதற்கு முன்வர வேண்டும்

முன்னாள் வடக்கு மாகாண அமைச்சர் சத்தியலிங்கம் தெரிவிப்பு

வவுனியா, மார்ச்.18
அரசியல்ரீதியாகவோ அபிவிருத்தி ரீதியாகவோ செயற்படாத செயற்படதிராணியற்ற அரசியல்வாதிகளும் அவர்களது எடுபிடிகளும் உண்மைக்கு புறம்பான கற்பனைக் கதைகளை சமூக வலைத்தளங்களில் பதிவிடுவதனூடாக அரசியல் செய்யமுற்படுகின்றமை வெட்கக்கேடானது என்பது மட்டுமல்ல எமது சமூகத்துக்கு ஆபத்தானது, கேடானது. இனியாவது நாகரிக அரசியலை முன்னெடுக்க அரசியல் செய்பவர்கள் முன்வர வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அதில் உள்ளதாவது:
ஓர் அரசியல் செயற்பாட்டாளர் மக்களிடம் ஆதரவு கேட்டு வரும்போது தான் சார்ந்த கட்சியாலோ அல்லது தன்னாலோ முன்னெடுக்கப்பட்ட அரசியல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான காரியங்களை முன்னிலைப் படுத்தியோ தாங்கள் மக்கள் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்பட்டால் தங்களால் முன்னெடுக்கப்படவிருக்கும் அரசியல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான திட்டங்களை முன்னிலைப்படுத்தியோ பரப்புரைகளை மேற்கொள்ளுங்கள்.
இவை இரண்டுமே கைவசமில்லையெனின் தங்களது தனிப்பட்ட ஆசையை முன்வைத்து அரசியல் பிச்சை கேட்கலாம்.
நான் மாகாணசபை அமைச்சராகவும் அதற்கு முன்னரும் பின்னரும் செய்த நிலைபேறான அபிவிருத்திசார், அரசியல்சார் செயற்பாடுகளை கொச்சைப்படுத்தும் நோக்கோடு கடந்தகாலத்தில் அரசியல்ரீதியாகவும் அபிவிருத்தி சார்ந்தும் செயற்படாத செயற்படத் தெரியாத பல சமூகவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களும் அவர்களின் ஊதுகுழலாகச் செயற்படும் சில ஊடகங்களைச் சாந்தோரும் பொய்யான செய்திகளை பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.
அந்தத் திட்டத்தில் நிரந்தர நியமனம் பெற்றவர்களின் விவரம் வெளிப்படையானது. தற்போதுள்ள தகவலறியும் சட்டத்தினூடாக எந்தவொரு தனிநபரும் நியமனம் பெற்றவர்களின் விவரங்களை பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு பெறும் தகவல்களின் அடிப்படையில் முறைகேடோ ஊழலோ நடைபெற்றிருந்தால் அதற்கான பொறுப்புக்கூறும் கடப்பாடு எனக்குள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். - என்றுள்ளது. (எ-110)



# 150 முதியோர்களுக்கு உதவிகள் வழங்கல்

கொடிகாமம்,மார்ச் 18
மறைந்த தங்கம்மா கனகசபை நினைவாக கிளிநொச்சி செல்வாநகர் முதியோர் சங்கத்தில் உள்ள 150 முதியோருக்கு மரக்கன்றுகள்,சேமிப்பு உண்டியல் மற்றும் மதியபோசனம் என்பன நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.
கிளிநொச்சி செல்வாநகர் முதியோர் சங்க ஆலோசகர் என் சிவபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி செல்வா முதியோர் சங்கப் பொறுப்பதிகாரிகள் வன்னிப் பட்டறை நிர்வாகத்தினர் கிளிநொச்சி யூனியன் இன்சூரன்ஸ் முகாமையாளர் முதியோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
மறைந்த தங்கம்மா கனகசபை நினைவாக கனடாவில் வசிக்கும் அவரது பிள்ளைகளால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-159)

# மஹிந்தவுக்கு எதிராக ஞானசாரர் களத்தில்!

கொழும்பு, மார்ச் 18
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கான ஆதரவை விலக்கிக் கொண்டுள்ள அத்துரலிய ரத்ன தேரர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனித்து போட்டியிடுவதற்காகப் பிக்கு படையணியொன்றை உருவாக்கியுள்ளார்.
'எமது மக்கள் சக்தி' கட்சியின் கொடி சின்னத்தின்கீழ் முக்கிய சில பிக்குகள் தேர்தலில் போட்டியிடவுள்ளனர். அதற்கு ரத்ன தேரர் தலைமை வகிக்கவுள்ளார். பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் குருணாகல் மாவட்டத்தில் களமிறங்கவுள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குருணாகல் மாவட்டத்திலேயே போட்டியிடுகின்றார். அவருக்குச் சவால் விடுக்கும் வகையிலேயே ஞானசார தேரர் இங்கு களமிறக்கப்பட்டுள்ளார் என கூறப்படுகின்றது.
குருணாகலையில் போட்டியிடுவதில் ஏதேனும் சிக்கல் ஏற்படும் பட்சத்தில் ஞானசார தேரர் பதுளையில் போட்டியிடுவார் என தெரியவருகின்றது. அத்துடன், பாயங்கல ஆனந்த தேரர் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார். (எ-44)



# ஏலவிற்பனை பிற்போடல்

சாவகச்சேரி,மார்ச் 18

சாவகச்சேரி நகரசபையால் இன்று புதன்கிழமை நடத்தப்படவிருந்த ஏலவிற்பனை மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்று தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார். (ஐ-9)

# ஆயரிடம் ஆசி பெற்றார் குணசீலன்

மன்னார்,மார்ச் 18

'தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின்' வன்னி மாவட்டத் தேர்தல் தொகுதியின் மன்னார் மாவட்ட வேட்பாளராகப் போட்டியிடும், வட மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவ கலாநிதி ஞானசீலன் குணசீலன், மன்னார் ஆயரிடம் நேற்று ஆசி பெற்றார்.

மன்னார் ஆயர் இல்லத்துக்குச் சென்ற அவர், மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகையைச் சந்தித்து கலந்துரையாடிமையுடன் அவரிடம் ,ஆசி பெற்றார்.

(க-56)

# மக்கள் வீடுகளுக்குள் முடக்கம்

மன்னார்,மார்ச் 18

'கொரோனா வைரஸ்' அச்சத்தால், மன்னார் மாவட்டத்தில் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தால் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், மக்கள் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். மக்கள் வெளி இடங்களுக்கு மேற்கொள்ளும் பயணங்களைத் தவிர்த்துள்ளனர். போக்குவரத்துச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சந்தை, பஸார் பகுதி உட்பட பொது இடங்களில் மக்களின் வருகை குறைவடைந்துள்ளது.

அரசாங்கத்தால் அறிவுறுத்தப்பட்ட அரச திணைக்களங்கள், வங்கிகளைத் தவிர ஏனைய அரச, தனியார் நிறுவனங்கள் நேற்று இயங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-56)

# கொரோனா வைரஸ் தாக்கம்; யாழ். மீனவர்களும் பாதிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச்18**

**இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் தொடர்ச்சியாக அடையாளம் காணப்படும் நிலையில் மீன் விற்பனை மற்றும் ஏற்றுமதியில் உண்டாகியிருக்கும் சரிவு யாழ்ப்பாண மாவட்ட மீனவர்களைப் பாதித்துள்ளது என்று மாவட்ட கிராமிய கடற்றொழிலாளர் அமைப்பின் இணைப்பாளர் நாகராசா வர்ணகுல சிங்கம் தெரிவித்தார்.**

மேற்படி விடயம் தொடர்பாக யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு கடலுணவு ஏற்றுமதி செய்வதில் உருவாகியிருக்கும் தொய்வு நிலையானது யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கான மீன் ஏற்றுவதிலும் தொய்வை ஏற்படுத்தியிருக்கின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் பிடிக்கப்படும் மீனில் பெரும்பகுதி தென்னிலங்கைக்கு ஏற்றப்படுகின்றது. மாவட்டத்தின் தேவைக்காக சிறியளவிலேயே பயன்படுத்தப்படுகின்றது. அதிலும் குறிப்பாக சில மீன் வகைகளே உள்ளூரில் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் கடந்த இரு நாள்களாக, வடமராட்சி கிழக்கு பகுதிக்கு மீன் கொள்வனவுக்காக வரும் கூலர் வாகனங்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. கருவாட்டுக்காக மீன் கொள்வனவு செய்வதும் வீழ்ச்சியடைந்திருக்கின்றது.

இந்த நிலையில் பிடிக்கும் மீனை விற்பனை செய்ய முடியாத நிலையில், தினசரி மீன் பிடி தொழிலையும், அதன் ஊடான வருமானத்தையும் நம்பியிருக்கும் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். உள்ளூரில் விற்பனை செய்வதானாலும் கூட ஒரு அளவுக்கு மேல் விற்பனை செய்ய முடியாது. மேலும் மீன் விலையும் வெகுவாக குறைவடைந்துள்ளது. எனவே பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் கவனத்தில் எடுக்கவேண்டும். கொரோனா பிரச்சினை தீரும்வரையில் வாழ்வாதாரரீதியாக பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று மாவட்ட கிராமிய கடற்றொழிலாளர் அமைப்பின் இணைப்பாளர் நாகராசா வர்ணகுலசிங்கம் தெரிவித்தார். (ப-20)

# சமன் வகராட்சி மறைவு ஊடகத்துறைக்கு இழப்பு

கொழும்பு, மார்ச் 18

வடகிழக்கு ஊடகவியலாளர்களுடன் தென்னிலங்கையில் இருந்து ஓர் உறவுப் பாலமாக தமிழ் ஊடகவியலாளர்களுடன் இணைந்து செயற்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் ஊடகப் பிரதானி சமன் வகராட்சியின் மறைவு ஊடகத்துறைக்கு பேரிழப்பாகும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடகிழக்கு ஊடகவியலாளர்களுடன் தென்னிலங்கையில் இருந்து ஓர் உறவுப் பாலமாக தமிழ் ஊடகவியலாளர்களும் இணைந்து செயற்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் ஊடகப்பிரதானி சமன் வகராட்சியின் மறைவுச் செய்தி கேட்டு பெரும் துயர் அடைந்துள்ளோம்.

பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வடகிழக்கு தமிழ் ஊடகவியலாளர்களுடன் இணைந்து பணியாற்றிய ஊடகவியலாளர் சமன் வகராட்சி தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராக குரல் கொடுத்திருந்தார் - என்றுள்ளது. (ம)

# மந்திகையில் பின் நகர்த்தப்பட்ட மூதறிஞரின் உருவச்சிலை

வடமராட்சி, மார்ச்.18

மந்திகை சிலையடிச் சந்தியில் உள்ள மூதறிஞர் கந்தமுருகேசனாரின் உருவச்சிலை வீதி அகலிப்பதையொட்டி, பின்நோக்கி நகர்த்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

புலோலி கொடிகாமம் கச்சாய் வீதி அகலிக்கப்பட்டு காப்பெற் வீதியாக அபிவிருத்தி செய்யும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்த அபிவிருத்தியால் பருத்தித்துறை கொடிகாமம் வீதி, பருத்தித்துறை யாழ்ப்பாணம் வீதி ஆகியவற்றை இணைக்கும் மந்திகை சிலையடிச்சந்தியில் உள்ள மூதறிஞர் கந்தமுருகேசனாரின் உருவச்சிலை பின்நோக்கி நகர்த்தப்படவுள்ளது. இதற்கு கந்தமுருகேசனாரின் உருவச்சிலை நிறுவிய புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,பருத்தித்துறை பிரதேச சபை மற்றும் புலோலி அபிவிருத்தி அமைப்புக்கள் ஆகியவை சம்மதம் தெரிவித்துள்ளன.

பின்நோக்கி நகர்த்துவதற்கான நிலத்தை அருகில் உள்ள எரிபொருள் விற்பனை முகவர் வழங்க முன்வந்துள்ளார். இதனை அடுத்து வீதி அகலிக்கும் பணியை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரரான மெகா நிறுவனம் கந்தமுருகேசனாரின் உருவச்சிலையை பின் நோக்கி நகர்த்தி புதிய இடத்தில் நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது. (ஐ-173)

# வர்த்தகர்களுக்கு முக்கிய அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 18

அனைத்து வர்த்தகர்கள், மருந்தக உரிமையாளர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்களுக்கான ஆலோசனைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் உள்ளிட்ட முக்கிய அறிவிப்புக்களை யாழ்ப்பாணம் வணிகர் கழகம் விடுத்துள்ளது.

இது தொடர்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

✦ பொதுமக்களுக்கான அத்தியாவசியப் பொருள்கள், மருந்து வகைகள், அரிசி வகைகள் மற்றும் ஏனைய பொருள்களை போதிய கையிருப்பில் வைத்திருக்கவும்.

✦ பொதுமக்களுக்கான பொருள்களை எந்த சூழ்நிலையிலும் தட்டுப்பாடின்றி விநியோகிக்க தயார் நிலையில் இருக்கவும்.

✦ கடந்த சில நாள்களாக இரவு பகல் பாராது மக்களுக்குப் பொருள்கள் விநியோகித்தமையையிட்டு உங்களைப் பாராட்டுகின்றோம். தொடர்ந்தும் இக்கட்டான நிலைகள் ஏற்படும்போது, மக்களுக்கான சேவையை தொடர்ச்சியாக வழங்கவும்.

✦ வடமாகாணத்துக்கான அத்தியாவசியப்பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்கள் விநியோகத்தில் தனியார் துறையினரே பெரும்பங்கை வகித்து வருகிறார்கள். அந்த வகையில் வடமாகாணத்தில் இருக்கும் மக்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் பெரிய பொறுப்பு எம்மிடமே உள்ளது. அந்தப் பொறுப்பை உணர்ந்து அவர்களுக்கான சேவையை திருப்திகரமான முறையில் சேவையை வழங்கவும்.


✦ எந்த இக்கட்டான சூழ்நிலையிலும் தங்களிடம் இருக்கும் கையிருப்புக்களை எல்லோருக்கும் பகிர்ந்து வழங்கி, உணவுத்தட்டுப்பாடுகள் ஏற்படாதவண்ணம் பாதுகாத்துக் கொள்ளவும்.

✦ வர்த்தகர்கள் தங்களது வர்த்தக நடவடிக்கைகளுக்கு தற்காலிக களஞ்சிய வசதி தேவைப்படின், யாழ் வணிகர் கழகத்துடன் தொடர்பு கொண்டால் மாவட்டச் செயலர் மூலமாக அரச களஞ்சியங்களைப் பெற்றுத்தர ஆவன செய்யப்படும்.

✦ வர்த்தக நிலையங்களிலும், தங்கள் வீடுகளிலும் சுகாதாரத்தைப் பேணுவதுடன் கொரோனா வைரஸிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள சுகாதார அமைச்சு வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக, சவர்க்காரமிட்டு கைகளை அடிக்கடி கழுவுதல், இருமல் அல்லது தும்மல் ஏற்படும் போது உங்கள் வாய் மற்றும் மூக்கை கைக்குட்டையால் மூடுதல், உடல்நிலை சரியில்லாத நபர்களுடன் பழகுவதைத் தவிர்த்தல், மக்கள் கூடுதலாக ஒன்றுகூடும் இடங்களைத் தவிர்த்தல், கைகள் சுத்தமாக இல்லாவிட்டால் கண்கள், மூக்கு, வாய் அல்லது முகத்தை தொடாதிருத்தல், ஒவ்வொரு நபரிடமிருந்தும் முடிந்தவரை ஒரு மீற்றர் தொலைவில் இருந்து உரையாடுதல், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க விற்றமின் சி, நோய் எதிர்ப்பு மருந்துகள் மற்றும் உணவுமுறைகளைப் பின்பற்றுதல், ஏதாவது நோய் அறிகுறி இருப்பின் வைத்தியசாலையை உடன் நாடுதல் போன்ற ஆலோசனைகளை பின்பற்றவும். - என்றுள்ளது. (க)

# கைகளைச் சுத்தப்படுத்துவது கொரானாவிலிருந்து காக்கும்

## பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரி அறிவுறுத்தல்



யாழ்ப்பாணம், மார்ச் 18

**முகக் கவசங்களை அணிவதை விடவும் பொதுமக்கள் ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை கைகளைச் சவர்க்காரம் இட்டுக் கழுவ வேண்டும். பணத்தைக் கைகளால் தொட்டாலும் கைகளை நன்கு சவர்க்காரம் இட்டுக் கழுவுவது அவசியம்.**

இவ்வாறு நல்லூர் பிரதேச பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரி ஜெயக்குமாரன் அறிவுறுத்தியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரவல் தொடர்பாக நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் வாழும் மக்களுக்கு அதன் தாக்கம் அதிலிருந்து எவ்வாறு பாதுகாப்பாக இருப்பது தொடர்பான விழிப்புணர்வு கலந்துரையாடல் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.தியாகமூர்த்தி தலைமையில் நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் கொரோனா வைரஸின் தாக்கம் சடுதியாக அதிகரிக்கலாம் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. தற்போது உள்ள சூழ்நிலையைப் போன்று தாக்கம் இருந்தால் எமது மருத்துவர்களினால் சமாளிக்கக் கூடியதாக இருக்கும். பாதிக்கப்படடவர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமானால், எமது பிரதேசங்களில்உள்ளவைத்தியசாலைகளில் அவர்களை வைத்துப் பராமரிக்கின்றமை பெரும் சவாலாகவே இருக்கும். நாம் நோய் வரும் முன்னர் முன்னெடுக்க வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். பொதுவாக மக்கள் முகக் கவசங்களை வாங்கிப் போடுகின்றனர். தனியே முக கவசங்களைப் போடுவதால் மட்டும் இந்த நோய் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது. முக்கியமாக மக்கள் தங்களின் கைகளை குறைந்தது ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவையாவது சவர்க்காரம் இட்டு கழுவிக் கொள்ள வேண்டும். மக்கள் ஒன்று கூடும் இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் தங்களின் கிராமம், மக்களுக்கு விழிப்பு ணர்வை ஏற்படுத்த வேண்டும்.

மக்கள் அன்றாடம் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய பணத்தைப் பயன்படுத்துகின்றனர். அந்தப் பணத்தாலும் நோய்த் தொற்று ஏற்பட சாத்தியங்கள் உள்ளன. பணத்தைத் தொட்டு பயன்படுத்தினால் கைகளை முகங்களில் தொடாது அதற்கு முன்னரே சவர்க்காரம் இட்டு கைகளைக் கழுவிக் கொள்ளுங்கள். உங்கள் பிரதேசங்களில் வெளிநாட்டவர்கள் யாராவது வந்தால் உடனடியாக உங்கள் பிரதேச செயலகங்களுக்கு அல்லது பொலிஸாருக்கு அறிவியுங்கள். அவர்கள் தொடர்பில் நாம் விசாரித்து நோய்த் தாக்கம் தொடர்பில் ஆராய வேண்டிய கட்டாயத் தேவைகள் உள்ளன. மக்கள் விழிப்புணர்வுகளைப் பெற்று அவர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (எ-20)

---

*சாவகச்சேரி நகர*

## மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தில் மகளிர் தினம்

சாவகச்சேரி, மார்ச் 18

சாவகச்சேரி நகர மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பன்னாட்டு மகளிர் தினவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர், பகல், பராமரிப்பு மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத்தலைவி திருமதி. பி.புஷ்பராணி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக ஹற்றன் நஷனல் வங்கியின் சாவகச்சேரிக் கிளை முகாமையாளர் திருமதி பாபுஜி அகல்யா, சிறப்பு விருந்தினர்களாக பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் ப.சதீஸ்வரன், பிரிவு கிராம அலுவலர் க.சுபாஸ் சந்திரபோஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் புவேந்தன் பாலர் பகல், பராமரிப்பு நிலையச் சிறார்களின் வரவேற்பு நடனம் மற்றும் கோலாட்டம் நடைபெற்றன.

பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டு, சங்கத்தால் கடந்த மாதம் சங்க அங்கத்தவர்களிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் பிரிவில் வதியும் பெண் முதியோர்கள் மதிப்பளிப்பு, பிரிவில் வாழும் பொருளாதார நிலையில் பின்தங்கிய இரு குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொருள்கள் வாழ்வாதார உதவி கள் வழங்கப்பட்டன. சாரு மச்சாள் என்னும் நகைச்சுவை நாடகமும் மேடையேற்றப்பட்டது. (க-9,131)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்குழுவால், முல்லைத்தீவு சண்முகரத்தினம் மகா வித்தியாலய மாணவிக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது. (க)

---

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

அளவெட்டி, மார்ச் 18

அளவெட்டி தெற்கு கமக்காரர் அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகத்தெரிவும் கடந்த 10 ஆம் திகதி மணிக்கு இடம்பெற்றது.

வை. சின்னப்பு தலைமையில் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாக உறுப்பினர்களாக தெரிவாகினர்.

தலைவராக வை.சின்னப்பு, செயலாளர் வ.நல்லதம்பி, பொருளாளர் குகன் ஆகியோருடன் ஆறு பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும்தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-36)

---

## பணப்பயிர் அறுவடையில் விவசாயிகள் ஆர்வம்

வடமராட்சி, மார்ச் 18

வடமராட்சிப் பிரதேசத்தில் பணப் பயிர்களான புகையிலை மற்றும் வெங்காயம் ஆகியவற்றை அறுவடை செய்வதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இப் பயிர்களின் அறுவடை சுமார் ஒன்றரை மாத காலத்துக்குள் நிறைவு பெறும். அறுவடை செய்யப்படும் புகையிலைச்செடி ஒன்று 100 ரூபா தொடக்கம் அதியுச்ச விலையாக 200 ரூபா வரை விற்பனையாகிறது. புகையிலையை பதனிட்டு சந்தைப்படுத்தி வரும் புகையிலை வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்துபுகையிலையை கொள்வனவு செய்து அவற்றை பதனிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே வலிகாமம் பிரதேசத்தில் அறுவடை செய்யப்பட்ட புகையிலைச் செடிஅதியுச்சவிலையாக 150 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்தது. அவற்றையும் வடமராட்சிப் பிரதேசத்தைச்சேர்ந்த சில புகையிலை வியாபாரிகள் கொள்வனவு செய்திருந்தனர்.



வெங்காயப் பயிர் அறுவடை செய்யும் விவசாயிகள் அவற்றை தமது வீடுகளில் களஞ்சியப் படுத்தி வருகின்றனார்.

அறுவடை செய்த ஒரு சில விவசாயிகள் வெங்காயத்தை உடனடியாக சந்தைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். தற்போது ஒரு அந்தர் வெங்காயம் குறைந்த விலையாக 12 ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

அறுவடைசெய்தவெங்காயத்தைக் களஞ்சியப்படுத்தியுள்ள விவசாயிகள் தமக்கு விதைக்குத் தேவையான வெங்காயத்தை ஒதுக்கி வைத்து விட்டு எஞ்சிய வெங்காயத்தை கால சந்தர்ப்பத்துக்கு ஏற்ப சந்தைப்படுத்த தீர்மானித்துள்ளனர். (ஐ-173)

---

## வருடாந்த பெருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 18

ஈவினை மதுரையம்பதி ஸ்ரீ மீனாட்சியம்பாள் ஆலய வருடாந்த உற்சவப் பெருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட் கிழமை மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும்.

தொடர்ந்து இடம்பெறும் திருவிழாக்களில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் 6 ஆம் திகதி திங்கட்கிழமை நிலாவரை புனித கங்கையில் தீர்த்தோற்சவத் திருவிழாவும் நடைபெறும். (க)

---

## ஏல விற்பனை

மல்லாகம், மார்ச் 18

மல்லாகம் நீதிவான் நீதிமன்றால் அரசுடைமையாக்கப்பட்ட, உரிமை கோரப்படாத மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி, கை உழவு இயந்திரம் ஆகிய சான்றுப் பொருள்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலத்தில் வாங்கப்படும் பொருள்களை உடன் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்வதோடு நீதிமன்ற வளாகத்திலிருந்து அன்றைய தினமே அப்புறப்படுத்தல் வேண்டும். ஏலத்தைக் கோருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்துடன் வருகை தருமாறு பதிவாளர் அறிவித்துள்ளார். (க)

---

## வருடாந்த திருவிழா

நவாலி, மார்ச் 18

நவாலி ஸ்ரீ நாக ராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து இடம்பெறும் திருவிழாக்களில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (க)

# சட்டவிரோத மீன்பிடி அழிந்தன இறால்கள்

## மீனவர்களுக்கு பெரும் ஏமாற்றம்

வடமராட்சி, மார்ச்,18

**இறால் சீசன் முடிவடைகின்ற போதும் கடலில் இறால்களின் பிடிபாடு மிகவும் குறைவடைந்துள்ளது என்று வடமராட்சி கிழக்கு மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். கடந்த டிசெம்பர் மாதம் இறால் பிடிபாடு சீசன் ஆரம்பிக்கப்பட்டு, 3 மாத காலத்தில் முடிவடையும். அவ்வாறு பிடிபாடு காலம் முடிவடைகின்றபோதும், இறால்கள் சிக்கவில்லை என்று மீனவர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.**

வருடாந்தம் டிசெம்பர் மாதம் தொடக்கம் பெப்ரவரி மாதம் வரையான 3 மாத காலப்பகுதியில் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி ஆகிய கடல் பகுதிகளிலும் வங்காள விரிகுடாவுடன் இணைந்த சுண்டிக் குளம் தொடுவாயிலும் பல லட்சம் ரூபா பெறுமதியான இறால்கள் பிடிக்கப்படுகின்றமை வழமை. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரத்திலும் குறைவிருந்ததில்லை. ஆனால் இம் முறை வரலாற்றில் இல்லாதவாறு இக் கடல் பகுதிகளில் இறால்கள் பிடிபடவில்லை. சீசன் காலத்தின் போது பெருமளவு வருமானத்தை எதிர்பார்த்த மீனவர்கள் தற்போது ஏமாற்றமடைந்துள்ளனர். வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சட்ட விரோத மீன்பிடிச் செயற்பாடுகளும், இழுவைப் படகுகளின் அத்துமீறல்களும் இருந்துவருகின்றமையால், அவை இறால்களின் இனப் பெருக்கத்துக்கு பெரும் தடையை ஏற்படுத்தியுள்ளன. இதுவே இம் முறை இறால் சீசன் காலத்தின்



போது பெருமளவு இறால் பிடிபடாமைக்குக் காரணம் என்றும், இதனால் தற்போது வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளதாகவும் மீனவர்கள் கவலைவெளியிட்டுள்ளனர். (ப-173)



## அடிக்கல் நடும் நிகழ்வு


கொடிகாமம், மார்ச் 18

மிருசுவில் வடக்கு காளி கோவில் வீதி சீரமைப்புக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் நடைபெற்றது

நிகழ்வில் மிருசுவில் படித்த மகளிர் திட்ட துர்க்கை அம்மன் ஆலய சிவத்திரு ந. முகுந்தக்குருக்கள் ஆசி வழங்கி சமய சம்பிரதாயங்களை ஆரம்பித்து வைத்தார். ஒரு கிலோமீற்றர் நீளமான குறித்த வீதி 10 லட்சம் ரூபா செலவில் சீரமைக்கப்படவுள்ளது. (ஜ-159)

## எரியாத தெருவிளக்குகள் போக்குவரத்து பாதிப்பு

மன்னார், மார்ச் 18



நானாட்டான் பிரதேச சபைக்கு உட்பட்ட இராசமடு சாளம்பன் கிராமப்பகுதிகளில் உள்ள தெரு விளக்குகள் எதுவும் எரிவதில்லை. இதனால் போக்குவரத்தில் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர் என அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இப்பகுதியில் சிறு குழந்தைகளையும் இளம் பெண்களையும் கொண்ட அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அவசரத் தேவைகளுக்காகவும் மாலை நேர வகுப்புகளுக்காகவும் வெளியில் செல்ல முடியாமல் அச்சத்துடன் வாழகின்றனர் எனவும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

தற்போது இராசமடுப் பகுதி வீதிகளில் இனம் தெரியாதவர்களின் நடமாட்டங்களும், வாகனப் போக்கு வரத்துகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. எனவே வீதி விளக்குகளின் தேவை தொடர்பில் நானாட்டான் பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்று அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் தி.பரஞ்சோதி தெரிவிக்கையில் இராச மடுப்பகுதியில் தெருவிளக்குகள் எரியவில்லை என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். எரியாத மின் விளக்குகளைத் திருத்தும் பணி விரைவில் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (ஜ-213)

## திலகருக்கு அனுமதி மறுப்பு!

கொழும்பு, மார்ச் 18

2020 ஏப்ரல் 25 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ள பொதுத் தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. கூட்டணியின் பிரதித் தலைவரும், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவருமான பழனி திகாம்பரம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இதன்படி திகாம்பரம், இராதாகிருஷ்ணன், எம். உதயகுமார் ஆகிய மூவருமே நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர். இதற்கான வேட்புமனுவிலும் அவர்கள் நேற்று முன்தினம் கையொப்பமிட்டுள்ளனர். அதேவேளை, தமிழ் முற்போக்கு கூட்டணியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட எம்.திலகராஜுக்கு போட்டியிட வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. தேசியப்பட்டியல் ஊடாக அவருக்கு வாய்ப்பளிக்கப்படும் என கூட்டணியின் சார்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. (எ-44)

## மருத்துவர் தாக்கப்பட்டமைக்கு அதிகாரிகள் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச், 18

தாக்குதலுக்கு இலக்கானார் என்று தெரிவிக்கப்படும் சுகாதார வைத்திய அதிகாரிக்கு ஆதரவாகவும், அவர் மீதான தாக்குதலைக் கண்டித்தும், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஐஸ்கிறீம் விற்பனை நிலையம் ஒன்றில் இருந்த வெளிநாட்டைச் சேர்ந்தவர்களுக்கு கொரோனா தொற்றுநோய் தொடர்பாக அரசால் மேற்கொள்ளப்படும் தனிமைப்படுத்தல் அவசியம் என்பதை மருத்துவர் நந்தகுமார் வலியுறுத்தினார் என்றும், இதனால் அவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்றும் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தது. பொலிஸ்முறைப்பாட்டை அடுத்து, குறித்த தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்தே மருத்துவ அதிகாரிகள் சங்கம் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளது. தாக்குதல் சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுடன், காட்டுமிராண்டித்தனமான குறித்த தாக்குதலை அரச மருத்துவ அதிகாரிகள் சங்க, யாழ். பிராந்தியப் பணிமனை வன்மையாகக் கண்டிக்கிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-7)

## வல்வெட்டித்துறையிலும் ஒன்றுகூடுவதற்கு தடை

கரணவாய், மார்ச், 18

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்குமாறு வல்வெட்டித்துறைப் பொலிஸார் அறிவித்துள்ளனர். கொரோனா தொற்றுநோயை அடுத்து மக்களுக்கான பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே இந்த அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விளையாட்டுக்கழக மைதானங்களில் விளையாட்டுச் செயற்பாடுகளை நிறுத்துமாறும், வழிபாட்டுத்தலங்கள், மற்றும் வீடுகளில் இடம்பெறும் விசேட நிகழ்வுகளில் அதிகமானோர் ஒன்றுகூடுவதைத் தவிர்க்குமாறும் ஒலிபெருக்கி வாயிலாக பொலிஸார் இந்த அறிவித்தலை மக்களுக்கு வழங்கியுள்ளனர். வீதிகள் மற்றும் சந்திகளில் குழுமி நின்று உரையாடுகின்றமையைத் தவிர்க்குமாறும் பொலிஸார் அறிவித்துள்ளனர். (ப-108)

## கூட்டணிக்குள் குழப்பம்

வவுனியா, மார்ச் 18

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன் உட்பட்டவர்கள் யாழ்ப்பாணத்தை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றமையுடன், வன்னித் தொகுதியைப் புறந்தள்ளி கொழும்பில் இருந்து ஒருவரை வன்னித் தேர்தல் தொகுதியில் நிறுத்தியுள்ளனர் என்று கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ். சிறிதரன் தெரிவித்தார்.

வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, வன்னித் தேர்தல் தொகுதியில் வேட்பாளர்களை நியமிக்கும் பொறுப்பு எனக்கு மத்தியகுழுவால் வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா என அனைத்து மாவட்டங்களுக்கும் சென்றுவேட்பாளர்களைத் தெரிவு செய்திருந்தேன். அதன் பிரகாரம் வவுனியா மாவட்டத்தில் சந்திரகுமார் கண்ணனை வேட்பாளராகத் தெரிவு செய்தபோது, சிவசக்தி ஆனந்தனுடனும் உரையாடியிருந்தேன். அதன் பிரகாரம் நான் அவருக்கு வேட்பாளராக போட்டியிடுவதற்கு உத்தரவாதம் வழங்கியிருந்தேன். எனினும் இன்று வெளியில், நடமாட முடியாத வகையில் தமிழ் மக்கள் கூட்டணியினர் செய்து விட்டனர். கட்சியில் மத்திய குழு என்பது போலியாக உள்ளதே தவிர, அங்கு எதுவும் தீர்மானிக்கப்படுவதில்லை.

இந்த நிலையில் நான் தொடர்ந்தும் தமிழ் மக்கள் கூட்டணியில் அங்கம் வகிக்க விரும்ப வில்லை. இதன் காரணமாக வவுனியா மாவட்ட அமைப்பாளர் பதவியில் இருந்தும் உறுப்புரிமையில் இருந்தும் விலகிக் கொள்கின்றேன்.

யாழ்ப்பாணத்து தலைமையை எண்ணி நாம் செல்வது மடமைத்தனம். கிழக்கு மாகாணம் போல் வன்னியிலும் ஒரு தலைமை உருவாகுமாக இருந்தால் அதில் இணைந்து பயணிப்பேன். வன்னியில் இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றக் கூடிய நிலையில் வேட்பாளர்களைத் தெரிவு செய்துள்ள போதிலும், கொழும்பில் இருந்து ஒருவரை வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடவைத்துள்ளதமிழ் மக்கள் கூட்டணியானது, இன்று ஓர் ஆசனத்தைக் கூட பெற முடியாத அளவுக்கு உள்ளாகியுள்ளது- என்றார். (சு-110)

# பிடிவாதத்திலிருந்து உடன் இறங்க வேண்டும் கோத்தா

## இல்லையேல் மக்கள் கொதித்தெழுவர் என எச்சரித்தது ஐக்கிய தேசியக் கட்சி



**கொழும்பு, மார்ச் 18**

**“ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தமது பிடிவாதத்திலிருந்து உடன் இறங்கிவந்து நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும். இல்லையேல் நாட்டு மக்களே அவருக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலைமை ஏற்படும்” இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலர் அகிலவிராஜ் காரியவசம்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

“ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நாட்டு மக்களின் தலைவராகச் செயற்பட வேண்டும். ராஜபக்ஷ களின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக் கேற்ப அவர் செயற்படக்கூடாது. இலங்கையில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கத் தைக் கருத்தில்கொண்டு எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைக்குமாறும், நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்காக அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை உடன் கூட்டுமாறும் ஜனாதிபதிக்கு எமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இரு கடிதங்களை எழுதியிருந்தார். அவை தொடர்பில் ஜனாதிபதி இதுவரை அக்கறை செலுத்தவில்லை. இலங்கையில் திட்டமிட்டபடி ஏப்ரல் 25ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் என்று சார்க் நாடுகளின் தலைவர்களிடம் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இது அவரின் பிடிவாதப் போக்கையே எடுத்துக்காட்டுகின்றது. எனவே, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தமது பிடிவாதத்திலிருந்து உடன் இறங்கி வந்து நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும். இல்லையேல் நாட்டு மக்களே அவருக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலைமை ஏற்படும்’ என்றார்.

(ம-22)

# அமைதியான முறையில் வழிபாடுகள் செய்வோம்

## சர்வதேச இந்து இளைஞர் பேரவைத் தலைவர் தெரிவிப்பு

வவுனியா,மார்ச் 18

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக அனைத்து இந்துமத வழிபாட்டுத் தலங்களிலும் அமைதியான முறையில் அடியவர்கள் வழிபாடு ஆற்றவும். .இவ்வாறு சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் தலைவர் சிவஸ்ரீ.ஜெ.மயூரக்குருக்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

“இன்று உலகநாடுகளை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் பல மனித உயிர்களை காவு கொண்டுள்ளதுடன் மிக வேகமாகப் பரவியும் வருகின்றது.

அதனை மேலும் பரவாமல் செய்ய பல வழிகளை எமக்குச் சொல்லியிருக்கின்றது மருத்துவத்துறையும், அரசாங்கமும். எனவே அவற்றை செய்ய வேண்டியது அனைவரது கடமையுமாகும்.

இந்த நோய்த்தாக்கத்தில் இருந்து நாம் அனைவரும் காக்கப்பட வேண்டுமேயானால் சில முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டிய கடமை அனைவருக்கும் உண்டு.

தொடுகைகள் மற்றும் சுவாசங்கள் மூலம் பரவுவதால் பலர் ஓரிடத்தில் சேரும் போது அதனுடைய பரம்பல் பரவலடையும்.

எனவே அப்படியான சந்தர்ப்பங்களை அனைவரும் தவிர்த்துக்கொள்வோம். இது அனைவரது உயிர்சார்ந்த நடவடிக்கையாகும். அதனால் நாம் ஆலயங்களில் தற்காலிகமாக அதிகமாக கூடுவதைத் தவிர்க்கலாம். பொது நன்மைகள் கருதி அவற்றைக் குறைத்துக் கொள்வதில் எந்த இடையூறுகளும் ஏற்படப்போவதில்லை. வழமையான வழிபாடுகளுக்கும் எந்த குந்தகமும் ஏற்படப்போவதில்லை. எனவே மருத்துவர்களின் ஆலோசனைப்படி அவற்றை மேற்கொள்ளும் வகையில் ஆலயம் சார்ந்தோர்கள் இந்த அறிவித்தலை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்” - என்று தெரிவித்தார்.

(ஐ-110)

# நோய்த்தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவோருக்கு முக கவசங்கள்



மூளாய்,மார்ச் 18

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை கிராமிய மட்டத்தில் மேற்கொள்ளும் அரச அலுவலர்களுக்கு அவர்களின் பாதுகாப்பு கருதி தேவையான முக கவசங்கள் மற்றும் கையுறைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான பணிப்புரைகளை பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள மகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு விடுத்துள்ளது

இது தொடர்பான சுற்றுநிருபங்களை தொடர்புடைய அனைத்து திணைக்களங்களுக்கும் மேற்படி அமைச்சு அனுப்பிவைத்துள்ளது.

(ஐ-121)

# மருத்துவமனைக்குள்ளே நோயாளி மீது தாக்குதல்

## *10 பேர் கொண்ட கும்பல் வெறித்தனம்*

சாவகச்சேரி. மார்ச்.18

மருத்துவமனை விடுதியில் அனுமதிக்கப்பட்ட நோயாளியை மருத்துவமனை வளாகத்தில் வைத்து தாக்குதல் நடத்திவிட்டு தப்பியோடியுள்ளது பத்துக்குமேற்பட்டோரைக் கொண்ட கும்பல்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள மருத்துவமனையில் இடம்பெற்றுள்ளது. கையில் கத்திவெட்டுக் காயத்துடன் மருத்துவமனைக்கு வந்த கச்சாய்ப் பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞர் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். மாலை நான்கு மணிக்குப் பின்னர் மருத்துவமனைக்கு வந்த கும்பல் அலைபேசி மூலம் இளைஞருடன் தொடர்பு கொண்டு அந்த இளைஞரை வெளியே வரச் செய்து மருத்துவமனை வளாகத்துக்குள் வைத்து மோசமாகத் தாக்கியுள்ளனர். தடுக்கச் சென்ற பாதுகாப்பு உத்தியோகத்தரும் தாக்குதலுக்கு இலக்கானார் என்று தெரிவிக்கப்படுகிறது. தாக்குதல் சம்பவம் தொடர்பாக அறிவிக்கப்பட்டு பொலிஸார் அங்கு வரவே கும்பல் அங்கிருந்து தப்பியோடியுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ப-9)

# மன்னாரில் மத அரசியல் சிவகரன் குற்றச்சாட்டு

மன்னார்,மார்ச் 18

மன்னாரில் மத ரீதியான தேர்தல் அரசியல் தமிழ் மக்களின் இருப்பை மிக மோசமாகப் பலவீனப்படுத்தும் செயலாகும். இந்துக்களும், கத்தோலிக்கர்களும், தனித்தனியாக தேர்தலில் போட்டியிட முனைகின்றமை தமிழ்த்தேசிய அரசியலின் தற்கொலைக்கு சமனானது என்று தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் எங்குமில்லாத அளவுக்கு மத முரண்பாடு மன்னாரில் அதிகமாகக் காணப்படுவது யாவரும் அறியாமல் இல்லை.

இந்த முரண்பாட்டை அரசியல் தலைமைகள் சீர் செய்திருக்க வேண்டும். மதரீதியாக தேர்தலில் போட்டியிடுவது என்பது முற்றிலும் தவறானது. இது நீண்டகால அடிப்படையில் தமிழ் மக்களின் இருப்பைக் கேள்விக்குட்படுத்துவதுடன் மதரீதியான முரண்பாட்டையும் மிக மோசமாக அதிகரிப்பதுடன், தமிழ்த்தேசியத்தை நலிவடையச் செய்து, தமிழ் மக்களின் இருப்பைக் கேள்விக்குட்படுத்தும். ஏட்டிக்குப் போட்டி அரசியல் எதிரிக்கே இலாபமாகும். எல்லோரும் இனத்தைப் பற்றி சிந்திக்காமல் தத்தமது சுயத்தைப்பற்றி சிந்திப்பதே இத்தகைய முரண்பாட்டுக்கும், சுய இலாப முடிவுகளுக்கும் தனித்தனி வழி நகர்வுகளுக்கும் காரணமாகும். ஆகவே தமிழ் மக்கள் இவ்வாறு பிளவுபடுகின்றமை எதிர்கால இருப்புக்கு ஆரோக்கியமானது அல்ல என்பதை யாவரும் புரிந்து கொள்ள வேண்டும். மக்கள் இவ்வாறானவர்களுக்கு தகுந்த பாடத்தைக் கற்பிப்பார்கள் என நம்புகின்றோம்-என்றுள்ளது.

(க-56)

# சிறுவர் மகிழ்களத்துக்கு பூட்டு

வடமராட்சி,மார்ச் 18

பருத்தித்துறை நான்காம் குறுக்கு தெருவில் அமைத்துள்ள சிறுவர் மகிழ்களம் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. கொரோனா தொற்று நோய் காரணமாக மக்கள் ஒன்றுகூடலை தவிர்க்கும் நோக்கில் சிறுவர் மகிழ்களம் மூடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை நகர சபைத் தவிசாளர் ஜோசப் இருதயராஜா தெரிவித்துள்ளார்.

(ஐ-173)

# மன்னித்து மகிழ்வடைவோம்!

அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன். இனிமேல் நான் உம்முடைய மகன் எனக் கூறத் தகுதியற்றவன். என்னை உமது கூலியாள்களில் ஒருவனாக வைத்துக்கொள்ளும் (லூகா 15:18-19). இது தன்பங்கைப் பிரித்துச் சென்று தாறுமாறாக தவறுகள் புரிந்து சொத்தை அழித்து அறிவு தெளிந்து மனம் மாறி திரும்பிவந்த மைந்தனின் அழுகுரல்.




பசியில் வாடும் மனிதருக்குத்தான் தெரியும் உணவின் அருமை. வறுமையில் வாழும் மக்களுக்குத்தான் வறுமையின் கொடுமை தெரியும். நோயாளிக்குத்தான் உடல்நலத்தின் மேன்மை தெரியும். விழுந்தவனுக்குத்தான் தெரியும் எழுந்து நிற்பதன் கடினம். பாவ வாழ்வில் மூழ்கியவனுக்குத்தான் தெரியும் மனம்மாறிய புதிய வாழ்வு வாழ்வதன் அருமை. ஊதாரி மைந்தனின் கடந்த கால துன்பமான வாழ்வுதான் மனமாற்றத்துக்கு வழிவகுத்தது. மனம் திருந்தி தந்தையை நோக்கிச் செல்லவேண்டும் என்ற ஆர்வத்தைக் கொடுத்தது அவனது வழிதவறிய வாழ்வுதான்.

எந்த ஒரு மனிதரும் தனது குற்றத்தை உணர்ந்து மனமாற்றம்பெற விரும்புகிறாரோ அவர் உண்மை வாழ்வைக் கண்டுகொள்வார் என்பதை இது உணர்த்துகின்றது. குற்றமுணர்ந்து உடைந்த உள்ளத்தை மன்னித்து அரவணைக்க பரிவுமிக்க இறைவன் காத்திருக்கிறார். மனம்மாற எமக்கு கொடுக்கப்பட்ட தவக்காலத்தை தகுந்த முறையில் அனுசரித்து மனமாற்றம் பெற்று மன்னித்து மகிழ்வடைவோம்.

**எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை**


நீங்கள் கற்பிப்பதை விட, நீங்கள் எப்படிப்பட்டவர் என்பதிலிருந்தே குழந்தைகள் அதிகம் கற்றுக்கொள்கிறார்கள்.



டபிள்யூ. இ. பி. டு போய்ஸ்

குமுதினி அற்புதராசா
யாழ். பல்கலைக்கழகம்

# இளையோர் தற்கொலைகள் மலிந்தமை ஏன்?



ஒரு சமுதாயத்தின் பிரதிபலிப்பாக விளங்குபவர்கள் இளம் சமுதாயத்தினர். மனித குலத்தின் வளர்ச்சி, வீழ்ச்சி என்பவற்றை நிர்ணயிப்பதும் இந்த காலத்திலே வாழுகின்ற இளம் தலைமுறையினரே. "இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் " என்று கூறப்படுகிறது. அவ்வாறாக நாட்டைக் கட்டியெழுப்பும் சகல செயற்பாடுகளிலும் தூண்களாகக் காணப்படும் இளம் சமுதாயத்தினர் தற்காலத்திலே தமது நேரிய பார்வையைத் தவிர்த்து தடம் மாறிச் செல்லும் காரணத்தினாலேயே சமூகச்சீர்கேடுகள் ஏற்படு கின்றமையும், அவர்களது இந்த நெறி பிறழ்ந்த வாழ்க்கை முறை தற்கொலைவரை அவர்களை இட்டுச்செல்கின்றது.

ஆரம்பகாலத்திலே கீழ்ப்படிவு, பக்தி, மதிப்புக் கொடுத்தல், குருபக்தி, தன்னம்பிக்கை, வீரம், ஒழுக்கம், கல்வி அறிவு, கலைகள் என உலகமே திரும்பிப்பார்க்கும் அளவுக்குத் தமிழனின் வாழ்வியல் சிறப்பாகக் காணப்பட்டது. கலைகளின் களமாகத் தமிழினம் இருந்தது. மொழிகளின் பழமையினாலும், வாழ்வியல் வழமையினாலும், பண்பாட்டின் உயர்வினாலும், மக்களின் உயர்வினாலும், மக்களின் ஒற்றுமையினாலும்,தமிழினம் தலை நிமிர்ந்து வாழ்ந்து வந்தது. தற்காலச் சூழ்நிலைகளினால் வெவ்வேறு தாக்கங்கள் படிப்படியாக தமிழ் மரபிலே கலந்து வருகின்றன.



**இளம் சமூகத்தினர் மத்தியில் தலைதூக்கும் மனப்பிறழ்வு**

அந்தவகையில், எமது பிரதேசங்களை எடுத்து நோக்கும் போது, தற்காலத்தில் அதிகமாகப் பரவிவரும் ஒரு முக்கியமான பிரச்சினையாக, இளம் சந்ததியினரின் தற்கொலைகள் மிகவும் அதிகமான நிலையில் காணப்படுகின்றன. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், என கல்விப்பாதையில் பயணிப்பவர்கள் ஆயினும், வளர்ந்து வரும் இளம் தலைமுறையினராயினும், காரணமின்றிய தற்கொலைச் சம்பவங்கள் அரங்கேறிக்கொண்டு செல்கின்றன. தற்காலத்திலே பெற்றோருக்கே காரணங்கள் தெரியாத அளவுக்குப் பிள்ளைகளின் தற்கொலைகள் மர்மமான புதிராகக் காணப்படுகின்றன. கட்டுப்பாட்டுடன் கவனமாக வளர்க்கப்பட்ட பிள்ளைகள் கட்டவிழ்த்து விடப்பட்ட சமுதாயமாகத் தற்காலத்திலே வாழப் பழகிவிட்டார்கள். உள ஆரோக்கியமிக்க பொழுதுபோக்குகளையும், உடல் ஆரோக்கியமிக்க விளையாட்டுக்களையும் மறந்து, போதைப் பொருள்களின் பாவனை, இணையம் மற்றும் தவறான தொடர்பு சாதனங்கள், சினிமா மோகம், நாகரிக நெறிப்பிறழ்வுகள் இவற்றால் ஏற்படும் எதிர்ப்பால் இனக்கவர்ச்சிகள் என எமது இளையோர் சமுதாயம், கலாசாரத்தை மறந்து மிகவும் கீழ்மட்டரக வாழ்வியலை உள்வாங்கியே வாழ்கிறது.

**எம் இளையோர்களுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு எம்முடையதே!**

ஒழுக்கமான சமுதாயமாக ஒரு காலகட்டத்திலே எம் இளம் தலைமுறையினர் இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் தற்கால சமுதாய அமைப்பு முறையில் தனித்து ஏட்டுக்கல்விக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கும் பெற்றோர், இணைபாடவிதானச் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமையும், இளம் சந்ததியினரின் உடல், உள, ஆரோக்கிய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக அமைகின்றன. இந்த செயற்பாடுகள், இளையோர்கள் மத்தியில் விட்டுக்கொடுப்பு, சகிப்புத்தன்மை, அர்ப்பணிப்பு ஆகியவற்றை இல்லாது செய்கின்றன. இதனால்தான் வன்முறைகளும், தற்கொல்ல எண்ணங்களும் மேலோங்கி வருகின்றன.

எமது சமூகம், ஒவ்வொரு குடும்பத்திலும், பாடசாலையிலும், தனியார் கல்வி நிலையங்களிலும், சமயச் செயற்பாட்டு நிறுவகங்களிலும், சமூகத்தில் காணப்படும் பல்வேறு அமைப்புக்களிலும், பல்கலைக்கழகங்களிலும் என எமது மாணவர்களின் கல்வியிலே அக்கறை செலுத்துவது மட்டுமல்லாது அவர்களின் தன்னம்பிக்கையான வாழ்விலும் அக்கறை செலுத்த வேண்டும்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே
அது நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும்
அன்னை வளர்ப்பினிலே"

என்ற கூற்றுக்கு இணங்க, ஒவ்வொரு தாயும் தமது பிள்ளைகளுக்கு இந்த பிரபஞ்சத்திலே வாழுகின்ற தைரியத்தை ஊட்டி வளர்க்க வேண்டும். வெறும் புத்தகப் பூச்சிகளாகக் கல்வியிலே வாழ்க்கையை நடத்தும் எமது பிள்ளைகளுக்கு பிரச்சினைகளை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும், அவற்றை யாரிடம் சொல்ல வேண்டும், எவ்வாறான தீர்வு காண வேண்டும் என்ற அடிப்படை அறிவே இல்லாது மனப் பயத்தினாலும், சமுதாய அடக்குமுறைகளுக்குப் பயந்தும் தமது உன்னதமான உயிர்களை மாய்க்கின்றனர். தரம் 10, 11 படிக்கின்ற ஒரு மாணவனுக்கு பெரிதான பிரச்சினை வருவதற்கு வாய்ப்பு இல்லை. அவனின் கல்விச்சூழல், நண்பர்கள், போதைப்பொருள் பாவனைகள், வாழ்வியல் அடிப்படைச் பிரச்சினைகள், என ஓரளவு தீர்வு காணக்கூடியதான பிரச்சினை தான் இருக்கும். அதற்கு அவர்கள் தமது பெற்றோர், ஆசிரியர்கள், நம்பிக்கையான உறவுகளைக் கொண்டு தமது பிரச்சனைக்குத் தீர்வு காண முனைய வேண்டும்.

**பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வெற்றி காண்பது மாணவ சமூகத்தின் கைகளிலேயே**

தற்கொலை செய்து கொண்டு உயிரை மாய்த்துக் கொள்வதற்காக கைகளிலே கயிறு எடுக்கும் ஒவ்வொரு இளசுகளும், இந்த உலகத்திலே இவ்வளவு காலமும் பெற்றோர் அவர்களை வளர்த்தெடுக்கப்பட்ட பாடுகளை, தியாகங்களை நினைத்துக் கொள்ளுங்கள். யுத்த காலத்திலே இழந்த உயிர்களின் மதிப்புக்களை நினைத்துப் பார்த்தல் அவசியம். எந்தப் பிரச்சினை வந்தாலும் அவற்றை எதிர்த்து எதிர் நீச்சல் போட்டு வாழப்பழகிக் கொள்ள வேண்டும். தமதுயிரைத் தாமே போக்கிக் கொள்ளத் தைரியம் இருக்கும்போது, வாழ்வது என்ன அவ்வளவு கடினமா? இல்லை நிச்சயம் கடினமில்லை. இளம் சந்ததியினரை அழிப்பதற்கான பல இடர்பாடுகள் அவர்களை குறிபார்த்த வண்ணம் நெருங்கி வந்து கொண்டிருக்கின்றன. அவற்றை எதிர்த்து இளையோர் தம் திறமைகளை வளர்ப்பது அவசியமாகும். மதுபாவனை , அந்நிய கலாசாரம், கைத்தொலைபேசிகளின் திடீர் பாவனையென் பல்வேறு வகையாக அவதரித்த உயிர் கொல்லும் அரக்கர்களின் வருகை காரணமாக அவற்றிலே மூழ்கி விழுந்து எழ முடியாமல் தவிக்கின்ற நிலை மாற வேண்டும். இனிமேலாவது எமது இளம் சந்ததியினர் தற்கொலை எண்ணங்களிலிருந்து மீள வேண்டும்.

அன்னம் எவ்வாறு பாலும் நீரும் கலந்த பாத்திரத்திலிருந்து பாலை மட்டும் பிரித்து உண்ணுகின்றதோ அவ்வாறே நமது இளைய சந்ததியினரும் நவீன உலகின் வளர்ச்சித் தாக்கத்திலே நல்லனவற்றை மட்டும் எடுத்துத் தீயனவற்றை விலக்கி நல்லதொரு சமுதாயத்தை கட்டியெடுப்ப தயாராக வேண்டும். வாழும் வாழ்க்கை ஒருமுறைதான். அதை நல்ல வழியில் வாழ்ந்து திருப்தி கொள்வோம்.









பண்ணாகம் அம்பாள் கலை மன்றத்தின் அனுசரணையுடன் கடந்த 8ஆம் திகதி அன்று பண்ணாகம் அம்பாள் கலை மன்றத்தின்மண்டபத்தில்'மூச்சுக்காற்றின் முணுமுணுப்பு'கவிதை நூல் வெளியீடு இடம்பெற்றது. பண்ணாகம் வடக்கு அ.த.க. பாடசாலையின் அதிபர் திருமதி அபிராமி சிவபவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நூலின் முதற் பிரதியைப் பேராசிரியர் சிவலிங்கராசா வெளியிட்டு வைத்தார்.

அவர் உரையாற்றும் போது,

"கவிதைகள் அனைத்தும் சமகாலச் சித்திரிப்புக்களாக உள்ளன. கவிதைகளைச் சொல்லும் முறையில் கலைத்துவம் மிகுந்து காணப்படுகின்றது. பெரிய எழுத்தாளர்களெல்லாம் ஆரம்பத்தில் கவிதைகளையே எழுதியிருக்கிறார்கள். புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், எஸ்.பொன்னுத்துரை போன்றோர்கள் இவ்வாறு குறிப்பிடத்தவர்களில் சிலர்" என்றார்.

# நூல் வெளியீடு

















எழுத்தாளர் அருணா செல்லத்துரையின் 'அடங்காப்பற்று வன்னியில் ஆதித்தமிழர்கள்' பகுதி-2 நூல் வெளியீட்டு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ஊடகத்துறையில் அருணா செல்லத்துரை அவர்களின் ஐம்பது வருடப் பூர்த்தியை முன்னிட்டு இந்த நூலானது மன்னார் சிவபூமி இந்து இளைஞர் மன்றத்தினரால் கடந்த 8ஆம் திகதி காலை 9.30 மணியளவில் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் வெளியீடு செய்யப்பட்டது

இந்த நூலின் ஆய்வுரையை மன்னார் கல்வி வலயத்தின் இந்து சமய ஆசிரிய ஆலோசகர் ச.ரமேஸும் வாழ்த்துரையை மூத்த இலக்கிய ஆய்வாளர் மு.சுந்தரம் பாண்டியனும் வழங்கியிருந்தனர். இந்த நூல் திருக்கேதீச்சரத்தின் வரலாறுகள், இலங்கையின் ஆதிக்குடிகள் இயக்கர், நாகர் போன்ற தகவல்களும், வன்னியர்களின் அரசாட்சி போன்ற பயனுள்ள தகவல்களை உள்ளடக்கியதாகவும் அமையப்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் சி.குணபாலன் கலந்து கொண்டார்.

மேலும் திருக்கேதீச்சர ஆலயத்தின் பிரதம குரு கருணானந்த குருக்கள், திருக்கேதீச்சர திருப்பணிச்சபையின் இணைச்செயலாளர் எஸ்.இராமகிருஷ்ணன், திருக்கேதீச்சர ஆலய சபை நம்பிக்கைப் பொறுப்பாளர் அ.பிருந்தாவனநாதன், மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் வைத்தியர் மு.கதிர்காமநாதன், சட்டத்தரணிகளான தர்மராஜ் வினோதன், டினேசன் செல்வராஜ், மன்னார் மாவட்ட சித்த வைத்திய அதிகாரி றோகினி பூபாலசிங்கம், மன்னார் சிவ பூமி இந்து இளைஞர் மன்றத் தலைவர் சீ.சிறிஸ்கந்தராஜா, செயலாளர் மா.நடேசானந்தன் போன்றவர்களுடன் வரலாற்று இலக்கிய ஆர்வலர்களும் கலந்து சிறப்பித்தனர். (213)

# சமாதான நீதிவான்கள்



யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இந்து ம.வி. அதிபரும், தேசிய கல்வி நிறுவன கல்விமாணிப் பட்டக் கற்கைநெறி விரிவுரையாளரும், இலங்கை மத்திய வங்கியின் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் களப் பரீட்சகரும், யாழ்ப்பாண மாவட்ட சாரணர் சங்கத்தின் நிறைவேற்று அதிகாரசபை உறுப்பினருமான கணபதிப்பிள்ளை தவகீஸ்வரன் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர், சிறந்த சமூக சேவையாளரும் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றி வந்தவருமாவார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (17)



சுன்னாகம், உடுவில் இராமலிங்கம் வீதி, சேர்ந்த பேரின்பநாயகம் மயூரதன் அகில இலங்கை சமாதான நீதிவானாக வடமாகாண மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேமசங்கர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுள்ளார். இவர் உடுவில் மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவன் ஆவார். சமூக சேவையாளரான இவர் வலிகாமம் தெற்கு (உடுவில்) பிரதேச செயலகப் பிரிவின் கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றி வருவதோடு" உடுவில் அகிலன்" சன சமூக நிலையத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராகவும், குறித்த நிலையத்தின் செயலாளராகவும், உடுவில் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் முன்னாள் தலைவராகவும், முன்னாள் செயலாளராகவும், தற்போதைய நிர்வாகசபை உறுப்பினராகவும் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினராகவும் கிராம மட்ட அமைப்புக்கள் பலவற்றில் உறுப்பினராகவும் சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது

# "சமூக கலா வித்தகர்"

## விருது வழங்கிக் கௌரவிப்பு



தொல்புரம் பத்தானைக்கேணியைச் சேர்ந்த சமய, சமூக சேவையாளரும், பல்துறைக் கலைஞருமான கந்தப்பு லோகேஸ்வரனுக்கு வட இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கம், சமய, சமூக, கலை, கலாசாரம் போன்ற துறைகளில் ஆற்றிய சேவைக்காக "சமூக கலா வித்தகர்" என்கின்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இந்த விருது கடற்றொழில் மற்றும் நீர்வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

இவர் அகில இலங்கை சமாதான நீதிவான் என்பதும் தேசமானிய, தேசோதய தீபம், சமூக திலகம் சமூக மாமணி போன்ற பல உயர்விருதுகளைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆர். கே.மேனன்
ஆசிரியர்
கொக்குவில் இந்துக் கல்லூரி

# தென்னிலங்கை வியாபார முற்றுகையால் திணறித் தவிக்கும் சுதேச வியாபாரிகள்

ஒவ்வொரு வாரமும் 'வாரமொரு காரம்', பொதுமக்களின் குறிப்பாக வட மாகாணத் தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகளை வெளிக் கொண்டு வருகின்றது. இதனுடன் தொடர்புடைய அதிகார வர்க்கங்களுக்கு அவற்றை எடுத்துக் கூறுவதனூடாக அப் பாவிப் பொதுமக்களின் பிரச்சினை களைத் தீர்ப்ப தற்கான முன் நடவடிக்கை களை மேற்கொள்கின்றது.

"யாரையும் யாரும் குறைகூறி எந்தப் பயனும் இல்லை. நிறைவுக்காக அனைவரும் முயற் சிக்க வேண்டும்" என்பதே காரத்தின் அறைகூவலா கும். அப்பாவிப் பொதுமக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்வது சமூகப் பத்திரிகைகளின் தலை யாய கடமையாகும். அந்த வகையில், உங்கள் பிரச் சினைகளுக்கு எழுத்தின் மூலம் சில அழுத்தங்க ளைக் கொடுப்போம். அந்த வகையில் இந்த வார காரத்தில் சுதேச வியாபாரிகளின் நிலை தொடர்பாக நோக்குவோம்

### யார் சுதேச வியாபாரிகள்?

இங்கு 'சுதேச வியாபாரிகள்' என்பதன் வரையறை, நீண்டகாலமாக குறித்த உள்ளூராட்சி நிறுவனங்க ளுக்கு (மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை) வரி செலுத்தி, நிலையான கட்டடத் தொகுதியில் முறை யான அனுமதியைப் பெற்று இயங்கி வரும் வியாபார நிலைய உரிமையாளர்களாவர். இவர்கள் எதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வரி செலுத்துகின் றார்கள்? வருமான வரி எனும் பெயரில் தமது வருமா னத்தில் ஒரு பகுதியை எதற்காக அரசுக்குச் செலுத்து கின்றனர்? இதனால் இவர்களுக்கு என்ன பயன்? உள்ளூராட்சி நிறுவனங்கள் இதற்காக இவர்களுக்கு என்ன பரிகாரம் செய்கின்றன? ஏராளமான முதலீடு



களைக் கொட்டிவிட்டு, கடை வாடகை, கடை முற்பணம், தொழிலாளர் கூலி போன்ற இதர செலவுகளின் மத்தியில் அங்கும் இங்கும் கடன்பட்டுச் சொத்துச் சுகங்களை விற்று எதிர்காலத்திலாவது எமக்கு விடிவு வராதா? என்று காத்திருக் கும்போது, எங்கோ இருந்து வரும் தென் னிலங்கை வியாபாரிகள் எந்த அனுமதிகளையும் பெறாது, எவருக்கும்வரிசெலுத்தாது, திருட்டுத்தனமாக வியாபாரம் செய்து சுதேச வியாபாரிகளின் வாழ்வியலையேசீரழித்துவிட்டுச்செல்லஎதற்காகஉள்ளூராட்சி நிறுவனங்கள் அனுமதிக்கின்றன?

### பொறுப்புடன் சிந்திப்போம்

பெயரோடும், புகழோடும் இருந்த எத்தனையோ வியா பாரிகள் இன்று முகவரி தெரியாது தொலைந்துவிட் டார்கள். குடும்பங்கள் சீரழிந்து விட்டன. தூக்குவரை துணிகின்ற நிலைக்குக் கடன் சுமைகள் பலருக்கு அதிகரித்துவிட்டன. 'அகலக்கால் வைத்தார்கள், அதி கம் ஆசைப்பட்டுவிட்டார்கள்' என்பது எல்லாம் தனிப் பட்ட விமர்சனங்களாக இருப்பினும், இது தற்போது பொதுமைப்பட்ட பிரச்சினையாக ஆகிவிட்டுள்ளது. எம்மால் அவர்களுக்கு என்ன செய்ய முடியும் என் பதை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். அமைச் சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று பலர்



இருப்பினும், எவர் மக்கள் பிரச்சினைகளை ஆழமா கப் பார்க்கின்றார்கள்? தீர்வுகள் தேட வேண்டும் என் கின்ற திசை முகங்களில் எவர் செயற்படுகின்றார்கள்? நடைபாதை வியாபாரிகளை ஏன் கட்டுப்படுத்த முடி யாமல் இருக்கின்றது. அரசியல் அதிகாரத் தரப்பி னர்களது அழுத்தங்களா? பெரும்பான்மை சிறு பான் மையைப் பாதிக்கும் பக்கங்களில் வியாபாரமும் முன் னிலைக்கு வந்துவிட்டது. பெரு நிலப்பரப்பில் பெரும் பான்மையாக இருக்கும் வியாபாரிகள் அரசியல் பலத்துடன் சிறுபான்மைப் பிரதேச வாடிக்கையாளர் களையும் முற்றுகையிட்டால் சிறுபான் மைச் சுதேச வியா பாரிகளால் மீட்சி பெற முடியாது.

### வணிகர் கழகங்களின் பொறுப்பென்ன?

மக்களுக்குச் சேவை செய்யும் மக்கள் தலைவர்கள் இன்று இல்லாதமை போல், வணிகர்க ளுக்காக இன்று வணிகர் கழ கத் தலைவர்களும் இல்லை. அடுத்த தேர்தலில் தாம் கள மிறங்க அத்திபாரமிடும் பதவிக ளாகவே இதனை அவர்கள் பார்க்கின்றார்கள். உண்மை யில் இந்தப் பிரச்சினைக்குச் சட்ட ரீதியான அணுகுமுறையில் சென்று தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் அதி காரம் அவர்களுக்கு உண்டு. இல் லையேல் எதற்காக வணிக கழகங் களில் அங்கத்துவப்பணம் கட்டி அங்கத்தவர்களாக வணிகர்கள் இருக்க வேண்டும்? இப்பிரச்சி னைக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களில் முதன் மையானவர்கள் உள்ளூராட்சி நிறுவனங்கள் என் றால் அடுத்துப் பொறுப்புக்கூற வேண்டிவர்கள். வணிகர் கழக நிர்வாக உறுப்பினர்களே ஆவர்.

### தரமற்ற பொருட்சந்தை

வியாபாரிகளின் பிரச்சினை என்பது ஒருபுறமிருக்க வாடிக்கையாளர்களுக்கும் இது பெரும் பிரச்சினை யேயாகும். தரமற்ற பொருள்கள், தர நிர்ணய கட்டுப் பாட்டுக்கு அப்பால் உட்கொண்டு வரப்பட்ட விற்பனை செய்யப்படுகின்றன. குறைந்த விலை என்று ஆதங் கப்பட்டு மக்கள் அதனை வாங்குகின்றார்களே தவிர அதன் தரம் என்ன? உணவுப் பொருள்களாயின், அவை எங்கு யாரால் உற்பத்தி செய்யப்படுகின்றன? அவை தரச்சான்றிதழுக்கு உட்படுத்தப்பட்டனவா? என்பது தொடர்பாக எவரும் நோக்குவதில்லை. அண் மையில் மட்டக்களப்பில் உற்பத்தி செய்யப்பட்ட நூடில்ஸ் தொடர்பாக பெரும் சர்ச்சை இடம் பெற்றமை அனைவரும் அறிந்ததே. "கருத்தடை மாத்திரை கலக்கப்பட்டுள்ளது" என்பது தொடர்பாக முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டில், அனுமதியின்றி நீண்ட நாள்கள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தமை கண்டறியப்பட்டது. இதன் மொத்த கொள் வனவு விற்பனையாளர்கள் பற்றி எடுக்கப் பட்ட தகவலில், அனைத்தும் கறுப்புச் சந்தையூடாக இடம்பெற்ற விற்பனையே என்பது நிரூபணமானது. அதாவது மிகக் குறைந்த விலையில் நிறைந்த பயன் உள் ளதாக அனைவரும் விரும்பி வேண்டிய பொருளாகவே அது விற்பனை செய்யப்பட் டது. இவ்வாறான மிகப் பெரிய ஆபத்துக்கள் கூட முறையற்ற சந்தைப்படுத்தல் மூலம் ஏற்படும்.


### தீர்வு என்ன?

ஒரே ஒரு தீர்வு மட்டுமே இதில் உள்ளது. அது யாதெ னில், உள்ளூராட்சிச் சட்டங்கள் மூலம் நடைபாதை வியாபாரத்தை மட்டுப்படுத்த வேண்டும். மாற்றுத் தீர்வுகள் பல கடந்த காலங்களில் நடைமுறைப்படுத் தப்பட்டன. அவையும் பின்னர் பலவீனமானவையாக வும், கட்டுப்பாட்டை மீறுவனவாகவும் உருமாறின. அவை யாதெனில், சுதேச வியாபாரிகளின் சந்தை இடம்பெறாத ஞாயிறு விடுமுறை தினங்களில் இந்த நடைபாதை வியாபாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட் டது. இந்த நடைமுறையில் இரண்டு பாதகமான பக் கங்கள் இடம்பெற்றன.

இதனால் சுதேச வியாபாரிகளின் சந்தை வாய்ப்பு அனைத்தும் பறிபோயின, ஞாயிறு தவிர்ந்த மற்றைய நாள்களிலும் கட்டுப்பாட்டை மீறி நடைபாதை வியா பாரம் இடம்பெற்றது. சிறுபான்மை இனங்கள் குழுமி வாழும் சிறு பிரதேசங்களே தமிழ்ப் பிரதேசங்களாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர்களின் தேவை ஞாயிறு தினங்களில் நடைபாதை வியாபாரிகள் மூலம் நிறைவு செய்யப்பட்டு விட்டால், எஞ்சிய நாள் களில் சுதேச வியாபாரிகளுக்கு பெரிய அளவில் வியாபார வாய்ப்புக் கிட்டாது.

இவ்வாறு ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் கொடுக் கப்பட்ட அனுமதியை மீறி மற்றைய நாள்களிலும் வியாபாரம் செய்ய எத்தனிக்கும் செயற்பாடு பிற் காலத்தில் இடம்பெறத் தொடங்கின. இதனால் இவ்வா றான மாற்றுத் தீர்வுகள் பற்றி சிந்திக்காது உள்ளூராட் சிச் சட்டங்கள் மூலம் இதனை முற்றாக கட்டுப்படுத்த முனைய வேண்டும். உள்ளூராட்சி நிறுவனக் கட்ட மைப்பு 3 சட்டத் தயாரிப்புக்கள் மூலம் நிர்வகிக்கப்படு கின்றன. மாநகர சபை கட்டளைச் சட்டம் (1947), நகர சபை கட்டளைச் சட்டம் (1939)மற்றும் பிரதேச சபைக் கட்டளைச் சட்டம் (1987) ஆகிய இந்தச் சட்டங்கள் எல்லாம் இவ்வாறான அத்துமீறல்களைக் கட்டுப் படுத்த உள்ளூராட்சித் திணைக்களங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரமும் அங்கீகாரமும் ஆகும். இவற்றின் மூலம் நடைபாதை வியாபாரத்தைக் கட்டுப்படுத்த முடியாது என்றால் அதன் பின்னணியில் அரசியல் பலங்கள் உண்டு. இலஞ்சம் ஊழல் உண்டு. சீரான நிர்வகிப்புத் திறன் இல்லை என்பதை யெல்லாம் உள்ளூராட்சித் திணைக்களங்கள் ஒத்துக் கொள்ள வேண்டும். அப்படியானால் பின்பு எதை வைத்து உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடப் போகின்றீர்கள்? மக்களின் அடிப்படைப் பிரச்சினை களைக் கூடத் தீர்க்க முடியாவிட்டால் உங்களை மக் கள் தெரிவு செய்தமையால் என்ன பயன் என்பது தான் இன்றைய காரத்தின் கேள்வியாகும்.













## சம்பூர் தமிழ்க் கலாமன்றம் நடத்திய முத்தமிழ் விழா.!

சம்பூரின் கலைப் பண்பாட்டை தொடர்ந்து பேணும் முகமாக சுற்றுப்புற கிராம கலைஞர்களை ஒருங்கிணைத்து சம்பூர் தமிழ்க் கலாமன்றம், இம்மாதம் 7ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 9ஆம் திகதி திங்கட்கிழமை வரை முத்தமிழ் விழாவை சம்பூர் பண்பாட்டு மண்டபத்தில் வைத்திய கலாநிதி அ. சதீஸ்குமார் தலைமையில் நடத்தியது.

இவ் விழாவில் 'தமிழரும்பு' முத்தமிழ் விழா சிறப்பு மலர் வெளியீடும், கலையருவி, சிலம்பரன், சம்பூரணம் விருது வழங்கலும் திருகோணமலை மாவட்டத்தின் தமிழர் நடனம், நாடகம் மற்றும் சம்பூரின் பாரம்பரிய கலை நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டன.

மூன்றாம் நாள் நிகழ்வில் மூதூர் பிரதேச சபைத் தலைவர் எம். எம். ஏ. அரூஸ், தமிழ்நாடு தமிழ்த் துறை ஆய்வாளர் டாக்டர் வே. சங்கரநாராயணன், இந்து குருமார் அமைப்பின் தலைவர் சிவஸ்ரீ கு. வை. க. வைத்தீஸ்வரக்குருக்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்



## நிஜங்களும் இங்கு நிழலாகுமோ?

காலாவதியாகி
கண்ணீரில் கரைந்து போன
உன் நினைவுகளை
சுமந்து வந்த கடிதங்கள்

இடம்பெயர்
இடிபாடுகளுக்குள்ளும்
என் நெஞ்சோரம் வடிகட்டி

முகம் தெரியா
உன் நட்பின் நீட்சியாய்
அன்பின் அடையாளமாக
பத்திரமாய் பாதுகாத்திருந்தேன்

நேற்று சீனி பொதிந்து வந்த
கடதாசியை விரித்தபோது
உனது முழுப் பெயரிட்ட
புகைப்படம் ஒன்றை பார்த்தேன்

முதன்முதலாய்
முகம் பார்த்தபோது

நீ காணாமல் ஆக்கப்பட்டு
பத்து வருடங்கள் கடந்து போயின
நிஜங்களும்
இங்கு நிழலாகுமோ ?

– யோகாபாரதி

# வையகமிது வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது தெய்வப்புலவரது திருக்குறள்

மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தம்

தெய்வப் புலவராம் திருவள்ளுவரின் புகழ் வையகமெல்லாம் மாண்புறப் பரவி வளர்ந்து வருகின்றது. பகலவன் ஒளிபோல் யாண்டும் அவர் யாத்த குறள் பற்றியே உரையாடப்படுகிறது. வள்ளுவர் வாய் மொழியை எடுத்தாளாத எழுத்தாளர்களோ, பேச்சாளர்களோ, கவிஞர்களோ அமைச்சர்களோ ஏன் அரசியல்வாதிகளோ இன்று இந்த நாட்டில் இல்லையென்றே பெருமையோடு சொல்லலாம். இன்றென்ன? ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட எங்கள் தங்கம் நிகர் சங்க இலக்கியங்களிலெல்லாம் குறளும் குறட்கருத்துகளும் நடமிடுவதை நாம் இன்றும் கண்கூடாகக் காணலாம்.

தெய்வப்புலவர் வள்ளுவரின் கருத்துச் செல்லாத இடமே இல்லை... அவர் சொல்லாத விட்ட பொருளே இல்லை. குறளில் இல்லாத எப்பொருளும் இல்லை. புலவர் பெருமகன் செய்த திருக்குறளின் பெருமையைப் பற்றி ஒரு மேல் நாட்டு அறிஞர் குறிப்பிடும்பொழுது "வெள்ளிப் பேழையுள் இட்டதங்க ஆப்பிள்'' என்று போற்றியுள்ளார்.




திருக்குறள் தமிழ் இலக்கியத்தின் தலைசிறந்த நூலாகும். மக்கட் சிந்தனையின் மிக மேலானதும் தூய்மையானதுமான வரலாற்று ஆவணம் அது.

திருக்குறள் தமிழ் இலக்கியத்தின் தலைசிறந்த நூலாகும். மக்கட்சிந்தனையின் மிக மேலானதும், தூய்மையானதுமான வரலாற்று ஆவணம் அது. திருவள்ளுவர் ஒப்புயர்வற்ற ஒழுக்க விழுமிய முறையையும் எல்லோரும் ஒத்துக் கொள்ளக்கூடிய நெறிகளையுமே வகுத்துள்ளார்.

இல்லற சமுதாய வாழ்வியல்களின் உயர்ந்த விதிகளை ஒரே தொகுதியாக வள்ளுவர் வகுத்துத் தந்துள்ளார்.

**திருவள்ளுவரின் திருவாக்கு**


திருக்குறள் மக்கட் சிந்தனையின் முதல் நூலாகவே திகழ்கிறது. அது அறிஞர்களால் புகழப்படுகின்ற 1330 அழகிய குறள் வெண்பாக்களும், அவற்றின் பரந்த பொருளெல்லாம் பாரறிய ஒலித்து வரும் வள்ளுவரின் குரலொலியாகும். வள்ளுவர் தன்னுடைய குறைந்த ஒலியால் உலகுக்கு நிறைந்த பொருளை நவின்றுள்ளார் என்று அவரது நூலின் நயமறிந்தோர் போற்றுகின்றனர். எக்காலத்திலும் வள்ளுவரின் குறளில் குறையைக்காண இயலாது. எனவே தான் நிறையைக் கண்டார்கள்; காண்கிறார்கள். வள்ளுவரின் உள்ளத்தில் இருந்து எழுந்த அழகிய இந்தக் குறளொலிக்குப் பொருளுணர்ந்து, அதன் மேன்மையை அவனிக்கறிவிக்க வந்த பெரியார்கள் பலர். அப்பெரியார்களும் தலைசிறந்தவர் எனப் போற்றும் நிலையில் உள்ளவர் உரையாசிரியர் பரிமேலழகரேயாவார்.

திருவள்ளுவரின் திருவாக்கு "எண்ணித்துணிக கருமம்" என்பது. அதாவது செய்யத்தக்க எந்தச் செயலையும் நன்கு சிந்தித்துச் சீர் தூக்கிப் பார்த்து மேற்கொள்க என்பதாகும். எவ்வாறெனில், மாநிலத்தில் மனிதனாகப் பிறந்தவன் எங்ஙனம் வாழ்வது? அந்த வாழ்க்கைக்குள்ள துணையாவது எது? எவையெவை செயல் நெறிகள்? மனிதன் மேன்மையுடன் வாழவும், அந்த வாழ்க்கை வளம் பெறவும் வேண்டுவது யாது? என்று பலவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து.

எண்ணியதன் பயனாக, மனிதனின் வல்லமைக்கும் மேலான வல்லமை பெற்று மனித வாழ்வுக்கும், மற்றைய உயிர்த்திரளுக்கும், உலக நிலைக்கும் உற்ற மாண்பளிக்கும் தகவுடையது எதுவுண்டோ, அதைத்தான் வணங்க வேண்டும். அதை வழிபடல் தான் வாழப் பிறந்தவனின் கடமையாகும்; பண்பாக என்றெல்லாம் பன்முறை எண்ணி தெளிவுற்ற பின்னர்தான்.

"அகர முதல எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே உலகு"

என்று முதற்கண் வாழ்த்தினார். இதன் பொருள் எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உடையவை. அதுபோன்று உலகிலுள்ள உயிர்களெல்லாம் முதன்மையானவனாகிய பகலவனை முதலாகக் கொண்டவை என்பதாகும். இத்தகு பெருமைமிகு திருக்குறளை எல்லோரும் படித்து அதன்படி வாழ்வாங்கு வாழ்வோமாக.



# வாசிப்பின் நுகர்வு

■ கு.சரவணன்

இலக்கிய வடிவங்களில் கவிதை தனிச் சிறப்புடையதாக விளங்குகின்றது. கவிஞன் தான் சொல்ல எடுத்துக் கொண்ட விடயத்தைக் கவித்துவம் நிறைந்த சிலவரிகளில் உள்ளடக்கி படிப்பவர் மனதில் பதியச்செய்துவிடும் வல்லமை கவிதைகளுக்கு உண்டு. சமகால தமிழ்க்கவிஞர்களில் அறிவு மதி என்கின்ற கவிஞரும் கணிப்புக்குரிய ஒருவராக தடம் பதிக்கின்றார்.

மதியழகன் என்ற இயற்பெயருடைய இக்கவிஞர், அறிவழகன் என்ற தன் நண்பனின் பெயரையும் இணைத்து அறிவுமதியாக புனைபெயரில் அறியப்படுகின்றார். இவர் தென்னிந்திய திரைப்படங்களில் புகழ்பூத்த ஒரு பாடலாசிரியராகவும் விளங்குகின்றார்.

பல கவிதைத் தொகுப்புக்களையும், சிறுகதைத் தொகுப்பொன்றையும் வெளியிட்டு இலக்கிய உலகில் இயங்கி வருகின்றார். வலி என்கின்ற கவிதைத் தொகுப்பும் இவருடையதாகும். அந்த வலி என்னும் கவிதை நூலை இவ்வார வாசிப்புக்கு உட்படுத்தி, அதன் வாசனையை இங்கு நோக்குவோம். ஈழமக்களுக்கு கடந்த முப்பதாண்டு கால போர்கொடுத்த பேரவலங்களில் ஒன்று , பிறந்து வளர்ந்த மண்ணை விட்டு இடம்பெயர்ந்து பிரிந்து போவதாகும். உயிரைக் கையில் பிடித்தவாறு, உடுத்த உடுப்புடன் இடம் பெயர்வது என்பது மிக மிகச்சோக மயமானது. ஈழ மக்கள், தம் தாயக நிலம்விட்டு, தொப்புள் கொடி பாசம்மேலிட ஒருவித நம்பிக்கை கொண்டு இந்தியா நோக்கி இடம்பெயர்ந்தனர். அவ்வாறு தமிழகம் நோக்கி சென்ற ஈழஏதிலிகள் பட்ட அவலங்கள், மனவுளைச்சல்கள், மனக்கவலைகள், வேதனைகள், ஏமாற்றங்கள் என பல்வகை அனுவங்களையும், இன்றும் அனுபவிக்கும் அவலங்களையும் பாடுபொருளாக்கி வலி என்ற தலைப்பில் படைத்திருக்கின்றார் அறிவுமதி. அடைக்கலம் தேடி படகில் தப்பி வருகையிலே நடக்கும் சொல்லொணாத் துயரங்களை குறியீடாக்கி வாசிப்போரை கலங்கவைக்கின்றார் கவிஞர்

*“நடுக்கடலில்*
*சுற்றிவளைக்கப்பட்ட*
*படகிலிருந்து குதித்து*
*மூழ்கிக் கொண்டிருந்த அக்காவை*
*காப்பாற்றத் துடிக்கவில்லை*
*பாசமுள்ள தம்பி.”*

இங்கே அக்காவின் உயிரையும்மீறி , தம்பியின் பாசத்தையும் மீறி
தமிழ்ப்பெண்கள் எதிர்கொண்ட ஆபத்தான சூழ்நிலை காட்டப்படுகின்றது.

இலங்கை கடற்படையினர் மற்றும் இந்தியக் கடற்படையினரிடமிருந்து தப்பி கரையை அடைந்த அகதிகள் விசாரணை என்ற பெயரில் சந்தித்த அவலங்களைச் சொல்லவந்த கவிஞர்,

*“தமிழில் தான் விசாரித்தார்கள்*
*தமிழர்களாய் இல்லை”*

என்ற வரிகளூடாக வாசிப்போர் மனங்களில் அனுபவித்த அவலங்களை வியாபகப்படுத்துகின்றார்.மேலும் அங்கே அகதிமுகாம் வாழ்க்கையின் அவலங்களை,

*“மயிலுக்கு போர்வை*
*தந்தான் பேகன்*
*ஒழுகுகின்றது அகதிமுகாம்”*

என்று,அகதிக்குடிசையின் சீரழிவை சினக்கின்றார்.

*“நேற்றுவரை சேலை*
*இன்று முதல் மதில்..”*

என்ற வரிகளின் மூலம் இடம்பெயர்வதற்கு முதல்வாழ்ந்த வளமான வாழ்வும், இப்போது சேலையை மதிற்சுவராக்கிய மோசமான அகதிவாழ்வும் சிறப்பாக சித்தரிக்கப்படுவ தனைக் காணலாம்.

*“பிறக்கும் குழந்தை*
*எண்ட ஆதி மண்ணில்*
*பிறந்தாணெண்டு சந்தோசப்படுவதா*
*அகதியாகப்*
*பிறந்தாணெண்டு வருத்தப்படுவதா”*

தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. தங்கள் மூதாதையரின் ஆதிபூமியாக தமிழகத்தை கருதும் வழக்காறு உண்டு. இதனை எண்ணிப்பார்க்கும் அகதியாகிய ஒரு கர்ப்பிணிப் பெண்ணின் மனநிலையில் இக்கவிதையை படைத்து, பலவற்றை உணர்த்துகின்றார். என்ன காரணங்களுக்காக இடம்பெயர்ந்தோம், சந்தித்த பிரச்சினைகள் எவை என்பவற்றை இலங்கை அகதி ஒருவர் மீட்டிப்பார்ப்பதை வலிமிகுந்த கவிதையாக்குகின்றார்.

*“தூங்க மகனுக்கு அங்க தூளிகட்ட முடியல*
*வெளஞ்ச மகளுக்கு அங்க வேலி போட முடியல....”*

கவிஞர் அறிவுமதி இவ்வரிகளூடாக போர்க்காலத்தில் மக்கள், இளம்பெண்கள் எதிர்நோக்கிய துன்பங்களையும் பாதுகாப்பின்மையும் வாசிப்போர் நெஞ்சங்களில் வலிகளாக்குவதில் வெற்றி காண்கின்றார்.

வளமோடும் வாழ்வாதார பலத்தோடும், தாராள பொருளாதாரத்தோடும் நிறைவாழ்வை நிம்மதியாக வாழ்ந்தவர்கள், இன்று உயிரைக்கரங்களிலே தூக்கிக்கொண்டு கடலேறியதைக் கண்ணீரோடு கவியாக்குகின்றமை கவனத்திற்குரியது.

*படகில் ஏறினோம்*
*படகுகளை விற்று*

தொப்புள்கொடி உறவுத்தேசம் எம்மை அணைத்து அன்பு பாராட்டும் என எண்ணிச் சென்ற ஏதிலிகளோ அங்கு கல்வியுரிமை மறுக்கப்பட்ட துன்பத்திற்கு ஆளாகும் அவலம் அரங்கேறுகின்றது. இந்த கொடுமையைப் பதிவு செய்ய விளைகின்றார் கவிஞர் .

*“முகாமிற்கு அருகிலுள்ள*
*பள்ளியிலிருந்து கேட்கின்றது*
*யாதும் ஊரே யாவரும் கேளிர்”*

உலகப் பொதுமையை சங்காலத்திலேயே வலியுறுத்திய கணியன் பூங்குன்றனாரின் பரம்பரைப்பாதையில் வந்துதித்த தமிழர்களின் அவலத்தை அழகான முறையில் கவியாக்கி வலியை ஏற்படுத்துகின்றார்.

அகதிமுகாமில் இணைந்தபின்னர் அவர்களுக்கு ஏற்படும் பாதுகாப்புக் கெடுபிடிகள், நடமாட்டக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கும், மேற்குலக புலம்பெயர்நாடுகள் அகதிகளுக்கு கொடுத்திருக்கும் அளப்பரிய சுதந்திரத்தையும் எண்ணிப்பார்த்து ஏங்குகின்றார் கவிஞர்,
அதன்வெளிப்பாடாக இக்கவிதை,
அடக்கம் செய்யாமல்

*‘ஐந்து நாட்கள்*
*வைத்திருந்தும்*
*அம்மாவின் முகத்தை*
*கடைசியாக பார்க்க வாய்த்தது*
*கனடாவில் இருக்கும் மூத்த மகளுக்கு*
*வாய்க்கவே இல்லை*
*இங்கிருக்கும் இளையமகளுக்கு.*

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழகத்தில் தங்கி இருக்கும் அகதிகள் வசதியான வீடொன்றைப் பெறுவதில் ஏற்படும் துயரத்தின் ஆதங்கத்தில், “இங்கே வீடு கிடைப்பதற்குள் அங்கே நாடு கிடைத்துவிடும் என்று எரிச்சல் அடைகின்றார். தமிழ்க் கவிதை உலகில், தமிழகத்தில் ஈழஏதிலிகள் படும் இன்னல்களை வெளிக்கொண்டு வந்த ‘வலி’ என்கின்ற இத்தொகுப்பு தனியிடம் பெறுகின்றது. ■

## தந்தை மகற்காற்றும் நன்றி




உழைத்தல் என்றாலே அப்பாவிற்குரியது என்ற சிந்தனை குழந்தைகள் மத்தியில் பொறிக்கப்பட்டிருக்கிறது. ‘திரைகடல் ஓடி திரவியம் தேடு’ என்ற இலக்கிய வார்த்தைகள்கூட தொழில், உழைத்தல் என்றாலே ஆண்களுக்கானது என்றே பகர்கிறது.

கால வளர்ச்சியில் குடும்பத்தின் தேவை காரணமாகவும், பெண்ணிய சிந்தனையின் காரணமாகவும் பெண்கள் உழைக்க ஆரம்பித்தார்கள். இந்த உலகத்தில் மிக உன்னதமான நிகழ்ச்சி என்னவென்றால் உழைத்து உண்பதுதான். பிறரைக் கெஞ்சம் கூட எதிர்பார்க்காமல் சுய உழைப்பில் வாழ்கிறவர்கள் மதிப்பிற்குரியவராகிறார்கள். தந்தையை இழந்த மாணவனுக்குத்தான் அதன் அருமை தெரியும் என்று பல நேரங்களில் என்னுடைய வகுப்புகளில் பேசி இருக்கிறேன்.

‘தந்தையோடு கல்வி போம்’ என்னும் அறிஞரின் சொல் உண்மையில் நடைமுறைச் சாத்தியமே. அப்பாவின் உழைப்பு மட்டும் இல்லை என்றால் நாட்டில் கல்வி அறிவு தழைத்திருக்காது. ஆனாலும் அப்பாவின் உழைப்பு ஒரு சில மனிதர்களை சோம்பேறி ஆக்கி விடுகிறது. தன் வேலையினுடைய கடினத்தைத் சொல்லிச் சொல்லி வளர்க்கப்படும் குழந்தை ஒரு போதும் பாதை தவறிப் போவதில்லை. அதே போல குழந்தையக் கவனிக்காத தந்தையை எந்தக் குழந்தையும் மதிப்பதே இல்லை.

அப்பாவின் கடமை விலங்குகளைப் போல பெற்றெடுத்தவுடன் முடிந்து போவதில்லை. அஃறிணைகள் மட்டும்தான் இனப் பெருக்கத்திற்காக மட்டுமே குடும்பம் நடத்தும். பிள்ளைகளை ஆளாக்காத அப்பாக்களை, காய்ந்து போன மரமாகவே கருதுகிறேன். கல்விச் செலவுக்காக தன் வாழ்க்கையே அடகு வைக்கிற அப்பாவை பெற்றவரா நீங்கள் பெருமைப்படுங்கள் அவர் உங்கள் அப்பாவாக பிறந்ததற்கு.

அப்பாவின் உழைப்பை
துஷ்பிரியோகம் செய்பவர்கள்
துஷ்டர்களே.

ஒவ்வொரு அப்பாவின் பிறவிப் பயன் தான் பெற்ற மகனை படிக்க வைத்து தலைச்சிறந்த குடி மகனாய் உருவாக்குவதே ஆகும்.

*தந்தை மகற்காற்று நன்றி அவையத்து*
*முந்தி யிருப்பச் செயல்*

**அன்பு அகத்தில்லா உயிர் வாழ்க்கை**

‘நீங்க கோவப்படாதீங்க, உங்க முகத்துக்கு அது பொருத்தமல்ல என்று பலருக்கும் இது போன்ற விமர்சனங்கள் வந்திருக்கும். பலருடைய அன்பான வார்த்தை ஈரமில்லாதவர்களைக் கூட கசிந்துருக வைத்திருக்கிறது என்பதைக் கண்ணாரப் பார்த்திருப்போம். அன்பு என்ற ஒற்றைச் சொல் தான் இங்குள்ள அனைவர்க்கும் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் உன்னதம் படைத்ததாகும்.

இசைவாசி

## காலம் மறந்தவை

- இரு கைகூப்பி வணக்கம் சொல்லியது.
- வீட்டுக்குள் நுழையும் முன் கை, கால்களைக் கழுவிய பிறகு நுழைந்தது.
- மஞ்சள் நீராடி விளையாடியது.
- உணவில் மஞ்சள் சேர்த்தது.
- சாம்பல், உப்புக் கொண்டு பல் துலக்கியது
- மாட்டுச் சாணம் தெளித்து வாசல் பெருக்கியது. வீட்டின் தரையை மெழுகியது, பிள்ளையார் வைத்தது.
- வருடம் ஒருமுறை வீட்டுக்கு வெள்ளை அடித்தது.
- பின்வாசல் வழியாகச் சென்று குளித்துவிட்டு வீட்டினுள் நுழைந்தது.
- மாலை நேரம் வீட்டில் சாம்பிராணிப் புகை போட்டது.



# உண்மையான மகிழ்ச்சி!

மரத்திலிருந்த பழுத்த கொய்யா பழங்களை, மிகவும் ருசித்து சாப்பிட்டு கொண்டிருந்தது அணில் ஒன்று. அதன் பின், மரக்கிளையில் அங்கும் இங்குமாக தாவி, மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருந்தது.

அந்த மரத்தின் நிழலில், ஓநாய் ஒன்று படுத்திருந்தது. அது, அணிலின் விளையாட்டைப் பார்த்து ரசித்தபடி இருந்தது.

கிளைக்கு கிளை தாவி கொண்டிருந்த போது, திடீரென நழுவி, ஓநாய் மீது விழுந்துவிட்டது அணில்.

உடனே, ஓநாய் அதை பிடித்தபடி, "உன்னை விட மாட்டேன்" என்றது.

"என்னை விட்டுவிடு!" என்று மன்றாடியது அணில்.

"சரி, உன்னை விட வேண்டுமென்றால், நான் கேட்கும் கேள்விக்குச் சரியான பதில் சொல், அப்போது உன்னை விடுவேன்…" என்றது நரி.

"கேளுங்கள்… தெரிந்ததைச் சொல்கிறேன்," என்றது அணில். "உன்னை விட நான் பலசாலி தானே!" என்று கேட்டது ஓநாய்.

"ஆமாம் அது தான் உண்மை," என்றது அணில்.

"இப்படிப்பட்ட பலசாலியிடம் இல்லாத மகிழ்ச்சி, உன்னிடமும், உன் இனத்தாரிடமும் மட்டும் காணப்படுகிறதே அது எப்படி ' என்று கேட்டது ஓநாய்.

"முதலில் என்னை விடுங்கள் அதன்பின் கூறுகிறேன்" என்றது அணில்.


அணிலை விட்டது ஓநாய். தப்பித்தோம், பிழைத்தோம் என எண்ணி, மரத்தில் ஏறி, ஒரு கிளையில் அமர்ந்தது அணில். "சரி இப்போது சொல்!" என்றது ஓநாய்.

"நீங்கள், எப்போதுமே யாரை கொல்லலாம் என்ற எண்ணத்துடன் மட்டும் தான் இருக்கிறீர்கள்… இதனால், உங்கள் எண்ணங்கள் உங்களை வதைக்கின்றன அது உங்களை மகிழ்ச்சியாக இருக்க விடாது.

"நாங்கள் அப்படி அல்ல. நல்ல சிந்தனையுடன் வாழ்கிறோம். அதனால் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்கிறோம். இது தான் உண்மை," என்று கூறிவிட்டு, மகிழ்ச்சியுடன் தாவிக் குதித்து ஓடியது அணில்.


எப்போதும் நல்லதை நினைப்பவர்கள், ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியுடனும் வாழ்கின்றனர். பிறருக்கு தீங்கு செய்யும் புத்தியுடையவர்கள், மகிழ்ச்சியாக வாழ முடியாது என்பதை உணர்ந்தது ஓநாய்.

**நீங்களும் எப்போதும் நல்ல எண்ணங்களுடன் இருந்தால், மகிழ்ச்சியாக வாழலாம்.**






## வரைந்து பழகுவோம்



## லேசர் கதிர்


சில நோய்களுக்கு, லேசர் கதிர் மூலம் சிகிச்சை செய்யப்படுகிறது.

லேசர் ஒளிக்கற்றை, அதிக நீளத்திற்கு பாயும் திறன் பெற்றது; இதன் நீளத்தையும், ஒளியின் அடர்த்தியையும் கட்டுப்படுத்த முடியும்; இதனால், இரும்பையே வெட்டலாம்.

மனித உடலில், தோல், மண்டை ஓடு போன்றவற்றில், சிகிச்சை செய்ய முடியும்.

உதாரணத்திற்கு, உடலில், ஓர் இடத்தில் கட்டி இருந்தால், அங்கு லேசர் கதிர்களைப் பாய்ச்சி, கரைக்கவோ, நீக்கவோ செய்யலாம். அறுவை சிகிச்சை செய்ய வேண்டியது இல்லை.

இதனால், ரத்தம் வீணாவதில்லை; தோல், பல அடுக்குகளை உடையது. இதில், எந்த அடுக்கில், சிகிச்சை செய்ய வேண்டுமோ, அந்த இடத்தில் மட்டுமே, சிகிச்சை செய்ய முடியும். சிறுநீரக கற்களையும் சிதைத்து வெளியேற்ற முடியும்.



## தேன் சிட்டு

தேன் சிட்டு பறக்கிறது
தேனைத் தேடித் திரிகிறது
வான் வெளியில் அதன் பாதை
வண்ணப் பூக்கள் அதன் தோழர்!

சிட்டாய்ப் பறந்து செல்கிறது
சின்னச் சிறகை விரிக்கிறது
பட்டுப் போன்ற உடம்பினிலே
பளபளப்பும் தெரிகிறது!

பூவை நாடிப் போகிறது
புதிய தேனைக் குடிக்கிறது
சுறுசுறுப்பென்றால் எதுவென்று
சுட்டிக் காட்டுது சிறு குருவி!

## விடுகதைகள்

1. பட்டுன்னு போட்டா பளிச்சின்னு எரியும்… அது என்ன?
2. பச்சைப் பாப்பா மூக்கிலே ரத்தம். ஐயோ கத்துறா? அது என்ன?
3. பச்சை பங்களா பல குட்டி தூங்குறா. அது என்ன?
4. பச்சை மலை, பஞ்சு மலை, ஒரு மலை, ஒரு குளம். அது என்ன?
5. பச்சை நிறத்தழகி பவளம் போல் மூக்கழகி. கொச்சை மொழி பேசி காற்றாய் பறந்து விடுவாள். அது என்ன?
6. பக்கத்தில் இருப்பான். படுத்தால் மறைவான். அது யார்?
7. 'பாக்' 'பாக்' என்குது. சிட்டங்கட்டி செடியோரம் மேயுது… அது என்ன?
8. பாரத்தால் கல். பல் பட்டால் தண்ணீர்… அது என்ன?
9. பாளை போல் பூ பூக்கும் பார்த்தவர் விரும்பும் பூ தலையில் சூடாத பூ. அது என்ன பூ?
10. பாரினில் காய்த்தும் பழுக்காத மரம் எது?

## விடைகள்

| | |
|---|---|
| 1. மின்சார விளக்கு | 2. கிளி |
| 3. முருங்கைக்காய் | 4. தேங்காய் |
| 5. கிளி | 6. நம் நிழல் |
| 7. வாத்து | 8. பனிக்கட்டி |
| 9. வாழைப்பூ | 10. இலவம் மரம் |

## வழிகாட்டுவோம்





## வர்ணம் தீட்டுவோம்



# ‘மாஸ்டர்’ படத்தின் ரகசியத்தை வெளியிட்ட அனிருத்

விஜய் நடிப்பில் உருவாகி இருக்கும் திரைப்படம் மாஸ்டர். லோகேஷ் கனகராஜ் இயக்கியுள்ள இப்படத்தில் விஜய் சேதுபதி வில்லனாக நடித்துள்ளார். மேலும் மாளவிகா மோகனன், ஆண்ட் ரியா, அர்ஜுன் தாஸ், கவுரி கிஷான் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். ‘மாஸ்டர்’ படத்தில் பாடல்கள் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. இந்த நிலையில் மாஸ்டர் படத்தின் இசை வெளியீட்டு விழா நேற்று நடைபெற்றது. இதில் ‘குட்டி ஸ்டோரி…’ பாடலை பாடி அசத்திய அனிருத், மாஸ்டர் இசை ஆல்பம் குறித்த ரகசியத்தை வெளியிட்டார்.

‘மாஸ்டர்’ படத்தில் 8 பாடல்கள் இடம்பெற்றிருந்த நிலையில், இந்தப் படத்தில் மொத்தம் 12 பாடல்கள் இருப்பதாக அனிருத் கூறி னார். மீதமுள்ள நான்கு பாடல்களில் முதல் இரண்டு பாடல்களை விரைவில் வெளியிட இருப்பதாகவும், மற்ற 2 பாடல்கள் படத்தில் சர்ப்ரைஸாக வரும் என்றும் அனிருத் கூறியுள்ளார்.




## twitter

உள்ளூராட்டக்காரன்
@shivaas_twitz

கை கழுவியே தண்ணி பஞ்சம் வந்துடுமோ…!

ஜோக்கர்… Smiling

தீண்டுவதால் பரவும்
என்பதை விட,
தீண்டாமையால் பரவும்
என்றிருந்தால்,
எனது தேசம் எப்பொழுதோ
இறந்திருக்கும்,

கொரோனோவால்..!!!

ஜோக்கர்… Smiling

‘தொடர்ந்து வா, தொட்டு விடாதே’ என்ற விழிப்புணர்வு வாசகம் கரோனா வைரஸுக்கும் பொருந்தும்!!










பேசும் போது மனம்விட்டு பேசுங்கள்…!

கேட்கும் போது செவிக் கொடுத்து கேளுங்கள்…!


தீராத பிரச்சனை என்று இந்த உலகில் எதுவும் இல்லை…!!




சப்பாணி@manipmp

‘சில மூளைகள் தேய்கின்றன; பல மூளைகள் துரு பிடிக்கின்றன.’

கார்ல் மார்க்ஸ்”



# “நாட்டைப் பாதுகாக்கவே சிவில் பதவிகளுக்கு இராணுவ அதிகாரிகள்!”


Commander of the Army, Lt. Gen. Daya Ratnayake

**இறுதி யுத்தத்தை முன்னின்று நடத்திய தளபதிகளுள் ஒருவரும் தற்போது துறைமுக அதிகாரசபை தலைவராக பதவி வகித்து வருபவருமான லெப்டினட் ஜெனரல் தயா ரத்நாயக்க டெய்லி மிரர் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது.**

ஆங்கிலத்தில்: ஜமிலா சுசைன்
தமிழாக்கம்: ந.பரமேஸ்வரன்

**கேள்வி**: யுத்தம் முடிவடைந்து பத்து வருடங்களாகின்றன 2009 முதல் இலங்கை இராணுவத்துக்கு எதிராக ஐ.நா.வினால் யுத்தக்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகிறது. இதைத் தெளிவுபடுத்த இலங்கையால் முடியாதா? யுத்தக்குற்றங்கள் எதுவும் நடந்ததா? நடக்கவில்லையா?

**பதில்**: ஐ.நாவின் குற்றச்சாட்டுகளுக்கு இராணுவம் பொறுப்பல்ல. அதற்குப் பதில் சொல்ல வேண்டியது அரசாங்கமே. உள்ளூர் மட்டத்தில் பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கே இராணுவம் பொறுப்புக்கூற வேண்டும் . வெளிநாட்டமைச்சு கூட 2009 முதல் பல தடவை இந்த விடயத்தை கையாண்டுள்ளது. நானும் இந்த விடயங்களில் கரிசனை செலுத்த வேண்டிய ஒருவன். ஏனென்றால் நானும் இதில் சம்பந்தப்பட்டுள்ளேன். எவ்வாறாயினும் இந்த விடயத்தை தெளிவுபடுத்த வேண்டியது வெளிநாட்டமைச்சினதும் அரசாங்கத்தினதும் கைகளில் தான் தங்கியுள்ளது.

**கே**: அப்படியானால் இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையா?

**ப**: சர்வதேச நிறுவனங்களால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை. புனையப்பட்டவை. நாங்கள் இந்த விடயங்கள் தொடர்பாக எமது தீர்மானங்களை பாதுகாப்பு அமைச்சுக்கும், வெளிநாட்டமைச்சுக்கும் 2009 லேயே சமர்ப்பித்து விட்டோம். 2015 க்கு பிறகு வந்த அரசாங்கம் முழுக்க முழுக்க தவறான ஒரு தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியிருந்தது. ஒரு இராணுவ அதிகாரி என்ற வகையில் நான் இதை ஏற்றுக்கொள்ள மாட்டேன். தற்போதைய புதிய அரசாங்கம் இணை அனுசரணைத் தீர்மானத்திலிருந்து விலகுகிறது; நீங்கள் வேறு ஏதாவது கேட்க விரும்பினால் கேட்கலாம்.

**கே**: யுத்தம் முடிந்து பத்து வருடங்களாகி விட்டன; தமிழ்க் குடும்பங்கள் இறுதி யுத்தத்தில் சரணடைந்த தமது உறவுகளை தேடிக்கொண்டிருக்கின்றனர். அவர்களால் தமது உறவுகளைக் கண்டு பிடிக்க முடியவில்லை; இந்தக் குடும்பங்கள் தமது கேள்விகளுக்கு பதில் தேடுகின்றனர். உண்மையில். நடந்தது என்ன?

**ப**: நீங்கள் இவர்கள் இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர் காணாமல் போயுள்ளனர் என்ற தீர்மானத்துடன் வந்திருக்கிறீர்கள்; ஒரு இராணுவ அதிகாரியாக நான் சொல்கிறேன் எமது தடுப்பிலிருந்த எவரும் காணாமல் போகவில்லை; முன்னைய மகிந்த ராஜபக்ச அரசு இதற்கென ஒரு ஆணைக்குழுவை நியமித்திருந்தது. அவர்களுக்கு நாங்கள் தெளிவாகக் கூறியுள்ளோம், இந்த குற்றச்சாட்டுகள் எதுவித அடிப்படையுமற்ற பொய்க்குற்றச்சாட்டுகள். காணாமல் போனோர் பற்றிச் சில புள்ளிவிபரங்களைச் சிலர் கூறுகின்றனர்; அவர்கள் எங்கிருந்து இந்தப் புள்ளி விபரங்களை பெற்றுக்கொண்டார்களோ தெரியாது. 4000 5000 வரையான இராணுவச் சிப்பாய்கள் கூட யுத்தத்தில் காணாமல் போயுள்ளனர். இந்தச் சிப்பாய்களுக்கு என்ன நடந்தது என்பதும் எமக்கு தெரிய வேண்டும். இதனை விசாரிப்பதற்கு முன்னைய ராஜபக்ச அரசு ஒரு ஆணைக்குழுவை நியமித்திருந்தது. அந்த ஆணைக்குழுவின் அறிக்கையில் 'இராணுவத்தினரிடம் சரணடைந்த அனைவரும் புலிப்பயங்கரவாதிகளி டமிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் என்று' தெளிவாகக் குறிப்பி டப்பட்டுள்ளது. கடந்த அரசு இந்த விடயம் தொடர்பாக விசாரிப்பதற்கென ஒரு ஆணைக்குழுவை நியமித்திருந்தது. அவர்களது விசாரணை அறிக்கை இப்போது வெளியாகியுள்ளது. அவர்களது விசாரணைகள் தொடர்ந்து செல்கின்றன? காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது? என ஒரு இராணுவ அதிகாரியாக நான் இவர்களிடம் கேட்க விரும்புகிறேன். காணாமல் போனோர் தொடர்பாக இரு பகுதியினரிடமும் விசாரணைகளை ஆரம்பித்தால் எமது பூரண ஒத்துழைப்பை வழங்க நங்கள் தயாராகவுள்ளோம்.

**கே**: உங்களுடையபதிலைதிரும்பச்சொல்லுங்கள்; இவர்கள் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்ட போது பாதுகாப்பாக இருந்தார்கள் அப்படித்தானே?

**ப**: நிச்சயமாக! அவர்கள் பாதுகாப்பாக இருந்தார்கள். இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்ட பின் அவர்கள் நன்கு கவனிக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் அப்பாவிப் பொதுமக்களுடன் மக்களோடு மக்களாக வந்தனர். 14,500 பயங்கரவாதிகளும் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். இது எனக்கு தெரியும் ஏனென்றால்அப்போது நான் புனர்வாழ்வு ஆணையாளராகக் கடமையாற்றிக்கொண்டிருந்தேன். இவர்களில் சிலரை தமிழ் பொதுமக்கள் பிடித்து எம்மிடம் கையளித்தனர். அனைவருமே புனர்வாழ்வு அளிக்கப்பட்டனர். மேலதிகமாக 1000 பேர் ஐ.நா. மனித உரிமை நிறுவனங்களில் பணியாற்றினார். இறுதி யுத்தத்தில் அப்பாவி மனித கேடயங்களாகப் பாவிக்கப்பட்டவர்களும் எம்மிடம் பாதுகாப்பாக வந்தனர்; அவர்களும் நன்கு கவனிக்கப்பட்டனர். அனைத்து மதங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான மதகுருமார் ஒரு கீறல் காயம் கூட இல்லாமல் பாதுகாப்பாக வெளியே வந்தனர். 4000 அரச ஊழியர்கள் வந்தனர். பயங்கரவாதத் தலைவர்களின் குடும்பத்தினர் பாதுகாப்பாக வெளியே வந்தனர். அவர்கள் இந்த இடங்களில் கடந்த பதினொரு வருடங்களாக பாதுகாப்பாக வாழ்ந்து வருகின்றனர். எதற்காக இந்த குற்றச்சாட்டுகள், எதற்காக இராணுவத்தினரை களங்கப்படுத்துகிறீர்கள், எல்லாம் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள். இவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக அணி திரளுகின்றனர். முன்னைய அரசாங்கம் இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிப்பதற்கான எந்த முயற்சியையும் எடுக்கவில்லை.

**கே**: புலிகளுக்கு எதிராக இராணுவம் நடத்திய யுத்தம் நேர்மையற்ற முறையில் நடத்தப்பட்டதாக சர்வதேச அமைப்புகள் குறிப்பாக ஐ.நா குற்றம் சுமத்துவதாக நீங்கள் கருதுகிறீர்களா?

**ப**: இந்த நிறுவனங்களெல்லாம் தமது சொந்த நலன்களுக்காகவே கதைக்கின்றன. ஒரு இராணுவ அதிகாரியாக இவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது பற்றி நான் அதிகம் அக்கறைப்படவில்லை. உண்மையில் புலிகள் செய்த மோசமான செயற்பாடுகளைக் கண்டறிய வேண்டும்; புலிகள் செய்தது போன்று நாம் ஒரு போதும் செய்யவில்லை. நாங்கள் இரண்டு கிளர்ச்சிகளுக்கு முகம் கொடுத்துள்ளோம். இந்த கிளர்ச்சிக்கு என்ன காரணம் என்பதை நாங்கள் பார்க்க வேண்டும். தற்பெருமையுடன் கூறுகிறேன் இந்த நிறுவனங்கள் எங்கள் மீது குற்றம் சுமத்துவதை நான் பிழை என்று சொல்லவில்லை. நான் அவர்கள் மீது சுமத்தும் குற்றச்சாட்டு என்னவென்றால் இந்த கிளர்ச்சிகளும் யுத்தத்துக்கும் காரணம் என்ன என்பதைக் கண்டறிய வேண்டும். முதலில் எங்களுடைய வீட்டை நாங்கள் சரியான முறையில் வைத்திருக்க வேண்டும்.

**கே**: இலங்கை அரசாங்கம் ஐ.நாவுடன் செய்து கொண்ட இணை அனுசரணைத் தீர்மானத்தை மீளப்பெற்றுக்கொள்வதாக அறிவித்துள்ளது. இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**ப**: நான் இந்த தீர்மானத்தை பற்றி ஆழமாக படிக்கவில்லை ஆனால் ஒரு முன்னாள் இராணுவ அதிகாரியாக அரசாங்கத்துடன் நிற்க வேண்டும். இதில் முதலில் கூறப்பட்டுள்ள விடயத்தை நாங்கள் செய்யவில்லை. எமது நாட்டிற்கு எதிரான தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதை விட வேறு பல தெரிவுகள் உள்ளன. தனது சொந்த இராணுவத்துக்கு எதிராக நம்பிக்கைத் துரோகமிழைத்தமுதலாவது நாடு உலகிலேயே எமது நாடாகத்தானிருக்கும்.

**கே**: இந்த அரசாங்கத்திடமிருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள்?

**ப**: ஒரு இராணுவ அதிகாரியாக நான் தற்போதைய அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறேன். ஜனாதிபதி எப்போதும் இராணுவத்துடன் நின்றவர். ஒரு தனி நபராக நான் எதிர்பார்ப்பது இந்த குற்றச்சாட்டுகள் சந்தேகங்கள் யாவற்றையும் சந்தேகத்திற்கிடமின்றி துடைத்தெறிய வேண்டும்

**கே**: இந்த அரசாங்கத்தின் ஆட்சியில் பல இராணுவ அதிகாரிகள் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் இது ஒரு இராணுவ ஆட்சியை சார்ந்திருப்பதாக எடுத்துக்கொள்ளக் கூடாதா?

**ப**: கடந்த 71 வருடங்களில் சுதந்திரத்தின் பின்னர் புலிகளுக்கு எதிரான 30 வருட யுத்தத்தின் பின்னர் இராணுவம் பலஅபிவிருத்தித்திட்டங்களைமேற்கொண்டுள்ளது. நகரங்களை அழகுபடுத்தும் பணிகள்; தேசிய பாதுகாப்பை உறுதி செய்துள்ளது. இராணுவத்தின் ஒத்தாசையுடன் கொழும்பு நகர் உலகிலேயே அழகானதும் உல்லாசப்பயணிகளுக்குப் பாதுகாப்பானதுமான ஒரு நகரமாக மாற்றப்பட்டுள்ளது. இவை யாவும் இராணுவதாலேயே செய்யப்பட்டுள்ளன. இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததும் தேசிய பாதுகாப்பை உறுதி செய்துள்ளது. முன்னாள் இராணுவத்தினரும் முக்கியமான இடங்களில் நாட்டின் பாதுகாப்பு கருதி பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர் . இந்த நாடு நன்கு பாதுகாக்கப்படுகிறது. நாட்டின் பாதுகாப்பு முக்கியமானது. முக்கியமான பதவிகளில் இராணுவத்தினர் அமர்த்தப்பட்டிருப்பதற்கு இது தான் கரணம். இது இராணுவ ஆட்சியை நோக்கி இட்டுச்செல்லும் என்று கூறுவது தவறு.



# இன்றைய நாள்

**மேடம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சி சீரான அளவில் முன்னேற்றம் பெறும். சேமிப்பு பணம் முக்கிய செலவுக்கு பயன்படும். பெண்கள் பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர்.

**இடபம்:** பணித்திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். சீரான அளவில் பணம் கிடைக்கும். உறவினர் வகையில் செலவு செய்ய நேரிடலாம்.

**மிதுனம்:** மனதில் புதிய நம்பிக்கை பிறக்கும். செயல்களில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும். தொழில், வியாபாரம் நண்பரின் உதவியால் முன்னேற்றம் பெறும். பணவரவுடன் நன்மையும் அதிகரிக்கும்.

**கடகம்:** மனதில் வெகுநாள் இருந்த சஞ்சலம் தீரும். தொழில், வியாபாரம் செழித்து லாபம் அதிகரிக்கும். ஆதாய பணவரவு கிடைக்கும். பிள்ளைகளின் நற்செயல் பெருமையை தேடித்தரும்.

**சிம்மம்:** சிலர் உங்களுக்கு இடையூறு செய்ய முயற்சிப்பர். முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு படிப்படியாக நிறைவேறும்.

**கன்னி:** மனம் புகழ்ச்சியை விரும்பும். குடும்பத்தினரின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை இருக்கும். அவசரத் தேவைக்கு கடன் பெறுவீர்கள்.

**துலாம்:** உறவினர், நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். சான்றோரின் ஆசி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகி வளர்ச்சி ஏற்படும். உபரி வருமானத்தை சேமிப்புக்கு பயன்படுத்துவீர்கள்.

**விருச்சிகம்:** செயல்களில் நிதானத்தை பின்பற்ற வேண்டும். தொழில், வியாபாரத்தில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். சேமிப்பு பணம் அத்தியாவசிய செலவுகளுக்கு பயன்படும்.

**தனுசு:** லட்சிய மனதுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி எளிதாக நிறைவேறும். உபரி பணவருமானம் கிடைக்கும். குடும்பத்தினர் விரும்பிக் கேட்ட பொருளை வாங்கித் தருவீர்கள். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

**மகரம்:** குடும்பப் பெரியவரின் ஆலோசனைப்படி செயல்படுவீர்கள். தொழில், வியாபார நடைமுறை சீராகும். பணவரவை சிக்கனமாக பயன்படுத்துவீர்கள். உடல் நலனில் அக்கறை தேவை.

**கும்பம்:** திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அபார வளர்ச்சி பெறும். கூடுதல் சொத்து வாங்க திட்டமிடுவீர்கள். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டை நடத்துவர்.

**மீனம்:** பணிகளில் ஆர்வமுடன் செயல்படுவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி தேவையான நேரத்தில் கிடைக்கும். தொழில்,வியாபாரம்செழித்துவளரகூடுதல் மூலதனம் தேவைப்படும்.

# கொரோனாவுக்கு தடுப்பூசி அமெரிக்காவில் சோதனை!

## முடிவை எதிர்பார்த்து உலகம் காத்திருப்பு

வொஷிங்டன், மார்ச் 18

கொரோனா வைரஸ் தொற்று ஏற்படாமல் இருக்க அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்த கொரோனா தடுப்பூசி, சோதனை முயற்சியாக முதன்முறையாக 43 வயது நிரம்பிய பெண்ணுக்குச் செலுத்தப்பட்டது. அதன் முடிவுக்காக உலகமே காத்துக்கொண்டிருக்கிறது.

கொரோனா வைரஸ் தொற்று உலகெங்கும் வேகமாகப் பரவி வருகிறது. இதுவரை சுமார் ஒரு லட்சத்து 75 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். 7 ஆயிரத்து 500ஐ உயிரிழப்பு நெருங்குகின்றது. இந்த நிலையில் அமெரிக்க





ஆய்வாளர்கள் கண்டுபிடித்த தடுப்பூசி நோயாளியொருவருக்கு நேற்றுச் செலுத்தப்பட்டுள்ளது. அதன் முடிவை உலக மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துள்ளனர். (ம)



# போனால் வேலை வந்தால் வீடு!

## செக் அரசு 'செக்'

பராகுவே, மார்ச் 18

பொதுமக்கள் அனைவரும் 'போனால் வேலை - வந்தால் வீடு' என்ற கொள்கைக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது செக்குடியரசு.

கொரோனாவின் தாக்கம் ஐரோப்பாவில் மிக அதிகமாக உணரத் தொடங்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே தனது மக்களுக்கு இவ்வாறான கட்டளையை பிறப்பித்துள்ளது செக்குடியரசு. செக் குடியரசின் பிரதமர் ஆன்த்ரேஜ் பாபிஸ் தன் நாட்டு மக்களுக்கு விதித்துள்ள கட்டுப்பாடுகள் குறித்து செய்தியாளர்களிடம் நேற்றுத் தெரிவித்ததாவது:

'செக் நாட்டில் இதுவரை 293 பேருக்கு கொரோனா வைரஸ் நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதுவரை உயிரிழப்புகள் எதுவுமில்லை என்பது ஆறுதல் என்றாலும் மக்கள் முன்னெச்சரிக்கையோடு நடந்துகொள்ள வேண்டுமென அரசு விரும்புகிறது.

செக் மக்கள் வேலைக்குச் செல்ல வேண்டும், முடிந்ததும் வீடு திரும்ப வேண்டும். இதை மட்டும் செய்தால் போதுமானது. மேலும், அவசியத் தேவைகளின் பொருட்டு ஷொப்பிங் செல்லவும், அவர்களது குடும்பத்தினரையோ அல்லது ஒரு மருத்துவரையோ பார்க்க, தங்கள் செல்லப் பிராணிகளைக் கவனித்துக்கொள்ள, பெற்றோல் வாங்க அல்லது இயற்கையுடன் நேரத்தைச் செலவிட மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள். இந்தக் கட்டுப்பாடு மார்ச் 24ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும்' - என்றார். (ம)

# ரஷ்ய அதிபர் தேர்தல் சட்டத்துக்கு ஒப்புதல்!



மொஸ்கோ, மார்ச் 18

ரஷ்ய அதிபர் தேர்தலில் அடுத்த இரு தடவைகளுக்குப் போட்டியிடக்கூடிய வகையில் மேற்கொள்ளப்பட்ட சட்டதிருத்தத்துக்கு அந்த நாட்டு அரசமைப்பு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

ரஷ்யாவில் தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் சாசன சட்டத்தின்படி தொடர்ந்து இரண்டு முறைக்கு மேல் ஒருவர் அதிபர் தேர்தலில் போட்டியிட முடியாது. இதனால், 2024ஆம் ஆண்டு நடைபெற உள்ள தேர்தலில் புடின் போட்டியிட முடியாத சூழல் இருந்து வந்தது. இந்த நிலையில், ஆளும் ஐக்கிய ரஷ்யக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வலண்டினா அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்கான சட்டத்தை மீண்டும் புதுப்பிக்கவேண்டும் என்ற பிரேரணையை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். இந்த பிரேரணையின்படி பழைய நடைமுறைகள் அழிக்கப்பட்டு அதிபர் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கான சட்டம் மீண்டும் முதலில் இருந்தே நடைமுறைக்கு வரும். இந்தச் சட்டத் திருத்தத்துக்கு ரஷ்ய அரசமைப்பு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (ம)

# இஸ்ரேல் பிரதமருக்கு கொரோனா சோதனை



டெல்அவிவ், மார்ச் 18

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவுக்கு விரைவில் கொரோனா சோதனை நடத்தப்படவுள்ளது என்று இஸ்ரேலிய பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலில் 213 பேருக்கு கொரோனா சோதனை உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்தே இஸ்ரேலியப் பிரதமருக்கு கொரோனா சோதனை நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# நல்லூருக்கு கதவடைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

நல்லூர் ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், ஆலய வாயில் இரும்புக் கம்பியினாலான கதவால் பூட்டப்பட்டுள்ளது.

உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா இலங்கையிலும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. அந்த நிலையில் கொரோனா பாதிப்பிலிருந்து பக்தர்களைப் பாதுகாக்கும் முகமாக, நல்லூர் ஆலயத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க-37)

## நாட்டை...

மாட்டார்கள். எனவே 'கொரோனா' வைரஸ் அச்சம் காரணமாக ஒருபோதும் நாட்டை முடக்கமாட்டேன்" என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

பிரதமர், இராணுவத் தளபதி, பாதுகாப்புச் செயலாளர், பதில் பொலிஸ்மா அதிபர், சுகாதார அமைச்சர், விஷேட மருத்துவ நிபுணர்கள், மற்றும் தொழிற்துறை வல்லுநர்கள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

அதன்போது ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா தொற்று தொடர்பில் அரசு எடுக்கும் தீர்மானங்கள் மக்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டுள்ளது. ஆனால் அன்றாடம் கூலி தொழில் செய்து வாழும் நடுத்தர மக்கள் ஒருபுறம் பாதிக்கப்படுகின்றார்கள். இவர்களுக்கு நிவாரணம் வழங்குவது அவசியம் என்று சுகாதார அமைச்சர் வலியுத்தினார்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு தொடர்புடைய தரப்பினருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன். அரச அதிகாரிகள் கடமைகளைச் சரிவரச் செய்வது அவசியமாகும் என்றார்.

மார்ச் மாதம் முதலாம் திகதியிலிருந்து 10ஆம் திகதி வரை தென்கொரியா, இத்தாலி மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து 3ஆயிரம் பேர் நாட்டுக்குள் வந்துள்ளார்கள். இவர்களில் 1500பேர் இதுவரையில் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவலுக்கு அமைய அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள் தொடர்பில் அறிவிக்க பொதுமக்கள் மத்தியில் 119 என்ற தொலைப்பேசி இலக்கத்தை அறிமுகம் செய்தோம். இதுவரையில் சுமார் 400க்கும் அதிகமான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

அதற்கு ஜனாதிபதி, அந்த 3ஆயிரம் பேர் தொடர்பிலும் அதீத கவனம் செலுத்த வேண்டும். அடையாளப்படுத்தப்பட்டவர்களை அவர்களின் வீடுகளிலேயே தனிமைப்படுத்தி மருத்துவ கண்காணிப்புக்கு உட்படுத்துங்கள். பாதுகாப்புக்கு ஒரு பொலிஸாரை ஈடுப்படுத்துங்கள். கடமையில் ஈடுபடும் போது அரச அதிகாரிகளும் பொறுப்புடனும், பொறுமையாகவும் செயற்படுங்கள். என அறிவுறுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தென்கொரியா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளிலிருந்து வந்தவர்கள் பலர் புத்தளம் பிரதேசத்தில் உள்ளார்கள். தற்போது அடையாளப்படுத்தப்பட்ட ஒரு சில பிரதேசங்களை முடக்குவது தொடர்பில் கவனம் செலுத்த முடியுமா? என்று ஒரு மருத்துவர் கேள்வியெழுப்பினார்.

வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் சுகாதார ஆலோசனைகளைப் புறக்கணித்தால் இவ்வாறு முடக்குவதுபற்றிய எண்ணம் முன்வைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்போது மேல்மாகாண ஆளுநர், நகரங்கள்ள முடக்குவதால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். ஆனால், அது மாறுப்பட்ட பிரச்சினையை ஏற்படுத்தும். பொது மக்கள் தற்போது பொறுப்புடன் செயற்பட வேண்டும். சுயமாகவே தங்களை பரிசோதனை செய்து கொள்ள முன்வர வேண்டும். அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமாகும். தேவையற்ற விதத்தில் ஒன்றுகூடுவதை முதலில் தவிர்த்து பாதுகாப்பு நடவடிக்கைகளை அவரவர் எடுத்துக் கொள்ளவேண்டும்- என்றார். (து-22)

## 86 ரயில்...

இதன்பிரகாரம் நேற்றிலிருந்து நாளை வியாழக்கிழமை வரை 86 ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில், பிரதான ரயில் மார்க்கத்தின் 34 ரயில் சேவைகள், சிலாபம் மார்க்கத்தின் 14 ரயில் சேவைகள், கரையோர மார்க்கத்தின் 22 ரயில் சேவைகள், களனி வழி மார்க்கத்தின் 12 ரயில் சேவைகள் மற்றும் வடக்கு மார்க்கத்தின் 4 ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. குறித்த மார்க்கங்களில் நாளாந்தம் 370 ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ரயில் போக்குவரத்துக்கான பயணச்சீட்டு விநியோகம் மற்றும் பொதிகளை ஏற்றுக்கொள்ளுதல் நேற்று முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (து-22)

## கடன்களை...

நடவடிக்கைகளை 6 மாதங்களுக்கு நிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, நேற்று நள்ளிரவு தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் பருப்பு ஒரு கிலோக்கிராம் 65 ரூபாவாகவும், ரின் மீன் 100 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பல நிவாரணங்கள் எதிர்வரும் நாள்களில் அறிவிப்பதாகவும் ஜனாதிபதி வாக்குறுதியளித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் விடுமுறை அறிவிக்கப்பட்ட போதிலும் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் வழமை போன்றே செயற்படும். வங்கி, பொதுப் போக்குவரத்து சேவைகளில் எந்தச் சிக்கல்களும் இருக்காது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தவிர, 'கொரோனா' ரைவஸ் தொற்று அச்சம் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த அறிவிப்பை அவர் விடுத்துள்ளார். (து-22)

## 43...

இதன்படி இலங்கையில் 'கொரோனா' தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 28 இலிருந்து 43 ஆக அதிகரித்துள்ளது.

புதிதாகத் தொற்றுக்கு உள்ளானவர்கள் என்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களில் நாட்டில் முதலாவதாக 'கொரோனா' வைரஸ் தொற்றுக்குள்ளான சுற்றுலா வழிகாட்டியின் மனைவியும் அடங்குகின்றார். இவர்களின் 13 வயது மகளும் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார் என்பது நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

தந்தை, தாய், மகள் மூவரும் கொழும்பு, அங்கொடை தேசிய தொற்று நோயியல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தந்தையின் உடல்நிலை தேறி வருகின்றது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறினார்.

இதேவேளை, தனிமைப்படுத்திக் கண்காணிக்கும்16 மத்திய நிலையங்களினூடாக 2 ஆயிரத்து 250க்கும் மேற்பட்டோர் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் என்று 'கொரோனா' வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியான. லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். (து-22)

## யாழில்...

டனர். எனினும், அவர்களுக்கு அவ்வாறான தொற்று இல்லை என்பது தெரிய வந்தது என்று மருத்துவமனைத் தரப்புத் தெரிவித்தது.

லண்டனிலிருந்து வந்த யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியைச் சேர்ந்த ஒரு பெண் சந்தேகத்தில் அவருடைய உறவிகர்களால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் ராணுவச் சிப்பாய் ஒருவரும் 'கொரோனா' தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இவர்கள் இவருக்கும் அவ்வாறான தொற்று இல்லை என்று என்று போதனா மருத்துவமனைத் தரப்புத் தெரிவித்தது.

இதேவேளை, வவுனியாவைச் சேர்ந்த ஒருவர் 'கொறொனா' தொற்றுக்கு ஆளாகியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் வவுனியா மருத்துவமனையிலிருந்து யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு நேற்றிரவு மாற்றவுள்ளோம் என்று வவுனியா மருத்துவமனைத் தரப்புத் தெரிவித்தது.

'கொரோனா' தொற்றுக்கு உள்ளானவர்கள் என்று யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் இதுவரை எவருமே அடையாளங்காணப்படவில்லை என்றும் யாழ்ப்பாண போதனா மருத்துவமனைத் தரப்புத் தெரிவித்தது. (து-110)

## அம்பிகா...

கொழும்பில் இருந்து மானிப்பாய் தொகுதியில் களமிறக்கப்பட்ட பெண் வேட்பாளர் அம்பிகா சற்குணநாதனுக்கு எதிராகத் தமிழரசுக் கட்சியின் மகளிர் அணியினர் போர்க்கொடி தூக்கியிருந்தனர். இதையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் பட்டியலிலிருந்து அம்பிகாவின் பெயர் நீக்கப்பட்டுள்ளது. அவரைத் தேசியப் பட்டியல் மூலம் உள்வாங்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் பட்டியலில் அம்பிகாவின் இடத்துக்கு யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் இம்மானுவேல் ஆனல்ட் உள்வாங்கப்பட்டுள்ளார்.

இந்தத் தகவலை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா நேற்று நண்பகல் உறுதிப்படுத்தினார்.

அந்தவகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட வேட்பாளர்களாக மாவை.சோ.சேனாதிராஜா, ஈ.சரவணபவன், சி.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், இ.ஆனல்ட், ரவிராஜ் சசிகலா, வே.தபேந்திரன், த.சித்தார்த்தன், பா.கஜதீபன், கு.சுரேந்திரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (எ-22)

## ஏழு...

சுயேச்சைக் குழுக்களும் இன்றைய தினம் வேட்பு மனுத் தாக்கல் செய்யவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காலை 10 மணிக்கு வேட்புமனுத் தாக்கல் செய்யவுள்ளது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா வேட்புமனுவைத் தாக்கல் செய்யவுள்ளார்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி காலை 10.30 மணிக்கு வேட்புமனுத் தாக்கல் செய்யவுள்ளது. அதன் தலைவர் விக்னேஸ்வரன் வேட்புமனுவைத் தாக்கல் செய்யவுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி காலை 10 மணியளவில் வேட்பு மனுத் தாக்கல் செய்யவுள்ளது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வேட்புமனுவைத் தாக்கல் செய்யவுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி காலை 10 மணிக்கு அந்தக் கட்சியின் முதன்மை வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் வேட்புமனுவைத் தாக்கல் செய்யவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியும் வேட்புமனுத் தாக்கல் செய்யவுள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுன, அதன் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் ரஜீவ் தலைமையில் வேட்புமனுத் தாக்கல் செய்யவுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, அதன் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் தலைமையில் வேட்பு மனுத் தாக்கல் செய்யவுள்ளது.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் தலைமையிலான சுயேச்சைக் குழுவும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையிலான சுயேச்சைக் குழுவும் இன்றைய தினம் வேட்புமனுத் தாக்கல் செய்யவுள்ளன. (ஒ,5)

## ரணில்...


டியிடவுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் அந்தக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தலைமையிலான அணி போட்டியிடவுள்ளது.


இதேவேளை சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசி சின்னத்தில் யாழ்.மாவட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் உமாச்சந்திரா பிரகாஷ் போட்டியிடவுள்ளார். (ஒ,5,111)

## கார்மேல்போய்ஸ் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், மார்ச் 18
அரியாலை சுதேசியக் கொண்டாட்டத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட மென்பந்துத் துடுப்பாட்டத்தில் கார்மேல் போய்ஸ் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் கார்மேல் போய்ஸ் அணியை எதிர்த்து கொலின்ஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கார்மேல் போய்ஸ் அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய கொலின்ஸ் அணி 5 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 38 ஓட்டங்களைப்பெற்றது. கோகுலன்12ஓட்டங்களையும், பிரசன்னா 11 ஓட்டங்களையும், டெஸ்மன் 6



ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சுரேந்திரன், தனேந்திரன் ஆகியோர் தலா இலக்கை வீழ்த்தினர்.
39 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கார்மேல் போய்ஸ்விளையாட்டுக் கழக அணி 3.2 பந்துப்பரிமாற்றங்களில் இலக்குகள் இழப்பின்றி வெற்றிபெற்றது. (ம-23)



### கரப்பந்தாட்டப் போட்டியில்

# ஆவரங்கால் மகாஜனா வலயச் சம்பியனானது

கரணவாய், மார்ச் 18
யாழ். வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட போட்டியில் ஆண்களுக்கான 16 வயதுப் பிரிவில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம் சம்பியனானது.
யாழ். வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன.
இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அணியும் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணியும் மோதின. மூன்று செற்களைக்கொண்ட இந்தச் சுற்றுப் போட்டியில் 25:19, 25:15 என்ற புள்ளிகளைப் பெற்று 2:0 நேர் செற்கணக்கில் வெற்றி பெற்று ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம் வலயச் சம்பியனானது.
(108)

## சென். நீக்கிலஸ் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 18
யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடைபெறும் மகிந்தன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். நீக்கிலஸ் அணி வெற்றி பெற்றது.
அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலையை மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நீக்கிலஸ் அணியை எதிர்த்து கலைவாணி அணி மோதியது. 6:0 என்ற கோல் கணக்கில் நீக்கிலஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## அன்ரனிஸ் அபாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 18
யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மகிதரனின் ஆதரவுடன் நடைபெறும் கால்பந்தாட்டத் தொடரில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலையை மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற முதலாவது காலிறுதியாட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் சென். றொக்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

### பெண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில்

# யாழ். மாவட்ட அணி வாகை

யாழ்ப்பாணம், மார்ச் 18
இலங்கை கிரிக்கெட் சங்கத்தினால் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 23 வயதுப் பிரிவு பெண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் யாழ்ப்பாண மாவட்ட அணி வெற்றி பெற்றது.
நேற்றுமுன்தினம் கிளிநொச்சி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட இணைந்த அணியை எதிர்த்து யாழ்ப்பாண மாவட்ட அணி மோதியது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட இணைந்த மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 32.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் அதிகபட்சமாக முகிழ்நிலா 21 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் மதுரிக்கா, தேவகி தலா 3 இலக்குகளையும், சாணு 3 இலக்கையும் கைப்பற்றினர்.
தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண மாவட்ட மகளிர் அணி 31 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 126 ஓட்டங்களை பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது. அணி சார்பில் தயாஜினி 32 ஓட்டங்களையும், மதுரிக்கா ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும், அபிராமி ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் கலையரசி 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.



(23)

## மாட்டு வண்டிச் சவாரி





அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 80ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட மாட்டு வண்டிச் சவாரி கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அராலி மேற்கு சவாரித் திடலில் இடம்பெற்றது.
இதில் பெரும் எண்ணிக்கையான சவாரி வண்டில்கள் கலந்து கொண்டதுடன் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (23)




# ராஞ்சி புறப்பட்டார் டோனி

புதுடெல்லி, மார்ச் 18

ஐ.பி.எல் தொடருக்காக சென்னையில் முகாமிட்டிருந்த டோனி, ஐ.பி.எல் கைவிடப்பட்டதையடுத்து ராஞ்சி புறப்பட்டுச் சென்றார்.

இந்திய அணியில் இருந்து புறக்கணிக்கப்பட்டுள்ள டோனி ஐ.பி.எல் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸின் தலைவராகச் செயற்படவுள்ளார். எதிர்வரும் 29ஆம் திகதி ஐ.பி.எல் நடப்பதாயிருந்தது. இதற்காக கடந்த முதலாம் திகதி சென்னைக்கு வருகைதந்த டோனி கடந்த 2ஆம் திகதி முதல் பயிற்சியில் ஈடுபட்டுவந்தார். கொரோனா அச்சத்தால் ஐ.பி.எல் தொடர் தள்ளிவைக்கப்பட்டதை அடுத்து ராஞ்சி புறப்பட்டார் டோனி. (ம)

# ஜப்னா காரத்தே பாடசாலை மாணவர்கள் பதக்க வேட்டை

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாண மாவட்ட பிரதேசங்களுக்கு இடையிலான ஆண், பெண் இரு பாலருக்குமான காரத்தே தொடரில் ஜப்னா காரத்தே பாடசாலை சார்பாக பங்குபற்றிய மாணவர்கள் 2தங்கம், 5வெள்ளி, 7 வெண்கலப்பதக்கம் வென்றனர். பெண்களுக்கான குமித்தே போட்டியில் திலக்சனா 67 கிலோ எடைப் பிரிவில் தங்கப் பதக்கம், பிரதீபா 67 கிலோ எடைப் பிரிவில் வெள்ளிப் பதக்கம், சுதர்சினி 67 கிலோ எடைப்பிரிவு வெள்ளிப் பதக்கம், தர்சிகா 55 கிலோ எடைப் பிரிவில் தங்கப் பதக்கம், நிசாங்கினி 55 கிலோ எடைப் பிரிவு வெள்ளிப் பதக்கம், சனா 50 கிலோ எடைப் பிரிவில் வெள்ளிப் பதக்கம், யதுசா 50 கிலோ எடைப் பிரிவு வெண்கலப் பதக்கம், பிரியா 45 கிலோ எடைப் பிரிவு வெண்கலப் பதக்கம், வித்யா 45 கிலோ எடைப் பிரிவு வெண்கலப் பதக்கங்களையும், ஆண்களுக்கான குமித்தே போட்டியில் ஆதித்தின் 67 கிலோ எடைப் பிரிவு வெள்ளிப்பதக்கம், சிறீராம் 60 கிலோ எடைப் பிரிவில் வெண்கலப் பதக்கம், துஷி 84 கிலோ எடைப் பிரிவில் வெண்கலப் பதக்கம், றேமஜன் 85க்கு மேற்பட்ட பிரிவில் வெண்கலப் பதக்கம், அருள்விதுசன் 68 கிலோ எடைப்பிரிவில் வெண்கலப்பதக்கங்களையும் கைப்பற்றினர். (23-222)





## கொரோனா அச்சம்

# மோசமான சூழல் விரைவில் மாறும்

## நம்பிக்கையூட்டுகிறார் மெஸ்ஸி

கொரோனாவால் ஏற்பட்டுள்ள மோசமான சூழல் விரைவில் மாறும் என்று நம்புவோம் இவ்வாறு தெரிவித்துள்ளார் ஆர்ஜென்ரீன அணியின் தலைவரான லயனல் மெஸ்ஸி.

கொரோனா தொடர்பில் மெஸ்ஸி தனது சமூக வலைத்தளத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

ஒவ்வொருவருக்கும் இது சிக்கலான காலகட்டம். கொரோனா பரவலால் நாம் கவலை அடைந்துள்ளோம். உடல் ஆரோக்கியமே எப்போதும் முதலில் முக்கியம். சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை வழங்கும் அறிவுறுத்தல்களை கட்டாயம் பின்பற்ற வேண்டும். இதன் மூலம்தான் நாம் கொரோனாவை எதிர்த்து போராட முடியும். நாம் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டிய நேரம் இது. வெளியில் செல்வதை தவிர்த்து வீட்டிலேயே இருங்கள். உங்களது குடும்பத்தினருடன் நேரத்தை உற்சாகமாக செலவிட அற்புதமான வாய்ப்பு இது. இத்தகைய வாய்ப்பு எப்போதும் கிடைக்காது. தற்போதைய மோசமான சூழல் விரைவில் மாறும் என்று நம்புகிறேன்' - என்றார். (ம)






# மக்ஸ்வெல்லுக்கு இந்திய வம்சாவளி பெண்ணுடன் நிச்சயதார்த்தம்

இந்திய வம்சாவளி பெண்ணுக்கும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மக்ஸ்வெலுக்கும், மெல்போர்னில் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் மக்ஸ்வெல் இந்திய வம்சாவளியை சேர்ந்த ஆஸ்திரேலிய பெண்ணான வினிராமன் என்பவரை காதலிப்பதாகவும், இருவரும் விரைவில் திருமணம் செய்து கொள்வார்கள் என்று தகவல் வெளியாகி இருந்தது.

இந்த நிலையில் மக்ஸ்வெலுக்கும், வினிராமனுக்கும் இந்திய பாரம்பரிய முறைப்படி மெல்போர்னில் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது.

இந்திய பாரம்பரிய உடையில் இருக்கும் இருவரின் புகைப்படங்களும் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. திருமண திகதி எப்போது என்று வெளிப்படுத்தவில்லை.

## ரி20 ஆட்டத்தில் 200


# ரோகித் சர்மாவால் மட்டுமே சாத்தியம்

## ஹாக் தெரிவிப்பு

20 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டத்தில் ஒரு வீரரால் இரட்டைச் சதம் பெற முடியுமென்றால் அது இந்திய வீரர் ரோகித் சர்மாவால்தான் இயலும் இவ்வாறு தெரிவித்தார் ஆஸ்திரேலியாவின் முன்னாள் வீரர் பிரட் ஹாக்.

இது தொடர்பில் ஹாக் மேலும் தெரிவித்ததாவது:

என்னைப் பொறுத்தவரை தற்போதைய வீரர்களில் 20 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டங்களில் இரட்டைசதம் அடிக்கும் தகுதி படைத்த வீரர் இந்தியாவின் ரோகித் சர்மா மட்டும்தான். 20 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டங்களில் சிறந்த ஸ்டிரைக் ரேட் வைத்துள்ளார். எல்லா நேரங்களிலும் பெரிய ஷொட்கள் அடிப்பதில் வல்லவராக இருக்கிறார். பலவிதமான ஷொட்கள் மூலம் மைதானத்தின் எல்லா புறங்களிலும் சிக்சர், பவுண்டரிகளை விளாசுகிறார். - என்றார். (ம)



திருமண அழைப்பிதழ்கள்
நவீன அழகிய, இரசிக்கத்தக்க அழைப்பிதழ்கள்
மிகக் குறைந்த விலைகளில்
கிரிகணன்

ஜி-7 தலைவர்கள் ஒத்துழைப்புடன்

# ஒலிம்பிக் போட்டிகள் திட்டமிட்ட படி நடக்கும்

ஜப்பான் பிரதமர் தெரிவிப்பு



ஜி-7 நாட்டுத் தலைவர்கள் 2020 ஒலிம்பிக் போட்டிகளை நடத்த ஒப்புக் கொண்டுள்ளதாக ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே தெரிவித்துள்ளார்.

வேகமாக பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்று பல நாடுகளில் வணிக மற்றும் சமூக நடவடிக்கைகளை சீர் குலைத்துள்ளதுடன், நிதிச் சந்தைகளிலும் சரிவை ஏற்படுத்தியுள்ளது.


இதனால் திட்டமிட்டபடி டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளை நடத்த முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ள நிலையிலேயே அவர் இந்த கருத்தைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று நோயை பற்றி கலந்துரையாடுவதற்காக ஜி-7 நாட்டுத் தலைவர்களின் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

இதன்போதே ஜி-7 நாட்டுத் தலைவர்கள் ஒலிம்பிக் போட்டிகளை பாதுகாப்பாக நடத்துவதற்கு தம்மாலான அனைத்து வித ஒத்துழைப்புக்களையும் தருவதாக தன்னிடம் கூறியதாக ஜப்பான் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் கொரோனவுக்கு எதிரான தடுப்பூசியை உருவாக்க ஒத்துழைப்பு வழங்க அழைப்பு விடுத்தாகவும், கடுமையான பொருளாதார தாக்கத்தை சமாளிக்க நடவடிக்கை எடுக்க உறுப்பு நாடுகள் ஒப்புக் கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளை ஜூலை 24 வெள்ளிக்கிழமை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



கொரோனா குறித்து

# போலி செய்திகளை பரப்பாதீர்கள் அலெக்ஸ் ஹேல்ஸ் காட்டம்

எனக்கு கொரோனா வைரஸ் தாக்கப்பட்டுள்ளது என்று பரப்பப்படும் பொய் செய்திகளை உடனடியாக நிறுத்துங்கள் என்று அலெக்ஸ் ஹேல்ஸ் காட்டமாக தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இதனால் கடந்த வாரமே உலகில் உள்ள அனைத்து விளையாட்டுகளும் பிற்போடப்பட்டன.

ஆனால் பாகிஸ்தான் சுப்பர் லீக் ஆட்டங்கள் மட்டும் ரசிகர்கள் இன்றி மூடிய மைதானங்களில் நடைபெற்றன. நேற்று முன்தினம் வரை போட்டி நடைபெற்றது. இரண்டு அரையிறுதி போட்டிகள் நேற்றும், இறுதிப் போட்டி இன்றும் நடைபெறுவதாக இருந்தது.

இந்த நிலையில் நேற்று போட்டிகள் நிறுத்தப்படுவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்தது. இங்கிலாந்தை சேர்ந்த அதிரடி துடுப்பாட்ட வீரர் அலெக் ஹெல்ஸ் கராச்சி கிங்ஸ் அணிக்காக விளையாடி வந்தார்.

ரி-20 தொடரில் விளையாடிய வெளிநாட்டு வீரர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. இதனால்தான் போட்டி நிறுத்தப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவீரர் அலெக்ஸ்ஹேல்ஸ் என்று கிரிக்கெட் வர்ணனையாளர் ரமீஸ் ராஜா தெரிவித்தார். அதேபோல் கல்ஃப் நியூஸ் செய்தி வெளியிட்டது.

இந்த நிலையில் இதுபோன்ற போலிச் செய்திகளை பரப்புவதை நிறுத்துங்கள் என அலெக்ஸ்ஹேல்ஸ்தெரிவித்தார். விவகாரம் பிரச்சினையான பின்னர், அலெக்ஸ் ஹேல்ஸ் பரிசோதனை செய்து கொள்ளவில்லை. தன்னைத்தானே தனிமைப் படுத்தி கொண்டார் என ரமீஸ் ராஜா தெரிவித்தார். கல்ஃப் நியூஸ் செய்தியாளர் டுவிட்டரை அழித்துள்ளார். ஆனால் முன்னதாகவே எடுக்கப்பட்ட ஸ்கிரீன் ஷாட் வேகமாக பரவி வருகிறது.

பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் விளையாடிய அலெக்ஸ் ஹேல்ஸ், ஜேசன் ராய், டைமல் மில்ஸ், லியம் டவ்சன், லியம் லிவிங்ஸ்டோன், லெவிஸ் கிரேகோரி, ஜேம்ஸ் வின்ஸ், ஆகியோர் அவர்களது வீட்டில் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
➢ அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.
www.ambafrancelk.org
021 222 8093 17, Kandy Road, Jaffna

கொரோனா வைரஸ் தாக்கம்

# அட்லெடிகோ போர்டா அல்டா கால்பந்து பயிற்சியாளர் பலி



கொரோனா வைரஸுக்கு ஸ்பெயினை சேர்ந்த கால்பந்து பயிற்சியாளர் பிரான்சிஸ்கோ கார்சியா பலியாகி உள்ளார்.

சீனாவில் உருவான கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. சீனாவுக்கு அடுத்தபடியாக இத்தாலி, ஈரான், ஸ்பெயின் நாடுகளில் அதிக அளவில் உயிர் இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில் கொரோனாச் வைரசுக்கு ஸ்பெயினை சேர்ந்த கால்பந்து பயிற்சியாளர் பலியாகி உள்ளார்.

ஸ்பெயினை சேர்ந்த 21வயதான பிரான்சிஸ்கோ கார்சியா அங்குள்ள அட்லெடிகோ போர்டா அல்டா கழகத்தின் பயிற்சியாளராக இருந்து வருகிறார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு அவர் "கோவிட்- 19" எனும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டார். முழுமையாக பாதிக்கப்பட்ட நிலையில் அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். சிகிச்சை பயன் அளிக்காமல் பலியானார்.

இந்த வைரசுக்கு பலியான இளம் வயதானவர் இவர் ஆவார். அவரது மறைவுக்கு அட்லெடிகோ போர்டா அல்டா கழகம் இரங்கல் தெரிவித்துள்ளது. இது மிகவும் துரதிர்ஷ்ட வசமானது என்று அந்த கழகம் தனது அனுதாபத்தை தெரிவித்துள்ளது.

ஸ்பெயினில் உள்ள மற்றொரு கால்பந்து கழகமான வலன்சியாவை சேர்ந்த கேரி கொரோனாவால் பாதிக்கப்பட்டு இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையை இழுத்து மூடுவதே சிறப்பானது

மகேல கருத்து

கொரோனா வைரஸ் தாக்கம் பரவும் வேகம் அதிகரித்துள்ளமையால் இலங்கையை இழுத்து மூடுவதே சிறந்தது என இலங்கை அணியின் முன்னாள் வீரர் மகேல ஜெயவர்த்தனே தெரிவித்துள்ளார்.

அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் தெரிவிக்கையில்;

இலங்கையை இழுத்து மூடுவதே அர்த்தமுள்ள செயல் என நான் கருதுகின்றேன் - என்றார்.

# இழுத்து மூடப்பட்டது பிசிசிஐ தலைமையகம்

கொரோனா வைரஸ் தொற்று பீதியால் மும்பையில் உள்ள தலைமையத்தை மூடியது இந்திய கிரிக்கெட் சபை.

உலகளவில் கொரோனா வைரஸ் மிகப் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவில் இந்த வைரஸால் பாதிப்படைந்தோரின் எண்ணிக்கை 100ஐ தாண்டியுள்ளது. இதனால் அனைத்து மாநிலங்களும் உச்சக்கட்ட முன்னெச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இதனால் மும்பையில் உள்ள தலைமையகத்தை மூடியுள்ளது இந்திய கிரிக்கெட் சபை. மேலும், ஊழியர்கள் வேலைகளை வீட்டில் இருந்து கவனித்துக் கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளது.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.